REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2023 ஜனவரி 31 செவ்வாய்க்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

1932 - 2022

வரு. 91 இல. 26 | Tuesday 31, January, 2023 | 16பக்கங்கள் | 50/-

வடக்கில் சட்டத்தை மீறுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை

வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா அதிரடி

வடக்கு மக்களின் இயல்பு வாழ்க்கையை குழப்பும் வகையில் சட்டத்தை மீறும் ஒவ்வொரு நபரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்டத்தில் அண்மைய நாட்களில் இடம்பெற்ற குற்றச்செயல்கள் தொடர்பில் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கை தொடர்பில் நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு மக்களின் இயல்பு வாழ்க்கையை 06

75ஆவது சுதந்திர தின விழா

அரச நிறுவனங்களில் ஒருவார காலம் தேசிய கொடி

பொது நிர்வாக அமைச்சு சுற்றறிக்கை

75ஆவது சுதந்திர தின விழாவையொட்டி ஒரு வார காலத்துக்கு அரசு நிறுவனங்கள் இயங்கும் அனைத்துக் கட்டடங்களிலும் தேசியக் கொடியை ஏற்ற அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி பெப்ரவரி 4ஆம் திகதி 75ஆவது சுதந்திர தின விழாவின் சிறப்பு கருதி நாளை முதலாம் திகதி முதல் 7ஆம் திகதி வரை 06

தேர்தல் ஆணைக்குழு

அச்சக திணைக்களத்திற்கு 18 மில்லியன் ரூபா நிலுவை

ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க முடியாத நிலையில் அச்சக திணைக்களம் !

திறைசேரியிடம் கோரிக்கை விடுத்திருப்பதாக இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவிப்பு

தேர்தல் ஆணைக்குழு அரசாங்க அச்சகத் திணைக்களத்துக்கு 18 மில்லியன் ரூபா நிலுவைப் பணத்தை வழங்க வேண்டியுள்ளதாக ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார். கடந்த தேர்தல் உள்ளிட்ட வேறு நடவடிக்கைகளின் போது அரசாங்க அச்சகத்திணைக்களம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கியுள்ள சேவைக்காக இந்தப் பணத்தை வழங்க வேண்டியுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். 06

பொருளாதார ரீதியான தீர்வே முழு நாட்டுக்கும் இன்று தேவை

மேடைப்பேச்சுக்களால் எவ்வித பலனுமில்லை

லோரன்ஸ் செல்வநாயகம்

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீள கட்டியெழுப்ப மேடைகளில் மேற்கொள்ளப்படும் பேச்சுக்கள் மூலம் முடியாதென்றும் பொருளாதார ரீதியான தீர்வின் மூலமே அதற்குத் தீர்வுகாண முடியுமெனவும் போக்குவரத்து ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் தற்போது நாடு என்ற வகையில் மேற்கொள்ளவேண்டிய முக்கிய செயற்பாடானது வெளிநாட்டு அந்நிய செலாவணி மற்றும் முதலீடுகளை நாட்டுக்கு அதிகளவில் பெற்றுக்கொள்ள நடவடிக்கையெடுப்பதே என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான திருகோணமலை குச்சவெளியிலுள்ள 06

சுதந்திர தினத்தை பகிஷ்கரிக்க தமிழ் கூட்டமைப்பு முடிவு

கட்சியின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

இம்முறை சுதந்திர தினத்தை பகிஷ்கரிக்கப் போவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் சுதந்திரம் இதுவரை முறையாக கிடைக்காமை காரணமாகவே இம்முறை சுதந்திர தின நிகழ்வுகளை தமிழ் தேசிய கூட்டமைப்பு பகிஷ்கரிக்கப் போவதாகவும், 06

நாட்டின் மீதான வங்குரோத்து 'ஸ்டிக்கர்' விரைவில் நீக்கப்படும்

எஞ்சியுள்ள பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

இலங்கை மீது தற்போது ஒட்டப்பட்டுள்ள வங்குரோத்து ஸ்டிக்கரை குறுகிய காலத்தில் எம்மால் கழற்றி விட முடியுமென தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சில பிரச்சினைகளுக்கு 06

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டெழ IMF இன் உதவியே ஒரே வழி

அதற்கு சில அர்ப்பணிப்புகளும் சுமைகளும் தவிர்க்க முடியாதவை

லோரன்ஸ் செல்வநாயகம்

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டெழ வேண்டுமானால் சர்வதேச நாணய நிதியம் தெரிவிக்கும் வழிகாட்டலுக்கிணங்க செயற்படுவதைத் தவிர வேறு மாற்றுவழி கிடையாது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை 06

சுவிட்சர்லாந்து விபத்தில் யாழ். வாசிகள் இருவர் பலி

தந்தையும் மகனும் பரிதாப மரணம்

சுவிட்சர்லாந்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழர்கள் இருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 06

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்

கண்காணிப்பு பணிகளுக்கு 04 அமைப்புகளுக்கு அனுமதி

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை கண்காணிக்க நான்கிற்கும் மேற்பட்ட அமைப்புகளுக்கு அனுமதி வழங்கப்படும் என தேசிய தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பெப்ரல், கபே, சி.எம்.இ.வி, போன்ற அமைப்புக்களுக்கு இம்முறை தேர்தலை கண்காணிப்பதற்கு அனுமதி வழங்கப்படும் என அதன் தலைவர் 06

கடவுச்சீட்டுகளை வழங்க 50 பிராந்திய அலுவலகங்கள்

நீண்டதூர பயணத்துக்கும் முற்றுப்புள்ளி

நாட்டில் கடவுச்சீட்டுகளை வழங்குவதற்காக 50 பிராந்திய நிலையங்களை நிறுவவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடவுச்சீட்டைப் பெறுவதற்கு அதிக எண்ணிக்கையிலான மக்கள் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளதை கருத்திற் 06

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சம்பவம்

குற்றவாளிகள் நிச்சயம் தண்டிக்கப்படுவது உறுதி

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகள் நிச்சயம் தண்டிக்கப்படுவது உறுதி. ஒருசிலர் திருடர்களுக்கு தண்டனை வழங்குவதாக கூறுகின்றபோதும், தண்டனை முறை என்னவென்று கூறவில்லையென்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் 06

தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் நீதியமைச்சரின் கருத்துக்கு

செல்வம் MP மறுப்பறிக்கை

03

கூட்டத்தொடர் நிறைவடைந்துள்ள நிலையில்

கோப், கோபா உள்ளிட்ட சுமார் 70 பாராளுமன்ற தெரிவுக் குழுக்கள் கலைப்பு

03

வெளிநாடு செல்வோர் 136 வீதத்தால் அதிகரிப்பு

6,000 தொழில் வல்லுநர்கள் வெளியேற்றம்

03

நாட்டில் டெங்கு நோய் அதி தீவிர நிலையில்

தொற்று நோயியல் பிரிவு தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மீண்டும் வரலாறு காணாத உயர்வை பதிவு செய்துள்ளதாக தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வருடத்தின் கடந்த சில நாட்களில் 4,387 டெங்கு நோயாளர்கள் 06

எமது பாதுகாப்பை உறுதி செய்யுங்கள்

ஜனாதிபதிக்கு புஞ்சிஹேவா கடிதம்

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜி புஞ்சிஹேவா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு விசேட கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு மரண 06

இந்தியாவிலிருந்து வருகை தந்து

சுற்றுலா துறையை ஊக்குவிக்கும் நடிகர்

இலங்கையில் சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் நோக்கில் இந்திய சினிமா துறையின் மிகவும் பிரபலமான வில்லன் என அழைக்கப்படும் ஆஷிஷ் வித்யார்த்தி பல்வேறு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

அண்மையில் இலங்கை 06

மின் கட்டணம் உயரின் பாண் விலையும் உயரும்

பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படுமானால் கண்டிப்பாக பாண் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளை அதிகரிக்க நேரும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது அதிகரிக்கப்பட்டுள்ள 06

50,000 ஆண்டுகளுக்கு பின்னர்

பூமிக்கு அருகே இன்று வரும் வால் நட்சத்திரம்

50,000 ஆண்டுகளுக்கு பின்னர் பூமிக்கு அருகே இன்று வரும் பச்சை வால் நட்சத்திரத்தை காண அரிய வாய்ப்பு கிட்டியுள்ளது.

முதன்முறையாக பூமியை நெருங்கும் பச்சை நிற வால் நட்சத்திரத்தை வானியலாளர்கள் சமீபத்தில் 06

இந்திய அரசின் அதி உயர் விருது பெற்ற எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர் சிலோன் லிமிட்டட் முகாமைத்துவப் பணிப்பாளர் குமார் நடேசனுக்கு நேற்று முன்தினம் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் பாராட்டு விழா ஒன்றை கொழும்பு தமிழ் சங்கத்தில் நடத்திய போது பிடிக்கப்பட்ட படங்கள்.

மலைதேச எழுச்சி இளைஞர் ஒன்றியத்தினால் சமத்துவ பொங்கல் விழா உடபுஸ்ஸலாவ எனிக் மேல் பிரிவு நூலக கட்டடத்தில் நடைபெற்றது. நிகழ்வில் கிராம அபிவிருத்தி சேவை அதிகாரி எ.சிவனேசன் மற்றும் உடபுஸ்ஸலாவ பொலிஸ் நிலைய பெண் அதிகாரி உள்ளிட்ட ஒன்றியத்தின் உறுப்பினர்கள் மற்றும் தோட்ட பொது மக்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர். படங்கள் ஆ.ரமேஸ்.

தமிழர் செவ்வியல் இசைப்பா வடிவங்கள் என்ற தமிழிசை பாடல் நூல் வெளியீட்டு விழா கொழும்பு தமிழ் சங்கத்தில் நடைபெற்ற போது, அந்த நூலின் ஆசிரியர்களான திரு, திருமதி கந்தசாமி தம்பதி நூலின் முதற் பிரதியை கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனுடன் இணைந்து புரவலர் ஹாஷிம் உமரிடம் வழங்குவதையும் ஏனைய நிகழ்வுகளையும் படத்தில் காணலாம்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஜனவரி 31 செவ்வாய்க்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 5
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

சிங்கள கலாசாரத்தை மேம்படுத்த அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிப்பு

ஜனாதிபதி ரணில் கலாசார அமைச்சர் விதுரவுக்கு ஆலோசனை

லோரன்ஸ் செல்வநாயகம்

சிங்கள கலாசார நிறுவனத்தை சிறப்பாக நடத்திச் செல்வது மற்றும் அதன் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் பொருத்தமான அமைச்சரவைப் பத்திரமொன்றை தயாரித்து அதனை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க நடவடிகை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புத்தசாசன சமய மற்றும் கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

சிங்கள கலாசார நிறுவனத்தின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடைபெற்றுள்ளது.

நாட்டின் கலாசார அடையாளத்தைப் பாதுகாக்கும் சிங்கள கலாசார நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பில் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளன. சிங்கள கலாசார நிறுவனத்தின் செயற்பாடுகளை சிறப்பாகப் பேணுவதற்காக கலாசார அமைச்சுக்கும் சிங்கள கலாசார நிறுவனத்துக்குமிடையில் ஒன்றிணைந்த குழுவொன்றை நியமிக்குமாறும் இதன்போது ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தை நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றுள்ளது. இதன்போது சிங்கள கலாசார நிறுவனத்தை பராமரிப்பது தொடர்பில் நிலவும் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் விரிவாக

06

13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த திகாம்பரம் கோரல்

தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டுகோள்

உள்ளூராட்சிமன்ற தேர்தலில் தனிப்பட்ட ரீதியில் மாற்றுக்கட்சிகளை விமர்சிக்காமல், வேலைத்திட்டங்களை முன்வைத்து பிரசாரத்தை முன்னெடுக்குமாறு கட்சி உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

அட்டனில் நேற்று (30) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசு பல வழிகளிலும் முயற்சித்து வருகின்றது. தோல்வி பயத்தாலேயே யானை மொட்டு கூட்டணி இவ்வாறு இழுத்தடிப்பு செய்ய பார்க்கின்றது. ஆனாலும் தேர்தலை ஒத்தி வைக்க முடியும் என நான் நம்பவில்லை.

தோல்வி பயத்தால் தேர்தலை பிற்போட முயற்சிக்கின்றது. ஆனால் தேர்தலை ஒத்திவைக்க முடியாது என நம்புகின்றோம்.

இந்த தேர்தலில் எமக்கான வெற்றிவாய்ப்பு பிரகாசமாக உள்ளது. களநிலவரம் மாறியுள்ளது. தேர்தலில் மாற்றுக் கட்சிகளை விமர்சிக்காமல், வேலைத்திட்டங்களை முன்வைத்து தெளிவுபடுத்தி பிரசாரத்தை முன்னெடுக்குமாறு கட்சி உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன். அதேவேளை, 13 ஆவது திருத்தச்சட்டம்

06

கூட்டத்தொடர் நிறைவடைந்துள்ள நிலையில்

கோப், கோபா உள்ளிட்ட சுமார் 70 பாராளுமன்ற தெரிவுக் குழுக்கள் கலைப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

பாராளுமன்ற கூட்டத்தொடர் நிறைவடைந்துள்ள நிலையில் கோப், கோபா உள்ளிட்ட சுமார் 70 பாராளுமன்ற தெரிவுக் குழுக்கள் கலைக்கப்பட்டுவிடும் என பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதற்கிணங்க 9ஆவது பாராளுமன்றத்தின் 4ஆவது சபை அமர்வு ஆரம்பமானதன் பின்னர் தெரிவுக் குழுக்கள் உருவாக்கப்பட்டு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை இதுவரை பாராளுமன்றத்தின் மூலம் கவனத்திற் கொள்ளப்படாத யோசனைகள் மட்டும் கேள்விகள் கூட்டத்தொடர் நிறைவுறுவதோடு ரத்துச் செய்யப்படும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கேள்விகள் மற்றும் யோசனைகளை மீள முன்வைத்து நிலையியற் கட்டளைக்கு இணங்க செயற்பட வேண்டும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் கூட்டத்தொடர் நிறைவு பெற்றாலும் பாராளுமன்ற இணைப்பு தெரிவுக் குழு, கண்காணிப்பு தெரிவுக் குழு ஆகியன உள்ளிட்ட சில தெரிவுக் குழுக்கள் கலைக்கப்படமாட்டாது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

9ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் 2020 ஆகஸ்ட் 20 முதல் 2021 டிசம்பர் 12 வரையும், 02ஆவது கூட்டத்தொடர் 2022 ஜனவரி 18ம் திகதி முதல் 2022 ஜூலை 28ம் திகதி வரை நடைபெற்றன.

அதேவேளை 9ஆவது பாராளுமன்றத்தின் 03ஆவது கூட்டத் தொடர் 2022 ஆகஸ்ட் 03ம் திகதி ஆரம்பமானதுடன் கடந்த 2023 ஜனவரி 27ம் திகதி கூட்டத்தொடர் நிறைவுபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு வருகை தந்துள்ள முஸ்லிம் லீக் கட்சியின் தூத்துக்குடி மாவட்ட தலைவர் பி. மீராஷா, மாவட்ட பொருளாளர் கே. மீராசா, ஊடகவியலாளர் திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது ஆகியோர் கடற்றொழில் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று (30) அவரது அமைச்சின் அலுவலகத்தில் வைத்து சந்தித்தனர். முஸ்லிம் கவுன்சில் தலைவரும், மீடியா போரத்தின் முன்னாள் தலைவருமான என்.எம். அமீனும் அருகில் காணப்படுகிறார். படம் திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது

முஸ்லிம் சமய, கலாசார திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள பைஸல் ஆப்தீன் நேற்று (30) தனது கடமைகளை திணைக்களத்தில் உள்ள அவரது பணிமனையில் பொறுப்பேற்றுக் கொண்டபோது எடுத்த படம். திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர்களான அன்வர் அலி, அலா அஹமத் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்களும் காணப்படுகின்றனர். (படம் : மொறட்டுவை மத்திய விசேட நிருபர்)

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலை துண்டுகளாக்கி எடுத்துச் செல்லும் நடவடிக்கைகள் ஆரம்பம்

லோரன்ஸ் செல்வநாயகம்

கொழும்பு துறைமுகத்துக்கு அருகிலுள்ள கடற்பரப்பில் தீ அனர்த்தத்திற்கு உள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலை துண்டு துண்டாக்கி மீள எடுத்துச்செல்லும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை தலைவர் தர்ஷனி லஹதபுர தெரிவித்துள்ளார்.

அந்தக் கப்பலை துண்டாக்கும் நடவடிக்கைகளை சீன நிறுவனமான செங்கை செல்வேஜ் நிறுவனம் மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் பதிவுசெய்யப்பட்டுள்ள எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலானது 2021 மே மாதம் கொழும்பு துறைமுகத்திற்கு அருகேயுள்ள கடற்பரப்பில் தீ அனர்த்தத்திற்குள்ளானது. சுமார் இரண்டு வார காலம் தீப்பற்றிக்கொண்டிருந்த மேற்படி கப்பலினால் கடல் மற்றும் சுற்றாடலுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தற்போது கப்பலுக்கு சொந்தமான நிறுவனத்தினால் அந்தக் கப்பலை துண்டுகளாக்கி அவர்களது நாட்டுக்கு எடுத்துச்செல்லும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கான அனைத்து நடவடிக்கைகளும் சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை வழிகாட்டலுக்கிணங்கவே மேற்கொள்ளப்படுவதாகவும் அதனால் கடற்பரப்பு மற்றும் சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்புகள் பெரிதும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில்

நீதியமைச்சரின் கருத்துக்கு செல்வம் MP மறுப்பறிக்கை

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ வெளிநாட்டில் இருந்து வந்த பிரதிநிதியொருவருக்கு தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் நன்றாக கதை அளந்து இருக்கிறார் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று தெரிவித்துள்ளார். தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு தடையாக ஒரு சில

06

வெளிநாடு செல்வோர் 136 வீதத்தால் அதிகரிப்பு

6,000 தொழில் வல்லுநர்கள் வெளியேற்றம்

வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், கணக்காளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உட்பட 6,000க்கும் மேற்பட்ட பல்வேறு தொழில் வல்லுநர்கள் கடந்த மூன்று வருடங்களில் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் ஊழியர்களின் சம்பளத்திற்கு அதிக வரி விதிக்கப்படுவதால் எதிர்வரும் காலங்களில் பெருமளவிலான தொழில் வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளியேறும் அபாயம் காணப்படுவதாக இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களில் ஏறக்குறைய 8 இலட்சம் பேர் கடவுச்சீட்டு பெற்றுள்ளதாகவும், சுமார் 6 இலட்சம் பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும் தெரிவித்த அவர், 2021 ஆம் ஆண்டில் 4 இலட்சத்திற்கும் அதிகமானோர் கடவுச்சீட்டு பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

வெளிநாட்டிற்கு வேலைக்குச் செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை 136 வீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் கடந்த வருடம் 300,000 இற்கும் அதிகமானோர் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு கல்வி கற்கச் சென்றுள்ளதாகவும், இதனால் நாட்டுக்கு பாரிய தொகை இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர், இவ்வாறு தொழில் வல்லுநர்கள் வெளியேறுவது நாட்டின் முன்னேற்றத்திற்கு பெரும் தடையாக இருப்பதாகவும், இதனை தடுக்க அரசு அவசர வேலைத்திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மின்சார உற்பத்திக்காக போதியளவு நீரை வழங்க நீர் முகாமைத்துவ செயலகம் இணக்கம் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

எதிர்வரும் சில தினங்களுக்கு மின்சார உற்பத்திக்கான நீரை நீர்த்தேக்கங்களிலிருந்து போதியளவு விநியோகிப்பதற்கு நீர் முகாமைத்துவ செயலகம் இணக்கம் தெரிவித்துள்ளதாக பொது பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நடைபெறும் காலத்தில் துண்டிப்பின்றி மின்சாரத்தை வழங்கும் வகையில் நீர் மின்சார உற்பத்தியூடாக அதிகளவு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கிணங்கவே மேற்படி இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாகவும் அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொது பயன்பாட்டு ஆணைக்குழுவானது எதிர்வரும் சில தினங்களுக்கு நீர் மின்சார உற்பத்திக்காக போதியளவு நீரைப் பெற்றுக்கொடுப்பதற்கு வேண்டுகோள் விடுத்துள்ள நிலையிலேயே

06

ஜாதிக லொதரஸி மண்டலய
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.01.29
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5015
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,038,625.00
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 4 9 1 1 3 3

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1470
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,893,351.20
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 2 7 3 7 3 7

ராசி சம பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 324
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,655,831.20
வெற்றி இலக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 15 16 24 57
விசேட இலக்கினம் சிம்மம்

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1363
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 296,274,010.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிரான்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து D
சுப்பர் இலக்கம் 05
வெற்றி இலக்கங்கள் 19 37 63 65

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3257
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 74,977,228.40
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 22 36 38 42

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1045
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 80,864,984.80
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 01 37 72 80

தினகரன்
THINAKARAN
நிகரன்
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சுபகிருது வருடம் தை மாதம் 17ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரஜப் பிறை 05

குறள் தரும் சிந்தனை

நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்

வெட்கப்பட வேண்டியதற்கு வெட்கப்படாமலும், தேட வேண்டியதைத் தேடிப் பெறாமலும், அன்புகாட்ட வேண்டியவரிடத்தில் அன்பு காட்டாமலும், பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியவற்றைப் பாதுகாக்காமலும் இருப்பது பேதைகளின் இயல்பாகும்.

முட்டை தேவையை நிறைவேற்றுவதில் ஆக்கபூர்வமான தீர்மானம் அவசியம்

நாடு முகம்கொடுத்துள்ள பொருளாதார சவால் காரணமாக பாதிக்கப்பட்டு இருக்கும் துறைகளில் கோழிவளர்ப்பு பண்ணைத் தொழில் துறையும் ஒன்றாகும். இது இந்நாட்டில் கால்நடை வளர்ப்பு தொழில்களில் ஒன்றாகவும் வீட்டுக் கைத்தொழில் தொழிலாகவும் விளங்கி வருகிறது. ஆனாலும் இதனை பாரிய மற்றும் நடுத்தர அளவிலான பண்ணைக் கைத்தொழிலாக முன்னெடுப்பவர்களும் இருக்கவே செய்கின்றனர்.

இந்நாட்டுக்கு தேவையான கோழி இறைச்சியையும் கோழி முட்டையையும் இத்துறையினர் ஊடாகவே இந்நாடு இற்றை வரையும் பெற்றுக் கொள்கிறது.அந்த வகையில் 2021 ஆண்டில் மாத்திரம் 2934 மில்லியன் முட்டைகள் உள்நாட்டில் உற்பத்தி செய்யபட்டிருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ஆனாலும் கடந்த ஆண்டில் (2022) நாடு முகம் கொடுத்த பொருளாதார நெருக்கடியின் விளைவாக கோழித்தீவனம், அதற்கான மருந்துப் பொருட்கள் மற்றும் பராமரிப்பு செலவு என்பவற்றின் செலவுகள் பெரிதும் அதிகரித்துள்ளன. அத்தோடு பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களும் பாதிப்புகளும் தொடர்ந்தும் நீடித்த வண்ணமுள்ளன.

இந்நிலையில் கோழித் தீவனத்தினதும் அதனை உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருட்களதும் விலைகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோழிப் பண்ணையாளர்கள் சங்கத்தினர் ஏற்கனவே கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை கோழித் தீவனம், கோழிகளுக்கான மருந்துப் பொருட்கள் உட்பட பராமரிப்பு செலவும் அதிகரித்துள்ளதால் இத்தொழிலில் ஈடுபடுவதை சிலர் கைவிட்டும் உள்ளனர்.

இதன் விளைவாக தற்போது நாளொன்றுக்கு 30 இலட்சம் முட்டைகளுக்கான பற்றாக்குறை நாட்டில் நிலவி வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் முட்டையின் விலையை அதிகரிப்பதற்கு முட்டை உற்பத்தியாளர்கள் முயற்சிக்கின்றனர். ஆனால் அதற்கு அரசு இடமளிக்கவில்லை. முட்டைக்கான விலையை நிர்ணயித்து வர்த்தமானி அறிவித்தலும் விடுக்கப்பட்டுள்ளன. இதனை மீறி முட்டையை அதிகரித்த விலைக்கு விற்பனை செய்பவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் ஆஜர்படுத்தப்படுகின்றனர்.

இவ்வாறான சூழலில் பொதுநிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்றக் குழு (கோப்) கோழி வளர்ப்புத் துறை மற்றும் நாட்டின் முட்டைத் தேவை என்பன குறித்து கவனம் செலுத்தியுள்ளது. கோழி வளர்ப்புத் துறையைப் பாதுகாத்தல், பாவனையாளர்களுக்கு நியாய விலையில் முட்டையை பெற்றுக்கொடுத்தல் உள்ளிட்ட நான்கு விடயங்கள் குறித்து இக்குழு அதிக கவனம் செலுத்தி இருக்கின்றது.

இந்த அடிப்படையில் பாவனையாளர்களுக்கு முட்டையை நியாய விலையில் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் விலைச்சூத்திர முறையொன்றை அறிமுகப்படுத்துவது குறித்து கமத்தொழில் மற்றும் வர்த்தக அமைசுசுக்களின் செயலாளர்கள் யோசனையொன்றை கோப் குழுவில் முன்வைத்துள்ளனர். ஆனால் முட்டைக்கு விலைச்சூத்திரத்தை நடைமுறைப்படுத்துவதில் நிலவும் சிக்கல்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளன. அதனால் இவ்விலைச்சூத்திர முறையை மீளாய்வு செய்யுமாறு பணிப்புரை விடுத்த கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார, 'கோழிப்பண்ணைத் துறையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

உண்மையில் இது நியாயமான அறிவுறுத்தலாகும். உள்நாட்டின் முட்டைக்கான கேள்வி நிறைவேற்றப்படுவது அவசியம். ஏனெனில் முட்டையானது மனித ஆரோக்கியத்திற்கு அவசியமான போஷாக்கை வழங்கும் முக்கிய பொருட்களில் ஒன்றாக இருக்கின்றது.

ஆனால் கால்நடை வளர்ப்பு மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஹேமாலி கொத்தலாவல, 'இந்தியாவில் தொடர்ச்சியாக பறவைக் காய்ச்சல் பரவி வருவதன் காரணமாக அங்கிருந்து முட்டை இறக்குமதி செய்ய அனுமதி வழங்க முடியாது' என்றும் கூறியுள்ளார். 2021 முதல் 2022 செப்டம்பர் வரையும் ஐரோப்பாவில் 2500 பேர் பறவைக் காய்ச்சல் நோய்க்கு உள்ளாகியுள்ளனர். இந்தியாவிலும் 2006 முதல் அவ்வப்போது பறவைக் காய்ச்சல் பதிவாகி வருகிறது' என்றும் அரச வர்த்தக கூட்டுத்தாபனத்திற்கு அறிவித்துள்ளார்.

அதனால் முட்டை இறக்குமதி தொடர்பில் பறவைக் காய்ச்சல் குறித்தும் கவனம் செலுத்தி தீர்மானம் எடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டு இருக்கின்றது. ஆகவே நாட்டின் முட்டை தேவையையும் உள்நாட்டு கோழி வளர்ப்பு துறையினரின் நலன்களையும் கருத்தில் கொண்டு தீர்மானங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். இவ்விடயங்களில் உரிய கவனத்தைச் செலுத்த சம்பந்தப்பட்ட தரப்பினர் தவறலாகாது. அதுவே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

ஒன்றுபட்ட இந்திய தேசத்தின் வல்லமையை உலகுக்கு பறைசாற்றிய குடியரசுதின வைபவம்

இந்தியாவின் 74 ஆவது குடியரசுதின விழா தலைநகர் டெல்லியில் கடந்த 26 ஆம் திகதி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இதையொட்டி டெல்லியில் உள்ள போர் நினைவுச் சின்னத்தில் பிரதமர் நரேந்திர மோடி மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

குடியரசுதின விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்குமாறு, எகிப்து ஜனாதிபதி அப்தெல் படாக் எல்சிசி

அழைக்கப்பட்டிருந்தார். அவரை குடியரசுத் தலைவர் மாளிகையில் இருந்து, இராணுவ அணிவகுப்பு நடைபெற்ற பாதைக்கு, குதிரைப்படை வீரர்கள் புடைசூழ குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தனது வாகனத்தில் அழைத்து வந்தார். குடியரசுத் தலைவராகப் பதவியேற்ற பின்னர் திரவுபதி முர்மு கலந்து கொண்ட முதலாவது குடியரசு தின விழாவாக அன்றைய வைபவம் அமைந்தது.

அவ்விருவரையும் பிரதமர் நரேந்திர மோடி, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், முப்படைத் தளபதிகள் ஆகியோர் வரவேற்று, விழா மேடைக்கு அழைத்துச் சென்றனர்.

அதனைத் தொடர்ந்து, குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தேசியக் கொடியேற்றி வைத்தார். அப்போது 21 பீரங்கி குண்டுகள் முழங்க, தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

அதன் பின்னர், கமாண்டர் லெப். ஜெனரல் திராஜ் சேத் தலைமையில் இராணுவ அணிவகுப்பு தொடங்கியது. கடமைப் பாதையில், உள்நாட்டுத் தயாரிப்பான ஆகாஷ் ஏவுகணைகளை ஏந்திய இராணுவ வாகனங்கள், அர்ஜுன் பீரங்கி வாகனங்களுடன், பாதுகாப்புப் படையினர் அணிவகுத்து வந்தனர். முதல் அணியாக எகிப்து நாட்டின் இராணுவ வீரர்கள் 144 பேர், கர்னல் மகமூத் முகமது அப்தெல் ஃபதா எல் கரசாவி தலைமையில் அணிவகுத்து வந்தனர். இந்திய குடியரசு தின விழா அணிவகுப்பில், எகிப்து படைப் பிரிவு பங்கேற்பது இதுவே முதல் முறையாகும். விழாவில், குடியரசுத் துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அணிவகுப்பில் 17 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் அலங்கார ஊர்திகள், மத்திய அரசுத் துறைகளின் 6 அலங்கார ஊர்திகள் பங்கேற்றன. தமிழ்நாடு அரசின் அலங்கார ஊர்தியில் தஞ்சை பெரியகோயில் கோபுரம், நுணுக்கமான சிற்ப வேலைப்பாடுகளுடன் வடிவமைக்கப்பட்டிருந்தது. கல்வி, அறிவாற்றல், கலை, போர், வேளாண்மை ஆகியவற்றில் பெண்கள் வலிமையோடுத் திகழ்கிறார்கள் என்பதைக் குறிக்கும் வகையில் தமிழ்நாடு ஊர்தி வடிவமைக்கப்பட்டிருந்தது.

முகப்பில் ஔவையார் கம்பீரமாகத் தோற்றமளித்தார். இசைக்குயில் எம்.எஸ்.சுப்புலட்சுமி, பரதநாட்டியக் கலைஞர் தஞ்சாவூர் பாலசரஸ்வதி, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், முதல் பெண் மருத்துவர் முத்துலட்சுமி, விவசாயப் பணி மேற்கொள்ளும் 107 வயது மூதாட்டி பாப்பம்மாள் ஆகியோரது சிலைகளும் இடம் பெற்றிருந்தன. ஊர்தியின் முகப்பில் தமிழ்ப் பெண்களின் வீரத்தைப் போற்றும் வகையில் வேலு நாச்சியார், குதிரை மீது அமர்ந்து போர் புரியும் காட்சி தத்ரூபமாக வடிவமைக்கப்பட்டிருந்தது.

டெல்லியில் நடைபெற்ற அணிவகுப்பின் இறுதி நிகழ்ச்சியாக, விமானப்படையின் போர் விமானங்கள் சாகசங்கள் நிகழ்த்தி, பார்வையாளர்களைக் கவர்ந்தன. இந்திய விமானப்படையின் 45 விமானங்கள் அணிவகுப்பில் பங்கேற்றன.

இந்திய அரசு சார்பில் குடியரசு தின விழா ஆண்டுதோறும் டெல்லியில் உள்ள ராஜபாதையில் கோலாகலமாக கொண்டாடப்படும். இந்த ஆண்டு சென்டிரஸ் விஸ்டா திட்டத்தில் புனரமைக்கப்பட்ட கடமையின் பாதையில் (முன்பு ராஜபாதை) குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது.

இம்முறை அணிவகுப்பில் இடம்பெற்ற அம்சங்கள் நாட்டின் உள்நாட்டு திறன்கள், பெண் சக்தி, இராணுவ வலிமை, பன்முகத்தன்மை போன்றவற்றை பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருந்தன. இராணுவ பிரிவில் முப்படைகளுடன் குதிரைப்படை மட்டுமின்றி ஒட்டகப்படையும் இடம்பெற்றது.

கடற்படையில் 144 இளம் மாலுமிகள் பங்கேற்றார்கள். முதன் முறையாக 3 பெண் அதிகாரிகளும், 6 அக்னி வீரர்களும் கலந்து கொண்டார்கள். விமானப்படையில் 4 அதிகாரிகளுடன் 148 வீரர்கள் அணி வகுத்தனர். 148 தேசிய மாணவர் படையினரும், 448 நாட்டுநலப்பணித்திட்ட மாணவர்களும் கலந்து கொண்டார்கள்.

அணிவகுப்பில் தமிழகம் உள்ளிட்ட 17 மாநிலங்கள் மற்றும் 6 துறைகளின் அலங்கார ஊர்திகளும் பங்கேற்றன. நாடு முழுவதிலும் இருந்து 500க்கும் மேற்பட்ட நடனக் கலைஞர்கள் பங்கேற்றார்கள். அணிவகுப்பின் இறுதியாக வீரர்களின் சாகச நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மோட்டார் சைக்கிள் மற்றும் விமான சாகசங்கள் நடைபெற்றன. விமான சாகசத்தில் 45 விமானங்கள், ஹெலிகொப்டர்களும் பயன்படுத்தப்பட்டன.

இதற்கு முன்னதாக, சுதந்திர போராட்டத் தலைவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் பிறந்தநாளான ஜனவரி 23ஆம் திகதி ஒரு வார கால கொண்டாட்டங்கள் தொடங்கின. இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில், ஜனவரி 23, 24 ஆகிய திகதிகளில் டெல்லியில் நடன விழாவான 'ஆதி ஷௌர்யா பர்வ பராக்ரம்' ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்வுகள் தியாகிகள் தினமான ஜனவரி 30 அன்று முடிவடைந்தன.

காலை 10 மணியளவில் போர்த் தியாகிகள் நினைவுச் சின்னத்திற்கு வருகைபுரிந்த பிரதமர் நரேந்திர மோடி, மறைந்த வீரர்களுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். இதை தொடர்ந்து குடியரசுத் தின நிகழ்ச்சி நடைபெறும் கர்தவ்ய பாதைக்கு அவர் வந்தார். காலை 10.30 மணியளவில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தேசியக் கொடியை ஏற்றினார்.

இதைத் தொடர்ந்து 21 துப்பாக்கிக் குண்டுகள் முழக்கத்துடன் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. ஹெலிகொப்டர்கள் மூலம் மலர்கள் தூவப்பட்டன. இதைத் தொடர்ந்து முப்படை வீரர்களின் மரியாதை அணிவகுப்பை குடியரசுத் தலைவர் ஏற்றுகொண்டார். பிரமோஸ் ஏவுகணை, ஆகாஷ் ஏவுகணை போன்றவையும் அணிவகுப்பில் இடம்பெற்றிருந்தன.

இந்திய தேசத்தின் இராணுவ வல்லமையை வெளிப்படுத்தும் வகையில் அன்றைய நிகழ்ச்சிகள் அமைந்திருந்தன.

குடியரசுத் தினத்தையொட்டி பிரதமர் நரேந்திர மோடி தனது ட்விட்டர் பக்கத்தில், "குடியரசு தின வாழ்த்துகள். சுதந்திர தினத்தின் அமிர்த மஹோத்சவின் போது நாம் கொண்டாடுவதால் இம்முறை குடியரசுத் தின விழா சிறப்பு வாய்ந்தது. நாட்டின் மகத்தான சுதந்திரப் போராட்ட வீரர்களின் கனவுகளை நனவாக்க நாம் ஒற்றுமையாக முன்னேற விரும்புகிறோம். சக இந்தியர்கள் அனைவருக்கும் குடியரசு தின வாழ்த்துக்கள்!" என குறிப்பிட்டிருந்தார்.

இதேபோல், பல்வேறு நாட்டு தலைவர்களும் இந்திய குடியரசுத் தினத்திற்கு வாழ்த்து தெரிவித்திருந்தனர்.

டெல்லியில் உள்ள போர் நினைவுச் சின்னத்தில் மரியாதை செலுத்திய பிரதமர் மோடி,வண்ணமயமான ராஜஸ்தான் தலைப்பாகையுடன் விழா நடைபெறும் இடத்திற்கு வந்திருந்தார்.

எம்முடன் இருந்தோரை நல்வழிப்படுத்துவதற்கு மேற்கொண்ட முயற்சியில் தோற்றுப் போனோம்!

- சாவகச்சேரியில் சுமந்திரன் எம்.பி

இருபது வருடமாக கூட இருந்தவர்களை நல்வழிப்படுத்த எடுத்த முயற்சியில் நாம் தோல்வி அடைந்து விட்டோம் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

சாவகச்சேரியில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2001 ஆம் ஆண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட போது அதற்குப் போட்டியாக அரசுக்கு ஆதரவாக இன்னொரு கட்சி உருவாக்கப்பட்டது. அது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக பதிவும் செய்யப்பட்டது. அரசு கூலியாக இருந்தவர்கள்தான் அந்தக் கட்சியை பதிவு செய்தவர்கள். ஜனநாயகமாக அவர்கள் செயற்படவில்லை.

அவ்வாறானவர்கள் இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பை தாங்கள் பாதுகாக்கின்றோம் என்று நீலிக்கண்ணீர் வடிக்கின்றார்கள். தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு போட்டியாக கட்சியை வைத்திருக்கின்ற அவர்கள், இன்று அந்தக் கட்சியிலே போட்டியிட்டுக் கொண்டு அதற்குப் பெயர் கூட்டமைப்பு என்று சொல்லிக்கொண்டு இருக்கின்றார்கள்.

2010 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் மன்னார் மாவட்டத்திலே முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சூசைதாசன் போட்டியிட்டு இருந்தார். சூசைதாசன் 1977 ஆம் ஆண்டு போட்டியிட்டு பெருவெற்றியீட்டியவர். அவ்வாறான ஒருவர் 2010 ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தில் தோல்வி

அடைந்திருந்தார்.

அந்தத் தோல்விக்கான காரணத்தை 2012 ஆம் ஆண்டு இலங்கை தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு மட்டக்களப்பில் நடைபெற்ற போது, அவரே சொல்லியிருந்தார்.

"நான் தோற்றதற்கு காரணம் நான் தூள் கடத்துவதில்லை, நான் ஆள் கடத்துவதில்லை, நான் கொலை செய்வதில்லை. அதனால்தான் நான் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றேன் என்று சொன்னார். இன்றைக்கு தமிழரசுக் கட்சி மக்கள் முன்பாக தூய்மையானதாக வந்து நிற்கின்றது.

தூள் கடத்துபவர்கள் எங்கள் மத்தியில் இல்லை நீங்கள் தாராளமாக தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்கலாம். இந்தத் தேர்தலில் எங்களுடைய கட்சி போட்டியாளர்களுக்கு நான் சொல்லுகின்ற விண்ணப்பம் எந்தவித போதைவஸ்துக்களையும் மக்களுக்கு விநியோகிக்க வேண்டாம், சாராயம் விநியோகிக்க வேண்டாம் அப்படி செய்கின்ற பலர் இருக்கின்றார்கள். அவர்கள் எல்லாம் இப்போது எங்களுடைய கட்சியில் இல்லை.

தூய்மையான சாத்வீக வழியிலான ஒரு போராட்டத்தை தமிழரசுக் கட்சி முன்னெடுக்கின்றது. சம்பந்தன் அவர்களையும் என்னையும் குறை சொல்லுவது பலருக்கு கைவந்த கலையாக இருக்கின்றது. அதைத்தான் இவர்களும் இப்போது கையில் எடுத்திருக்கின்றார்கள். சம்பந்தன் யார், நான் யார் என்பது மக்களுக்கு நன்றாகவே தெரியும்.

நாங்கள் ஒரு காலமும் எங்களுக்காகப் போராடியவர்களை காட்டிக் கொடுத்தவர்கள் அல்ல, சந்தி சந்தியாக நின்று முகத்தில் சாக்கை போர்த்தி வைத்துக் கொண்டு தலையாட்டி காட்டிக் கொடுத்தவர்கள் அல்ல.

அவர்களில் ஒரு தலைவருக்கு பழக்க தோஷமாகப் போய்விட்டது இப்போது கூட்டத்திலும் தலை ஆடிக்கொண்டே இருக்கின்றது. அது தலையாட்டிய பழக்கம். 1980 ஆம் ஆண்டு இதனைச் சாதித்தோம், 1985இல் இதனைச் சாதித்தோம் 1987இல், 1989இல், 1994இல், 2001இல், 2004இல் இதனைச் சாதித்தோம் என வரலாற்றுப் பட்டியலிடுகின்றார்.

அதே பட்டியலில் எத்தனையாம் ஆண்டுகளில் யாரைப் போட்டுத் தள்ளினோம், எத்தனையாம் ஆண்டு அரச கூலிப்படையாக சேர்ந்து இயங்கினோம் என்பதனைக் கூற மறந்துவிட்டார். எங்கள் இருவருடைய சரித்திரத்தையும் நன்றாக துழாவிப் பார்க்கலாம். எந்த தருணத்திலேயும் யாரையும் நாங்கள் காட்டிக் கொடுத்தோமா? அரசு கூலிப்படையாக செயற்பட்டோமா? என்பது தமிழ் மக்களுக்கு நன்றாகவே தெரியும்.

இவ்வாறு சுமந்திரன் எம்.பி தெரிவித்தார்.

ஒன்பது வீதம் வாழும் முஸ்லிம்களுக்கு மூன்று சதவீதமான காணிகளே உள்ளன!

இது அடிப்படை உரிமை மீறல்; அனைத்துக் கட்சித் தலைவர்கள் மாநாட்டில் அதாவுல்லா எம்.பி

இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியின் ஒரு அங்கமாக பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனான மாநாடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

அம்மாநாட்டில் பல்வேறு தரப்பினரும் தமது கருத்துகளை முன்வைத்தனர். தேசிய காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம் அதாஉல்லா அங்கு கருத்துத் தெரிவித்ததாவது:

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் எல்லோரும் அமர்ந்து பேசி இறுதித் தீர்வினை இப்போதே அடைந்து விட வேண்டும். எதிர்கால சந்ததியினருக்கு அதனை விட்டுவிடக் கூடாது. தற்போது காணிவிடுவிப்பு மற்றும் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக மட்டுமே பேசப்படுகின்றது. அதிகாரப் பரவலாக்கல் என்று நாம் எல்லைகளை வரையறை செய்து கொள்கிறோம். இதனால் மக்கள் திருப்தி கொண்டார்களா? அல்லது சமூகங்கள் ஒற்றுமைப்பட்டனவா? இல்லவே இல்லை.

உதாரணமாக, அக்கரைப்பற்று டீ.ஆர்.ஓ பிரிவிலிருந்து திருக்கோவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரிந்து உருவான போது 17வீதமான மக்களுக்கு 40வீதமான



காணிகள் போய்ச் சேர்ந்தன. இது தவறான நடைமுறையாகும்.

அதுமட்டுமன்றி அக்காணிகளை தமிழ் சமூகம் மாத்திரம் உரிமை கொண்டாடுவது கொடுமையிலும் கொடுமையான செயலாகும்.

பயங்கரவாத காலத்திற்கு முந்திய காலத்தில் இருந்த காணி உரிமைகளை மக்களுக்கு வழங்குவதுடன், இன விகிதாசாரத்திற்கேற்ப காணிகளை சமூகங்களுக்கு பங்கீட்டு வழங்க வேண்டும். இலங்கையில் 9 வீதமாக வாழும் முஸ்லிம் மக்கள் சுமார் 3 வீதமான காணிகளைக் கொண்டே காணப்படுகின்றனர். இது வாழ்வியலுக்கான அடிப்படை உரிமை மறுக்கப்பட்டு அச்சமூகம் காணப்படுவதனை சுட்டி நிற்கின்றது".

காணிப் பிரச்சினையை கையாள்வதற்கு பொருத்தமானவர் வேண்டும். 13 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தம் மற்றும் மாகாண சபைகள் திருத்தச் சட்டம் இலங்கை மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு தருவதற்குப் போதுமானதா? அதன் வல்லமை என்ன என்பதனை வரலாற்றில் நாம் அறிந்துள்ளோம். இருப்பினும் மாகாணசபை முறையினை முழுமையாக நடைமுறைப்படுத்த நாம் எமது முழுமையான ஆதரவினை தருகின்றோம். அதனை நடைமுறைப்படுத்துங்கள்.

இப்போது தேசிய ரீதியான வனம் பற்றி பேசுகின்றோம். அம்பாறை மாவட்டத்தில் பயிர்ச்செய்கை பண்ணப்பட்ட அதிகப்படியான காணிகளை வனத்தினணக்களம் கையகப்படுத்தியுள்ளது. அதற்கு வனத்திணைக்களம் சொல்லும் நியாயம் 30 வீதமான வனம் நாட்டின் நிலைபேறினை பேண வேண்டும் என்பதாகும் .சரி அதனை தேசிய நலன் கருதி ஏற்றுக் கொள்கிறேன்.

ஆனால் சபையோரை பார்த்து கேள்வி ஒன்று கேட்கிறேன். "நாட்டிற்குத் தேவையான 30வீத வனத்திற்குரிய காணியினை வடக்கு, கிழக்கில்தான் பெற வேண்டுமா? ஆகவே ஏனைய மாவட்டங்களிலும் வனத்தின் அளவினை அதிகரிக்க சந்தர்ப்பத்தினை வழங்கி பயிர்ச்செய்கை காணிகளை வடக்கு, கிழக்கில் விடுவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஏ.எல்.எம்.அதாஉல்லா எம்.பி தெரிவித்தார்.

கைத்தொழில் மற்றும் உற்பத்தி

Industrial & Production

எஸ்.ஸ்ரீகாந்த்

மூளைசாலிகளை மூலப்பொருட்கள் உள்ள இடங்களுக்கு வரவழைக்கும் கைத்தொழில்துறையின் நவீன நோக்கு

உலகை அனுபவிக்கும் மனித நுகர்வின் வளர்ச்சி படிப்படியாக மாற்றமடைந்து பண்டையக்கால பண்டமாற்று முதல் நவீன கால நாணயமாற்று வரை முன்னேறிவிட்டது.இந்த முன்னேற்றத்தின் மற்றொரு வகையாக இன்றைய கைத்தொழில்துறை பரிணாமம் அடைந்திருக்கிறது.இலகுவான தகவல் பரிமாற்றம் மற்றும் விரைவான போக்குவரத்து என்பவற்றின் வினைத்திறன்கள்தான் இந்த மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அதாவது, மூலப்பொருட்களை பரிமாற்றம் செய்வது,உற்பத்தி தொடர்பான அறிவைப் பரிமாறிக் கொள்வதே இந்த மாற்றத்தின் பிரதானம்.அரபு நாடுகளுக்குத் தேவையான உணவுப் பொருட்களை அனுப்பி அங்கிருந்து எரிபொருட்களைப் பெற்றுக் கொள்வது, ஐரோப்பிய நாடுகளின் மூளைசாலிகளை உள்வாங்கி, நாட்டில் கிடைக்கும் மூலப்பொருட்களால் பொருட்கள், மருந்துகளை உற்பத்தி செய்வது இன்னும் நாடுகளுக்கிடையில் விரவிக்கிடக்கும் இயற்கை வளங்களைக் கண்டறிந்து, அவற்றிலிருந்து மனித நுகர்வுக்குத் தேவையானவற்றை கண்டு பிடிப்பது. இந்தளவில்தான், இன்றைய கைத்தொழில்துறை வளர்ந்துள்ளது.

அரபு நாடுகளிலிருந்து தருவிக்கப்படும் எண்ணெய், பாகிஸ்தான் மற்றும் இந்தியா என்பன அணுகுண்டு உட்பட நவீன ரக ஆயுதங்கள், வெடிபொருட்களுக்குப் பயன்படுத்துவதாகவும் ஒரு விமர்சனம் இல்லாமல் இல்லை. ஆனாலும், இதுவும் அதிகரித்து வரும் நுகர்வால் வந்த ஆசைகள்தான். இந்த எண்ணெயைப் பயன்படுத்தி விமான ஓடுபாதைகளுக்குத் தேவையான பொஸ்பேற்றை தயாரிப்பது, மண்ணெண்ணெய் மற்றும் தார் போன்றவை உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால், பாகிஸ்தான் மற்றும் இந்தியா என்பன இவற்றை உற்பத்தி செய்வதிலும் பார்க்க அதிகளவு ஆயுத உற்பத்தியிலே கவனம் செலுத்துகின்றன. இது, மனித நுகர்வுக்கு இல்லாமல் மனித அழிவுக்கு வித்திடுவதாக இருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாதென சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கவலை தெரிவித்துள்ளன.

உற்பத்திச் செலவுகளைக் குறைக்கும் ஒரு வியூகமாகவே இவ்வாறு நாடுகளுக்கிடையில் மூலப்பொருட்கள் வரவழைக்கப்படுகின்றன.

ஆனால், இவ்வாறு கொண்டு செல்லப்படும் இந்தப் பொருட்களை கடல் மார்க்கமாக பாரிய கப்பல்களில் ஏற்றிச் செல்வது மிகப் பெரிய ஆபத்துக்களை ஏற்படுத்தியுள்ளன.தொன் கணக்கில் உணவுப் பொருட்கள் ,கால் நடைகளை கப்பல்களில் ஏற்றிச் செல்வதும் அங்கிருந்து இலட்சக்கணக்கான பெரல்களில் எண்ணெயை ஏற்றி வருவதற்குமான இப்பயணங்களுக்கு நவீன தொடர்பாடல்களே பாதுகாப்பாக உள்ளன.

இந்தப் பாதுகாப்புக்காக செலவிடப்படும் நிதி,உற்பத்திச் செலவுகளையும் விஞ்சி நிற்பதுமுண்டு.இதுவே,நுகர்வுப் பொருட்களின் விலைகள் அதிகரிப்பதில் ஆதிக்கம் செலுத்துகிறது. இதனால் நாடுகளுக்கிடையில் மூலப்பொருட்களை பரிமாற்றம் செய்யும் போக்குவரத்து, இந்த நவீன பண்டமாற்றின் வளர்ச்சிக்குத் தடையாக அமைந்திருக்கிறது.இதைக் கருத்திற்கொண்டுள்ள வணிக மற்றும் கைத்தொழில் உலகம் மாற்று வழிகளையும் ஆராய்ந்து வருகிறது. இந்த மாற்று வழிகளில் ஒன்றுதான்,மூலப்பொருட்கள் கிடைக்கும் இடத்துக்கு துறைசார் நிபுணர்களை அழைத்து வரும் திட்டமாகும். எண்ணெய் மூலப்பொருட்களால் உற்பத்தி செய்யக் கூடியவற்றை கற்றுத் தேறுவதற்கு அரபு நாடுகளுக்கு மூளைசாலிகளை அனுப்புதல், இதேபோன்று விவசாயத் துறை உற்பத்தியிலுள்ள அனுபவங்களைப் பகிர்ந்து

கொள்ளவும்,கற்றுக் கொள்ளவும் அரேபியாவிலிருந்து இலங்கை,இந்தியா உள்ளிட்ட துறைசார் தளங்களுக்கு அரபுநாட்டவர் வருதல் மேலும்,ஐரோப்பா,சீனா என்பவற்றின் தொழினுட்ப கற்கைகளுக்காக மாணவர்களை அனுப்புதல் என்பவற்றில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.இவற்றுக்கு அதி முக்கியமாக உள்ள தகவல் பரிமாற்றத்துறையைக் கையாள்வதில்தான், கைத்தொழில்துறையின் இன்றைய வளர்ச்சியுள்ளது.

விமான உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்வதில் முன்னணி நிலைக்கு வந்து கொண்டிருக்கும் ஈரான் மீது அமெரிக்கா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் விதித்துள்ள தடைகளால்,ஈரானில் சிறந்த விமான உதிரிப்பாகங்களை பெறமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனால், அடிக்கடி அங்கு விமான விபத்துக்கள் ஏற்பட்ட சம்பவங்களும் பதிவாகியிருந்தன.

இதிலிருந்து மீண்டெழ நினைத்த ஈரான், விமான உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்யும் அறிவியலைக் கற்றுக் கொள்ள தனது நேச நாடுகளிடமிருந்து விரிவு

ரையாளர்களை அழைத்து அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டது. எனவே, மூலப்பொருட்கள் காலடியில் கிடைக்கும் தளங்களுக்கு மூளைசாலிகளை வரவழைக்கும் இம்முறை கைத்தொழில் துறையில் புதிய வரவேற்பைப் பெற்றுள்ளன. ஆனாலும், மூளைசாலிகளையும் குறிவைக்கும் நவீன அரசியல்தான் இந்தப்புதிய வளர்ச்சிக்கு ஆபத்தாகி வருகிறது. ரஷ்யா மற்றும் உக்ரைனுக் கிடையிலான போரில், உக்ரைனுக்குத் தேவைப்படும் "பற்றியற்" ஏவுகணைகளை உற்பத்தி செய்வதில் ஒரு சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதற்கான மூலப்பொருட்களை எங்கிருந்து கொண்டு வருவது என்பதை விடவும், உற்பத்தி தளங்கள் மற்றும் துறைசார் நிபுணர்களின் பாதுகாப்பு பிரச்சினைகளே அவையாகும்.

ஏ,ஜீ,எம்.தௌபீக்

டின் மீன் உற்பத்தி தொழில் துறையை ஊக்குவிக்க அரசாங்கம் அக்கறை செலுத்த வேண்டும்

இலங்கை மக்களின் பாவனைக்கு தேவையான டின் மீன்கள் உள் நாட்டிலேயே உற்பத்தி செய்யப் படுவதோடு இறக்குமதி செய்யப்படும் டின் மீன்களுக்கான வரியை உயர்த்தியதால் உள்ளூர் உற்பத்தியாளர்கள் பெரும் நன்மையடைய உள்ளனர். அத்தோடு டின் உற்பத்தி தொழில் துறையை அபிவிருத்தியடை செய்வதற்கு அரசு உத்துழைப்பு வழங்க வேண்டும் என டின் மீன் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவரும் டீஸ் டின் மீன் தொழிற்சாலைத் தலைவருமான சிரான் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாம் 08 வருடங்களுக்கு முன் வழங்கிய உறுதி மொழியை நிறைவேற்றியுள்ளோம். அத்தோடு ஒரு நாளைக்கு இலங்கை மக்

மீன்பிடி தொழிலாளர்களுக்கு நவீன வசதியுடைய மீன்பிடி வள்ளங்களை வழங்க நடவடிக்கைகளை ஆரம்பிக்க அரசு திட்டம் வகுக்க வேண்டும்

களின் டின் மீன் பாவனை 2.5 இலட்சமாகும். எமது சங்கத்திலுள்ள 05 தொழிற்சாலைகளில் 03 இலட்சம் டின் மீன்களை நாம் உற்பத்தி செய்கின்றோம்.எமது தேவைக்கு அதிகமாகவும் உற்பத்தி செய்யப்படுகிறது.

அரசாங்கம் இறக்குமதி செய்யும் டின் மீன்களுக்கான வரியை மேலும் அதிகரிக்குமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

இறக்குமதி செய்வதை நாம் நிறுத்தச் சொல்லவில்லை.வரி அதிகரிப்பால் அரசுக்கும் வருமானம் வருகிறது. வெளிநாட்டு டின் மீன்களை உண்ண விரும்புபவர்கள் அவற்றை கொள்வனவு செய்வார்கள்.அதற்கு நாம் முட்டுக் கட்டை போடவில்லை.

இறக்குமதி செய்யப்படும் டின் மீனால் எமக்கு எந்த பலனும் இல்லை.லேபல் முதல் அனைத்தும் வெளிநாட்டில் நடைபெறுவதால் எமது நாட்டுக்கு எந்தப் பயனும் கிடையாது. இதனால் எமது நாட்டு தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்டுகிறது மற்றும் தொழில் இழப்பும் ஏற்படுகிறது.

இவற்றை நிறுத்தி எமது நாட்டில் உற்பத்தி செய்ய வேண்டும். எமது மீனவர்கள் 5000 கிலோ மீன்கள் கொண்டு வந்தால் 3000 கீலோ மீன்கள் பழுதடைந்து விடுகிறது.

எமது மீன் பிடி படிகுகளில் நவீன உபகரணங்கள் குறைவு. பழை முறையிலேயே ஐஸ் கட்டிகளை போட்டு மீனை கொண்டு வருகிறார்கள். கடற்றொழில் அமைச்சு நவீன படகுகளை மீனவர்களுக்கு வழங்க வேண்டும் என கோருகிறோம். அப்படி செய்தால் 5000 கிலோவையும் டின் மீன் உற்பத்தியில் பயன்படுத்தி வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யலாம். கடற்றொழில் அமைச்சு எமது தொழில் துறைக்கு பாரிய பங்களிப்பை செய்து வருகிறது.நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி மீன்கள் பிடிபடும் வீதத்தை அதிகரிக்க வேண்டும்.

கைத்தொழில் துறையை பாதிக்கும் மின்னுற்பத்தி சிக்கல்கள்

இலங்கையில் இன்று மின்சாரம் தனி மனிதன் முதல் தொழில்துறைவரை பெரும் பேசும் பொருளாக மாற்றப்பட்டுள்ளது. மின்சார பிரச்சினை இலங்கையர் எல்லோருக்கும் அவர்களின் உடலில் மின்சாரம் பாய்வது போல் இருப்பதாக எமக்கும் தோன்றுகிறது.மின்சாரம் கைத்தொழில்,உற்பத்தி துறைக்கு இன்றியமையாத ஒன்றாக இருக்கிறது. மின்சார உற்பத்தில் எழும் பிரச்சினைகள் கைத்தொழில், உற்பத்தி துறையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.இன்றைய இலங்கையில் பொருளாதார நெருக்கடி மின் உற்பத்தியிலும் பெரும் சரிவை ஏற்படுத்தியுள்ளது. ஒரு வருடத்திற்கு 15,000 (கிகா வாட் மின்திறன்) மின்சாரம் தேவைப்படுகிறது. இதில் 5000 பாரிய மின்னுற்பத்தி நிலையங்களான விக்டோரியா,லக்ஸபான மற்றும் மஹாவெளி போன்றவற்றியிலிருந்து 34% வீதம் பூர்த்தி செய்யப்படுகிறது. மிகுதி 5000 அனல் மின் நிலையத்திலும் மிகுதி புதுப்பிக்கத்தக்க வலுவால் பூர்த்தி செய்யப்படுகிறது(சூரிய சக்தி, காற்று, பயோமாக்ஸ்) மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது.நாம் இது வரை செய்து வந்த சம்பிரதாய பூர்வ மின் உற்பத்தியில் இருந்து நாம் சிறு மாற்றங்களுக்கு உட்பட வேண்டும். நவீன மாற்றத்திற்கு ஏற்ப மின் பாவனையும் அதிகரித்துள்ளது.

சம்பிரதாய மின்னுற்பத்தியில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்

அவ்வதிகரிப்பை பூர்த்தி செய்ய அதிக விலை கொடுத்து உற்பத்தி செய்யப்படும் டீசல் மின்கலங்களை கொண்டு பூர்த்தி செய்யப்படுகிறது. இவற்றை குறைத்து புதுப்பிக்கத்தக்க வலு சக்தியை அதிகரிக்க வேண்டும்.

பொருளாதார நெருக்கடியில் நாம் வலு சக்தி பயன்பாட்டை சீரான முறையில் பேணுவதோடு சம்பிரதாய வலு சக்தி உற்பத்தியில் இருந்து விடுப்பட்டு சூழலுக்கு தீங்கில்லாத மீள்புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். இலங்கையில் இன்றைய நிலையில் சூரிய சக்தி மின் உற்பத்தியாளர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகவும் இதற்கு தீர்வை தருமாறு அரசுக்கு கோரிக்கை விடுப்பதாக சூரிய சக்தி மின் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அசங்க தென்னகோன் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இத்துறையை அபிவிருத்தி செய்யக் கூடிய பணப்பலம் இல்லாமல் வீழ்ச்சியை நோக்கிப் போய்க் கொண்டிருப்பதாக சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். சில மின்னுற்பத்தி நிறுவனங்களை மூடி விடும் நிலைமைக்கு அதன் உரிமையாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர். எமது சூரிய மின் சக்தி உற்பத்தி நிலையங்களில் ஒரு நாளைக்கு கிகாவோட் 3க்கு மேல் உற்பத்தி செய்யக்கூடிய 800 மெகாவோடுக்கு மேற்பட்ட கட்டமைப்பு எம்மிடம் இருக்கிறது. அத்தோடு தேசிய மின்சார கட்டமைப்பில் நாம் 7.5% வீத மின்சாரத்தை பூர்த்தி செய்கிறோம். ஆனால் டீசல், அனல் மின் உற்பத்திக்கு நாம் அதிக பணம் செலுத்தி மின்சாரத்தை வாங்க வேண்டியுள்ளது.நாம் அதைவிட குறைவான விலைக்கே மின்சாரத்தை தேசிய மின் கட்டமைப்புக்கு வழங்கிறோம்.

இலங்கை தேசிய மின்கட்டமைப்புக்கு புதுபிக்கத்தக்க வலு சக்தி வருடத்திற்கு 15%–16% வீத பங்களிப்பை வழங்கி வருகிறது. இன்றைய நிலையில் சிறு மின்னுற்பத்தி நிலையங்களில் 7000 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர்.இவற்றுக்கான பராமரிப்பு வேலைகளை செய்ய முடியாத சூழ்நிலைக்கு முகம் கொடுத்து வருவதாகவும் தெரிவித்தார். நாம் இன்று முகம் கொடுக்கும் சில பிரச்சினைகளால் எமது சூரிய மின்னுற்பத்தி நிலையங்களில் பராமரிப்பு வேலைகள் மற்றும் இதர செலவினங்களை செய்யக்கூடிய பொருளாதார பலம் அற்றவர்களாக இருக்கிறோம்.இவ்வாறான காரணிகள் அதிகரிக்குமானால் புதிய முதலீட்டாளர் வருகையும் குறைவடைய வாய்ப்பு இருப்பதால் உடனடியாக அரசும் மின் சக்தி அமைச்சும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சங்கம் கோட்டுக் கொண்டது.

சூரிய மின்னுற்பத்தி தொழில் துறையிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்குவதனூடாக மின்சார பற்றாக்குறைக்கு தீர்வை காணலாம்...

இம்தியாஸ் – சஜித் விரிசல் ஏற்படுமா?

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் மிகவும் நெருக்கமாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் கடந்த வாரம் கோட்டையில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதான காரியாலயத்துக்கு உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பான வேட்பாளர் பட்டியலை தயாரிப்பதற்காக சென்றுள்ளார். கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிட்டு மேயராக தெரிவு செய்யப்பட்ட மசாஹிம் மொஹம்மட்டுக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் பட்டியலில் இடம் வழங்க அனைத்து நடவடிக்கைகளும் தயார் செய்யப்பட்டிருந்ததாக அறிக்கிடைத்தது.

ஆனால் ஐக்கிய மக்கள் சக்தியின் பேருவளை நகர சபைக்கான வேட்பாளர் பட்டியல் பிரச்சினை பல வருடங்களாக காணப்படும் ஒன்றாகும்.

இற்றைக்கு பல வருடங்களுக்கு முன்னர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றில் கலந்து கொண்டதன் காரணமாக மசாஹிம் மொஹம்மட்டுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் கதவுகள் மூடப்பட்டன. அதனால் அவர் அன்று சுயேச்சையாக போட்டியிட தீர்மானித்தார்.

ஆனால் இம்முறை உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மசாஹிம் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட விருப்பம் தெரிவித்திருந்ததோடு அதற்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் ஒப்புதலும் கிடைத்திருந்ததாக பல செய்திகளும் வெளிவந்தன.

அம்ஜாட் மொட்டுக் கட்சியிலிருந்து ஐக்கிய மக்கள் சக்திக்கு வந்த மாகாண சபை உறுப்பினராவார். தற்போதைய பேருவளை அமைப்பாளர் இப்திக்கார் மற்றும் மேயர் மசாஹிமுக்கு இடையில் ஒற்றுமையை ஏற்படுத்தும் படி இம்தியாஸ் அளித்த யோசனையை சஜித் ஏற்றுக் கொண்டிருந்ததும் உண்மைக்கு புறம்பான விடயமல்ல என நம்பந்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

ஒருவருக்கு மாகாண சபை மற்றவருக்கு உள்ளூராட்சி சபை அடுத்தவருக்கு பாராளுமன்ற பொது தேர்தலில் சந்தர்ப்பம் வழங்குமாறு இம்தியாஸ் விடுத்த வேண்டுகோளுக்கு, சஜித் அது நல்ல யோசனை என தெரிவித்ததாக தெரியவருகிறது.

வேட்பாளர் நியமன பத்திரத்தில் கையெழுத்திடுவதற்காக ரஞ்சித் மந்தும பண்டார மற்றும் திஸ்ஸ அத்தநாயக்கவிடமிருந்தும் பல தொலைபேசி அழைப்புகள் கிடைத்திருந்தாலும் இப்திகார் எதுவித பதிலும் அளிக்கவில்லை.

ஆனால் பின்னர் வேட்பாளர் பட்டியலில் கையெழுத்திடும் இறுதித் தினத்தில் இறுதி தருணம் வரை காத்திருந்தாலும் அவரில்லாமல் ஏனையோர் கையெழுத்திட்டிருந்தார்கள்.

சஜித் துரோகமிழைத்ததாகவே மசாஹிம்மின் கருத்து காணப்படுகிறது;

ஆனால் வேட்பாளர் பட்டியலை சமர்ப்பிக்கும்போது மசாஹிம் மொஹம்மட்டின் பெயர் நீக்கப்பட்டிருந்தது. இறுதி வேளையில் அதை அறிந்ததால் எதுவும் செய்ய முடியாமல் போய்விட்டது அவர் உடனடியாக தொலைபேசியில் இம்தியாசுடன் கதைத்துள்ளார்.

"பாருங்கள் தலைவர் என்னுடன் சேர்ந்து படமும் எடுத்துக் கொண்டார். எனக்கு வேட்பாளர் பட்டியலில் இடம் தருவதாகவும் கூறினார். அன்று அவர் எனக்களித்த வாக்குறுதியை இன்று மீறியுள்ளார்" இதைக் கேட்டவுடன் இம்தியாஸ் மிகவும் மன வேதனை அடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

கட்சிக்காரியாலயத்துக்கு செல்லும்போது பொதுச் செயலாளர் ரஞ்சித் மந்தும பண்டார உள்ளிட்ட தேர்தல் நடவடிக்கை குழுவினர் அங்கு கூடியிருந்தார்கள்.

"பேருவளை பிரச்சினையில் நான் தலையிடமாட்டேன். தொகுதி அமைப்பாளர்கள் இருவரையும் பேருவளை மேயரையும் அழைத்து பிரச்சினையை தீருங்கள். எல்லோரும் என்னை பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். கட்சி இது விடயத்தில் சரியான முடிவை எடுக்க வேண்டும்.

அதிகாரம் மற்றும் ஏனைய காரணிகளால் சஞ்சலப்படக்கூடாது. சம்பிரதாயக் கட்சிகளை விட நாம் மாறான கட்சி. கொள்கைகள் மற்றும் நெறிமுறை, ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டு முடிவுகளை எடுக்க வேண்டும். இச் சந்தர்ப்பத்தில் சரியான முடிவை கட்சி எடுக்குமா என நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்." என இம்தியாஸ் மிகவும் மன ஏமாற்றத்துடன் தெரிவித்ததாக அறிவருகிறது.

கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் பொங்கல் விழா, கல்லூரி பதில் அதிபராக அண்மையில் நியமிக்கப்பட்ட செல்வி தெ. தேவசியானி தலைமையில் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் கலந்து சிறப்பித்தனர்.

13 ஆவது திருத்தத்தை...(03 ஆம் பக்கத் தொடர்)

முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும். இதற்கு நாம் ஆதரவு. அதேபோல பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும். நான் அமைச்சரவையில் இருந்தபோதும் இதனை தொடர்ச்சியாக வலியுறுத்தினேன் என்றார்.

சிங்கள கலாசாரத்தை...(03 ஆம் பக்கத் தொடர்)

கலந்துரையாடப்பட்டது.

சிங்கள கலாசார நிறுவனம் அமைந்துள்ள காணியில் வர்த்தக பெறுமதி மிக அதிகமாகக் காணப்படுவதால் அந்த நிறுவனத்தின் கட்டட வசதிகளை மேம்படுத்தி நிறுவனத்திற்கு பொருத்தமான செயற்பாடுகளின் மூலம் வருமானத்தை ஈட்டிக்கொள்வது தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறும் அதற்கு நிதி ஒதுக்கீடு தேவைப்படுமாயின் கலாசார அமைச்சினூடாக அதனை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியுமென்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சிங்கள கலாசார நிறுவனத்தின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை தற்போது 300 ஆகக் காணப்படும் நிலையில் அதன் அங்கத்துவத்தை மேலும் விஸ்தரிப்பதன் ஊடாக படித்த இளைஞர்களுக்கு வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்றும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்துள்ளார்.

நீதியமைச்சரின் கருத்துக்கு... (03 ஆம் பக்கத் தொடர்)

தமிழ் அரசியல்வாதிகள் இருப்பதாகவும் அவர்களுடைய ஒத்துழைப்பு இல்லாமையால் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய முடியாமல் இருப்பதாக கூறியிருப்பது விஷமத்தனமானதும் சிறு பிள்ளைத்தனமானதும். நாட்டின் நீதி அமைச்சராக இருக்கும் ஒருவர் அரசியல் கைதிகள் விடுதலை பற்றிய நீதிப்பொறிமுறைகளை அறியாதவராக இருக்கின்றாரா என்ற கேள்வி எழுகிறது.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரில் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட முடியும் என்பதை பட்டியலிட்டு ஆதாரத்தோடு ஜனாதிபதியிடம் கடந்த ஆவணி மாத சந்திப்பிலே நாங்கள் கையளித்திருந்தோம்.

அதன் பிரகாரம் 13 அரசியல் கைதிகள் வெளிவந்திருப்பது வரவேற்கத்தக்கது. அதன் அடிப்படையில் மற்ற அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட முடியும் என்பதை அரசியல் யாப்பு தெளிவாக குறிப்பிட்டிருக்கிறது.

வழக்கு நிலுவையில் இருப்பவர்கள் மாத்திரம் வழக்கை மீள பெற்ற பின்னர் விடுதலை செய்யப்பட முடியும் என்பதையும் சட்டம் சொல்கிறது.

இது இப்படி இருக்க சிறுபிள்ளைத்தனமான ஒரு புதுக் கதையை நீதி அமைச்சர் அளந்து இருப்பதானது அரசியல் கைதிகள் விடுதலையில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் பற்றிய சட்ட விவகாரங்களை அவர் அறிந்திருக்கவில்லையோ என்ற சந்தேகம் தோன்றுகிறது.

இதுவரை காலமும் விடுதலை செய்யப்பட்ட அரசியல் கைதிகள் யாருடைய ஒப்புதலின் பேரில் அதுவும் எந்த தமிழ் அரசியல்வாதிகளின் ஒப்புதல் பேரில் விடுதலை செய்யப்பட்டார்கள் என்பதை அவர் விளக்குவாரா? அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு முன்வைக்கப்பட்ட நியாயமான கோரிக்கைக்கு நாட்டின் நீதி அமைச்சர் என்ற முறையிலே விஜயதாச ராஜபக்ஷ அவர்கள் வழங்கிய பதில் அந்தக் கோரிக்கையை எள்ளி நகையாடி இருப்பதாகவே நாங்கள் கருதுகிறோம் என தெரிவித்தார்.

மின்சார உற்பத்திக்காக... (03 ஆம் பக்கத் தொடர்)

நீர் முகாமைத்துவ செயலகம் அதன் இணக்கப்பாட்டை தெரிவித்துள்ளது என்றும் பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

காணித்தகராறு; கணவன், மனைவி வெட்டிக்கொலை

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

அம்பலாந்தோட்டை ருஹுனு ரிதியகம, போலானை பிரதேசத்தில் வசித்து வந்த தம்பதிகள் வீட்டிலேயே கத்தியால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதாக அம்பாலாந்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர். இந்தத் தம்பதியினரை கொலை செய்துள்ள சந்தேகத்தில் அம்பலாந்தோட்டை பிரதேச நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். நீண்டகாலமாக இருந்து வந்த காணித் தகராறின் காரணமாகவே இந்தகொலை உறவினர் ஒருவரினால் செய்யப்பட்டுள்ளதாக ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. இவ்வாறு கொலை செய்யப்பட்டவர்கள் வீ. ஏ. சுனில் (வயது 60), அவரது மனைவி என். குசுமலதா (வயது 59) ஆகியோரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

அச்சக திணைக்களத்திற்கு...

அதேவேளை, அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக தேவையான நிதியை அந்த திணைக்களம் திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்ள நேர்ந்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க இதுபோன்று அரசாங்க அச்சகத்திணைக்களத்திற்கு பல்வேறு நிறுவனங்கள் மூலமும் கிடைக்க வேண்டிய நிலுவைப் பணத்தை அளவிடுவதற்காக முறையான வேலைத்திட்டம் ஒன்றை தயாரிக்க உள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். அதேவேளை, எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான வாக்குச்சீட்டுகளை அச்சிடுதல் உள்ளிட்ட ஏனைய நடவடிக்கைகளுக்காக தேர்தல் ஆணைக்குழுவிடமிருந்து அரசாங்க அச்சகத் திணைக்களம் 100 மில்லியன் ரூபாவை முற்பணமாக கோரியுள்ள நிலையில் அந்த நிதியையும் தேர்தல் ஆணைக்குழு இதுவரை வழங்கவில்லை என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடவுச்சீட்டுகளை வழங்க...

கொண்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகபொதுபாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார். தற்போது கொழும்பில் அமைந்துள்ள பிரதான கடவுச்சீட்டு அலுவலகத்துடன் வவுனியா, குருநாகல், மாத்தறை மற்றும் கண்டி ஆகிய நான்கு பிராந்திய அலுவலகங்கள் கடவுச்சீட்டுகளை விநியோகித்து வருகின்றன. இதேவேளை, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் 'சிப்' கொண்ட "இபாஸ்போர்ட்டை" (இலத்திரனியல் கடவுச்சீட்டு) விரைவில் அறிமுகப்படுத்தும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றவாளிகள் நிச்சயம்...

பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார்.

எனினும், அதற்கான தண்டனை முறையை ஐக்கிய மக்கள் சக்தி முன் வைத்துள்ளதாக அவர் நேற்று முன் தினம் (29) குருணாகலையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போது தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதலில் தொடர்புகொண்ட அனைவருக்கு எதிராகவும் சட்டம் அமுல் படுத்தப்படும் என்று கூறிய எதிர்க்கட்சித் தலைவர், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சம்பந்தப்பட்ட எவரையும் தப்பிக்க அனுமதிக்க மாட்டோம் என்றும் கூறினார்.

வடக்கில் சட்டத்தை மீறுவோருக்கு...

குழப்பும் வகையில் செயற்படுபவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதோடு அவர்கள் அனைவரையும் ஆளுநர் உன்னிப்பாக கவனித்து வருகிறார்.

அதன்படி பல சட்ட விரோத செயல்களை நாம் பார்த்திருக்கிறோம். சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட ஒரு நபர் மீது தாக்குதல், வீதியில் இரு குழுக்களிடையே மோதல், தற்போது நீதிமன்றத்தில் உள்ள தனியார் நிலத்துக்குள் வலுக்கட்டாயமாக நுழைதல் மற்றும் அத்துமீறி நுழைதல் மற்றும் அரசு நிலத்தில் ஊழியர்கள் பஸ் மீது கல்லெறிதல் ஆகியவை அடங்கும். இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களை பொலிஸார் கைது செய்து வரும் நிலையில் வடமாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபருடனும் கலந்துரையாடி எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே வடக்கு மக்களின் இயல்பு வாழ்க்கையை குழப்புவதற்கும் சட்டவிரோத செயற்பாடுகளை ஊக்கிவிப்பதற்கும் யாருக்கும் இடம் வழங்க முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சுதந்திர தினத்தை பகிஷ்கரிக்க...

அன்றைய தினத்தை கருப்பு தினமாக அனுஷ்டிக்கப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தாலும் ஜனநாயகம் என்ற போர்வையில் பெரும்பான்மைவாதம் வளர்ச்சியுற்று வருகிறது. அதனால் நாட்டில் வாழும் ஏனைய சமூகங்களின் சுதந்திரம் இதுவரை கிடைக்கவில்லை. சிங்கள பௌத்த மக்கள் தமக்கு சுதந்திரம் கிடைத்துவிட்டதாக நினைத்தனர். எனினும் தமக்கும் இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லை என அவர்கள் இப்போது சிந்தித்தனர். அதனால் தான் இம்முறை நாட்டின் 75ஆவது சுதந்திரதினத்தை கொண்டாடுவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ள நிலையில் நாட்டில் எவருக்கும் சுதந்திரம் கிடைக்கவில்லை என நாம் தெரிவிக்க விரும்புகின்றோம். அதனால் இம்முறை சுதந்திர தினத்தை கருப்பு தினமாக பிரகடனப்படுத்தி நாட்டிற்கு முறையான சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுக்கும் செயற்பாட்டை நாம் ஆரம்பிக்கவுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் மீதான வங்குரோத்து...

தீர்வு காணப்பட்டுள்ள போதும் மேலும் சில பிரச்சினைகள் மீதியாகவுள்ளன என்பதை சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர், மிக விரைவில் அந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியானது அனைத்து சந்தர்ப்பங்களிலும் நாட்டு மக்களின் முன்னேற்றம் கருதியே நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளது. அதேபோன்று ஐக்கிய தேசிய கட்சி நாட்டை ஆட்சிசெய்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் நாடு முன்னோக்கி சென்ற நிலையில் வேறு அரசியல் தரப்பினரால் இனவாதம் மதவாதம் விதைக்கப்பட்ட நிலையே ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தோல்வியடைய காரணமானது.

எவ்வாறெனினும் அந்தக் கட்சி அனைத்து சந்தர்ப்பங்களிலும் மக்கள் பக்கமே நின்று செயற்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் கலந்துகொண்ட கூட்டமொன்றின் போதே அமைச்சர் அவ்வாறு தெரிவித்துள்ளார்.

சுவிட்சர்லாந்து விபத்தில்...

சுவிஸ் Aargau மாநில விபத்தில் கடந்தவாரம் ஏற்பட்ட ஒரு கோர விபத்தில் தந்தை மற்றும் மகன் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில் விபத்தில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர்கள் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் சுழிபுரம் கிழக்கை பூர்வீகமாக கொண்ட 69 வயதான தனபால சிங்கம் கண்ணன் மற்றும் 34 வயதான கண்ணன் சுரேஷ் ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் சுரேஷ் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில், கண்ணன் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். மேலும் இந்த விபத்தில் அவர்கள் சென்ற கார் பலத்த சேதமடைந்திருந்தது. விபத்து தொடர்பில் அந்நாட்டு பொலிஸார் விசாரணைகனை முன்னெடுத்துள்ளனர்.

கண்காணிப்பு பணிகளுக்கு...

சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார். எவ்வாறாயினும், இரண்டு கண்காணிப்புக் குழுக்கள் மட்டுமே வாக்களிப்பு நிலையங்களுக்குள் நுழைந்து கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படும் எனவும் அவர் கூறினார். ஏனைய அமைப்புகள் வெளிப்புற கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்காக 7000 சுயாதீன கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும், அடுத்த வாரம் முதல் மாவட்ட மட்டத்தில் தற்போது கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தேர்தல் கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பெஃப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

பூமிக்கு அருகே இன்று...

கண்டுபிடித்துள்ளனர். இந்த நீண்டகால வால்மீன் அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா மவுண்டுபலோமேரில் சுவிக்கிடிரான்சியன்ட் பெசிலிட்டி மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் காலம் 50 ஆயிரம் ஆண்டுகள் ஆகும். கடந்த 12ம் திகதி சூரியனில் இருந்து பெரிகோலினை கடந்து பூமி வட்டபாதையில் செல்லும் வால் நட்சத்திரம் பெப்ரவரி 1ம் திகதி பூமிக்கு அருகே நெருங்கி வரும். 50 ஆயிரம் ஆண்டுகளுக்கு பிறகு இந்த நிகழ்வு நடைபெறுகிறது. நாசாவின் கூற்றுப்படி, வடக்கு அரைக்கோளத்தில், பச்சை வால் நட்சத்திரம் ஜனவரி பிற்பகுதியில் விடியற்காலையில் தென்படும். வடக்கு அரைக்கோளத்தில் உள்ள வால் நட்சத்திரத்தை பார்ப்பதற்கான கடைசி சிறந்த வாய்ப்பு ஜனவரி 30. அப்போது போலரிஸ், நார்த் ஸ்டாரின் முடிவிற்கு இடையில் தெரியும். பின்னர் பெப்ரவரி தொடக்கத்தில், வால்மீன் தெற்கு அரைக்கோளத்தில் தெரியும் என்று நாசா தெரிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து...

தொடர்பில் நேற்றைய தினம் நிதியமைச்சில் அவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டின்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர், இந்த வருடத்தில் 3.5 பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்ப்பதாகவும் அடுத்த வருடத்தில் அதனை மேம்படுத்தும் வகையில் பயணத்தை முன்னெடுக்க முடியுமென்றும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி தொடர்பில் இங்கு மேலும் தெளிவுபடுத்தியுள்ள இராஜாங்க அமைச்சர்; தற்போதைய பாரிய நெருக்கடி நிலை வருமானம் குறைந்ததாலேயே ஏற்பட்டுள்ளது. புதிய வரி தொடர்பில் பேசப்பட்டாலும் அவற்றில் பல வரிகள் ஏற்கனவே நடைமுறையில் இருந்தவைதான். வருமான வரி 2010 முதல் நடைமுறையிலிருந்துள்ளது. அதனையே நாம் மீள அறிமுகப்படுத்தியுள்ளோம். சில வரிகளின் அளவு அதிகரித்துள்ளதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். எனினும் அவை 2018 ஆம் ஆண்டில் நடைமுறையிலிருந்தவையே. வற்வரியும் அவ்வாறுதான். 15 வீதமாகவிருந்த வற்வரி 8 வீதமாக குறைக்கப்பட்டது. அதனைமீண்டும் இரண்டு தடவைகளில் நாம் 15 வீதமாக அதிகரித்துள்ளோம்.

அந்தவகையி' நாட்டின் வரி வருமானம் 1800 பில்லியன் ரூபாவாகும். அந்தவகையில் நட்டமீட்டும் நிறுவனங்களின் நட்டமானது 950 பில்லியன் ரூபாவாகும். வருமானத்தில் அரைவாசியை நட்டமீட்டும் நிறுவனங்களுக்காக செலவிடவேண்டியுள்ளது. பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 619 பில்லியன் ரூபா நட்டத்தில் இயங்குவதுடன் இலங்கை விமான சேவை நிறுவனம் 129 பில்லியன் ரூபா நட்டத்திலும் மின்சார சபை 151 பில்லியன் ரூபா நட்டத்திலும் இயங்குகின்றன.

மறுசீரமைப்பு அவசியம்தானா என்பது தொடர்பில் தீர்மானிக்க வேண்டியுள்ளது. கடன் பெற்றுக்கொள்ளப்படாவிட்டால் பணம் அச்சடிக்கும் கொள்கையை மேற்கொள்வதைத் தவிர வேறு மாற்றுவழிகள் கிடையாது. இவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு நாம் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதே ஒரேவழி. அவ்வாறான நாடுகள் எமக்கு உதவி வழங்கவேண்டுமானால் எம்மிடமும் அர்ப்பணிப்புகளை எதிர்பார்க்கின்றன. அந்த நாடுகளின் மக்கள் வழங்கும் வரி மூலமே நாமும் கடனைப் பெற்றுக்கொள்ள முடிகிறது. அந்தவகையில், நாம் எந்த அர்ப்பணிப்பையும் சுமைகளையும் ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவர்கள் அதற்குத் தயாரில்லை. நாம் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு அன்றி வேறுவழி கிடையாது. அவ்வாறு சர்வதேச நாணய நிதியத்துடன் நாம் இணைக்கப்பாட்டுக்கு வரமுடியாவிட்டால் பாரிய சிக்கல்களை எதிர்நோக்க நேரிடும்.

கடந்தாண்டு ஜுன், ஜுலை, ஆகஸ்ட் மாதங்களில் நாட்டு மக்கள் எதிர்கொள்ள நேர்ந்த அசௌகரியங்களைவிட மோசமான நிலையை நாம் எதிர்கொள்ள நேரிடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நாட்டில் டெங்கு நோய்...

பதிவாகியுள்ளதோடு அவர்களில் 32.5 சதவீதமானவர்கள் மேல் மாகாணத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடந்த 10 மாதங்களில் மாத்திரம் 20,334 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு டெங்கு நோயினால் 145 நோயாளர்கள் உயிரிழந்துள்ளதாகவும் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நாட்களில் பதிவாகும் காய்ச்சலின் அறிகுறிகளும் டெங்குவின் அறிகுறிகளும் பெரும்பாலும் ஒத்திருப்பதால், நோயின் நிலையைத் தீர்மானிக்காமல் உட்கொள்ளும் மருந்துகளால் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

எமது பாதுகாப்பை...

அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதால் அவர்களின் பாதுகாப்பை பலப்படுத்துமாறு கோரி தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனாதிபதிக்கு நேற்றைய தினம் கடிதத்தை அனுப்பியுள்ளார். தேர்தலுக்கான சரியான சூழலை உருவாக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருப்பதால் இந்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு சில நிறுவனங்களின் ஆதரவு மந்தகதியில் காணப்படுவதாக ஜனாதிபதிக்கு இந்தக் கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

மின் கட்டணம் உயரின்...

மின் கட்டணம் காரணமாக பேக்கரிகளின் மின்கட்டணங்கள் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதாகவும் மீண்டும் அந்தக் கட்டணம் அதிகரிக்கப்பட்டால் பேக்கரி உரிமையாளர்களால் அதனை எந்த

விதத்திலும் சுமக்க முடியாது என அந்த சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பேக்கரி கைத்தொழிலுக்கு தேவையான கோதுமை மா, முட்டை மற்றும் ஏனைய மூலப்பொருட்களின் விலைகள் வெகுவாக அதிகரித்துள்ளன. அத்துடன் எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டண அதிகரிப்பு காரணமாக பேக்கரி தொழிற்துறை பெரும் வீழ்ச்சியடைந்துள்ளது என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்தகைய சூழ்நிலையில் மீண்டும் மின்கட்டணம் அதிகரிக்கப்படுமானால் கண்டிப்பாக பாண் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளும்

அதிகரிக்க நேரும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சுற்றுலா துறையை...

வருகைத் தந்த அவர், இலங்கையின் அழகிய இடங்களுக்கு பயணம் மேற்கொண்டு அதன் பெருமைகளை உலகிற்கு தெரியப்படுத்தியுள்ளார்.

Lets Lanka என்ற பெயரில் இலங்கைக்கு பயணித்த அவர், சீகிரியா உள்ளிட்ட பிரபலமான சுற்றுலா இடங்களுக்கு பயணித்துள்ளார். அத்துடன் காணொளிகள் ஊடாக இலங்கையின் அழகை உலகுக்கு தெரியப்படுத்தும் நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டுள்ளார்.

சிறிய கடைகளில் உணவு உட்கொண்டு, பானங்கள் பெற்றுக் கொண்டுள்ளதுடன் தமிழ் ரசிகர்களுடன் செல்பியும் எடுத்துள்ளார்.

இலங்கைக்கு வாருங்கள் எனவும் இலங்கையின் அழகை வந்து ரசிக்குமாறும் அவர் சமூக வலைத்தளங்களில் ரசிகர்களிடமும் சினிமா கலைஞர்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கையின் அந்நிய செலாவணியை ஈட்டும் துறைகளில் ஒன்றாக சுற்றுலாத்துறை உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரச நிறுவனங்களில்...

தேசியக் கொடி ஏற்றப்படும். பொது நிர்வாகம் மற்றும் உள்துறை அமைச்சு இது தொடர்பான சுற்றறிக்கையையும் வெளியிட்டுள்ளது. அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நிறுவனங்களின் தலைவர்களுக்கு உரிய சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார ரீதியான தீர்வே...

தற்போது எந்த பிரயோசனமுமற்ற நிலையில் காணப்படும் 270 ஏக்கர் காணியில் 100 மெகாவோட் சூரிய சக்தி மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு செயற்றிட்டமொன்றை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் கனேடிய நிறுவனமான 3W சூரிய சக்தி மின்சார முகாமைத்துவ தனியார் நிறுவனம் அதற்கான முதலீடுகளை மேற்கொள்ளவுள்ளது. அதற்காக 150 மில்லியன் அமெரிக்கன் டொலர் முதலீடு செய்யப்படவுள்ளது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நேற்று இடம்பெற்ற வேலைத்திட்டமொன்றின் போது இந்த திட்டத்துடன் சம்பந்தப்பட்ட காணியை ஒப்படைக்கும் நடவடிக்கை அமைச்சர் பந்துல குணவர்தனவின் தலைமையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மலைச்சாரல்

மாணவிக்கு வீடு கையளிப்பு

அவிசாவளை நிருபர்

எஹெலியகொட தமிழ் வித்தியாலய மாணவி செல்வி ஆகர்ஷாவிற்கு 19 இலட்சம் ரூபா செலவில் புதிய வீடு, உரிய மாணவியிடம் அண்மையில் (28) கையளிக்கப்பட்டது.

கிளிநொச்சியை தளமாகக் கொண்டு இயங்கும் காவேரி கலா மன்றத்தின் அனுசரணையில் இவ்வீடு கட்டப்பட்டது.

பாடசாலை அதிபர் ரா. தெய்வராஜ் தலைமையில், எஹெலியகொட பிரதேச செயலாளர், கிராம சேவகர், அரச உத்தியோகஸ்தர்கள், மற்றும் விஷேட விருந்தினர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் நலன் விரும்பிகள் மற்றும் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

13 ஐ நிறைவேற்றினால் ஒன்பது மாகாணங்களும் நன்மையடையும்

ஹற்றன் சுழற்சி நிருபர்

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தமென்பது சர்வதேச உடன்படிக்கையாகும். இதனை அமுல்படுத்த வேண்டியது அரசின் கடப்பாடாகுமென,தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும், மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹற்றனில் உள்ள மலையக மக்கள் முன்னணியின் தலைமையகத்தில் நேற்று (30) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தமென்பது நாட்டின் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

எனினும், இது இன்னும் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை.

பொலிஸ், காணி அதிகாரங்கள் தொடர்பில் போலியான விம்பம் உருவாக்கப்பட்டுள்ளது.

13 ஐ முழுமையாக அமுல்படுததினால் வடக்கு, கிழக்குக்கு மட்டுமல்ல, ஒன்பது மாகாணங்களும் பயன் கிடைக்கும். தமிழர்களுக்கு எதிரான சில சக்திகளே 13 தொடர்பில் போலி பிரச்சாரத்தை முன்னெடுத்துவருகின்றன. இவற்றை அரசாங்கம் கருத்திற்கொள்ளக் கூடாது.

13 ஐ அமுல்படுத்துவதில் அக்கறை செலுத்த வேண்டும்.

பிரிட்டன், மலேசியா போன்ற நாடுகளில் உள்ளூராட்சி சபைகளுக்கு உள்ள அதிகாரங்கள்கூட, எமது நாட்டில் இல்லை.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறுமா? என்பது குறித்து எதிர்வரும் (10) ஆம் திகதியே உறுதியான முடிவுக்கு வரமுடியும்.

காணி உரிமை மற்றும் பல்கலைக் கழகம் உள்ளிட்ட மலையக அடையாளங்கள் அவசியம்.

இவற்றை பெற்றுக்கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மலையகத்தின் 200 வருட நிகழ்வில் இதனை வலியுறுத்துவோம். அத்துடன், மலையகம் 200 நிகழ்வுக்கு தமது நாட்டின் சார்பில் சிறப்பு பிரதிநிதி ஒருவரை இந்தியா அனுப்பும்." என்றும் அவர் தெரிவித்தார்.

நீர் வீழ்ச்சியில் சறுக்கி விழுந்த உல்லாசப்பிரயாணி காயம்

தலவாக்கலை குறூப் நிருபர்

நுவரெலியா லவர்சிலிப் நீர்வீழ்ச்சியை பார்வையிடச் சென்ற வெளிநாட்டு சுற்றுலாப் பயணி ஒருவர், நீர்வீழ்ச்சியில் ஏற முற்பட்ட போது வழுக்கி விழுந்துள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவிக்கின்றனர். ஜேர்மன் நாட்டவர் ஒருவரே இந்த விபத்தில் சிக்கியுள்ளார். காலில் முறிவு ஏற்பட்டதால், நுவரெலியா பொது வைத்தியசாலையில் இவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். தனது மனைவியுடன் சுற்றுலாப் பயணியாக வந்திருந்த இவர், நுவரெலியா பகுதியில் சில நாட்களாக தங்கியிருந்து நுவரெலியா நகருக்கு அருகிலுள்ள லவர்சிலிப் நீர்வீழ்ச்சியை பார்வையிடச் சென்ற போதே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. ஆரம்ப சிகிச்சை பெற்றுக் கொண்ட பின்னர் தானாக முன்வந்து கொழும்பு பிரதேசத்திலுள்ள தனியார் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அவர் சென்றுள்ளதாக நுவரெலியா பொது வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்தார்.

கம்பளை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருக்கோவிலில் சங்காபிஷேகம்

நாவலப்பிட்டி சுழற்சி நிருபர் டி.வசந்தகுமார்

கம்பளை நகரத்தின் மத்தியில் அமைந்திருக்கும் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருக்கோவில், 1834ம் ஆண்டு நாட்டுக்கட்டை நகரத்தார்களால் கட்டப்பட்டதாகும்.

அதன் பின் கம்பளை பொது மக்களால் 2022ம் ஆண்டு இந்த ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு 23.03.2022 மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

03.02.2023 முதல் 05.02.2023 வரை மூன்று நாட்கள் தை பூச உற்சவ விஷேட அலங்கார பூஜைகள் நடைபெறும். 03.02.2023 வெள்ளிக்கிழமை காலை 5.30 மணிக்கு திருமஞ்சனம் எடுத்தல் நடைபெறும். காலை 8.00 மணிமுதல் அஷ்டத்திர சங்காபிஷேகம் (108) நடைபெற்று பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூஜைகளைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும்.

பிற்பகல் 3.00 மணிக்கு புதிதாய் வடிவமைக்கப்பட்ட எண்கோண முகபத்திர கமலகாரத் சித்திரத் தேர் வெள்ளோட்டம் நடைபெறும். மாலை 7.00 மணிக்கு முதல் விஷேட வசந்தமண்டப பூஜை, சுவாமி உள் வீதி உலா வருதல் என்பன நடத்தப்பட்டு திருவருட் பிரசாதம் வழங்கப்படும். இரண்டாம் நாள் 04.02.2023 காலை 9.00 மணிக்கு அஷ்டத்திர சங்காபிஷேகம் (108) நடைபெற்று பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூஜைகளைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும்.மூன்றாம் நாள் 05.02.2023 காலை 9.00 மணிக்கு அஸ்டோத்தர சங்காபிஷேகம் (108) நடைபெற்று பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூஜை நடாத்தப்பட்டு அன்னதானம் வழங்கப்படும். மாலை 4.00 மணி முதல் பொங்கல் பூஜை நடத்தப்படும். தொடாந்து சக்கர காவடி உள் வீதி உலா வருதலும் மாலை 6.00 மணிமுதல் விஷேட வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து ஸ்ரீ சித்தி விக்னேஸ்வர சுவாமியுடன் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி வெளி வீதியில் வந்து அருள்பாலிக்கும் தேர்த் திருவிழா நடைபெறும். இந்த ஆலயத்தில் வைகாசி விசாகம், ஆடிவேல், கந்த சஷ்டி முதலிய திருவிழாக்கள் வெகு சிறப்பாக நடைபெறுகின்றன. கமபளை வாழ் இந்து மக்களின் குறை தீர்த்து எமைகாக்கும் குமரனவன் திருத்தேரை வடம் பிடிக்க வரும்படி ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருக்கோவில் ஆலய அறங்காவலரும் பரிபாலன சபையினரும் அழைக்கின்றனர்.

கெசல்கமுவ ஓயாவில் ஆணின் சடலம் மீட்பு

ஹற்றன் சுழற்சி நிருபர்

பொகவந்தலாவ பொகவான கெசல்கமுவ ஓயாவில் ஆணின் சடலம் ஒன்று ஞாயிற்றுக்கிழமை (29) மீட்கப்பட்டதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

சடலமாக மீட்கப்பட்ட நபர் தீடீரென காணாமல் போயிருந்தார். இந்நபரை தேடும் நடவடிக்கையில் உறவினர் ஈடுபட்டிருந்தனர். இதையடுத்து, சடலமொன்று மிதப்பதாக தகவல் தெரிவிக்கப்பட்டது. உடன்,ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸார்,

சம்பவ இடத்தில் உயிரிழந்த நபரின் பாதணிகள், குடை, மாதாந்த வைத்திய பரிசோதனை, புத்தகம் என்பவற்றை மீட்டனர்.மீட்கப்பட்ட புத்தகத்தில் தனக்கு வியாதி தாங்க முடியவில்லை என்றும், இம்முடிவுக்குத் தானே பொறுப்பு என்றும் தனது மகன் மிகவும் நல்லவர் என்றும் எழுதியிருந்தார்.

இரத்தினக்கல் தரகர்களிடம் வரி அறவிடும் முயற்சிக்கு எதிர்ப்பு

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

இரத்தினக்கல் தொழில்துறையில் இடைத்தரகர்களாக தொழில் புரிபவர்களும், இரத்தினக்கல் வியாபார அனுமதிப்பத்திரம் பெற வேண்டும் என்ற தீர்மானத்துக்கு,இரத்தினக்கல் தரகர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இரத்தினக்கல் உரிமையாளரிடமுள்ள கல்லை வர்த்தகர்களுக்கு விற்பனை செய்யும் நவடிக்கையையே தரகர்கள் செய்கின்றனர். இந்நிலையில்,இவர்களும் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெறவேண்டும் என்ற தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

இது வரைக்கும், இரத்தினக்கல் உரிமையாளர் மற்றும் இரத்தினக்கல் அகழ்வுப் பணிகளில் ஈடுபடுவோரேஅனுமதிப்பத்திரம் பெற்றிருந்தனர்.

இந்நிலையில், தரகர்களையும் அனுமதி பெறுமாறு வற்புறுத்துவது ஏற்புடையதல்ல என,இவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

மாவட்ட சாம்பியனாகத் தெரிவு

பாடசாலை மட்ட ஸமபோச கிண்ண உதைப்பந்தாட்ட போட்டிகள் நேற்று முன்தினம் (29) மெதகம பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன. இப்போட்டியில்,14 மற்றும் 16 வயதுக்கு கீழான மாணவர்கள் பங்குபற்றினர். இதன்போது மொனராகலை பகினி கஹவெல முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய கல்லூரி) மாணவர்கள், பல பாடசாலை மாணவ அணிகளை வென்று, மாவட்ட சாம்பியனானது. இதையடுத்து, இப்பாடசாலை அணியினர் தேசிய மட்ட போட்டிகளுக்கு தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது.

(படம்: ஊவா சுழற்சி நிருபர்.)

புலமைப் பரீட்சையில் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்ப்பு

அக்குறணை குறூப் நிருபர்

தெல்தெனிய கல்வி வலயத்திலுள்ள இரங்கலை ஆரம்ப பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் இரண்டு மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

தெல்தெனிய கல்வி வலயத்திலுள்ள மிகப் பின் தங்கிய பெருந்தோட்ட பாடசாலை இதுவென்பது குறிப்பிடத்தக்கது.இருப்பினும் 2013ம் ஆண்டு முதல் இப்பாடசாலையிலிருந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் சித்தியடைந்து வருகின்றனர். இதற்கு, இப்பாடசாலையின் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் வழிகாட்டி வருகின்றனர்.

அண்மையில் வெளியான பரீட்சை முடிவுகளின் படி பிலிப் குமார் ஹரிஹரன் 149 புள்ளிகளையும், குமாரவேல் அசோக் 147 புள்ளிகளையும் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

மேற்படி இம்மாணவர்களுக்கு, கல்வி கற்பித்த ஆசிரியர்களான எஸ் சரத்பாபு, எஸ்.ஏ.இ. செல்வராஜா மற்றும் அதிபர் எல். எஸ் ஜோசப் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

தோட்டப்புற மாணவர்களுக்கு இலவசக் கொப்பிகள் அன்பளிப்பு

நுவரெலியா கல்வி வலையத்திற் குட்பட்ட வங்கி ஓயா மேல் தோட்ட பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக அப்பியாச கொப்பிகள் (29) வழங்கப்பட்டன.வங்கி ஓயா மேல் தோட்டத்தில் தொழில் செய்து ஓய்வு பெற்ற நிலையில், தற்போது கொழும்பில் சாதாரண தொழிலாளியாக பணியாற்றி வரும் காளிமுத்து காந்தரூபன் என்பவர், இந்த இலவச அப்பியாச கொப்பிகளை வழங்கினார்.

போக்குவரத்தில் பின்தங்கிய கஷ்டப்பிரசேமாக விளங்கும் வங்கி ஓயா மேல் தோட்ட பாடசாலை மாணவர்கள், கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்றும்,மாணவர்களை கல்வியில் உற்சாகப்படுத்தும் நோக்கில் இந்த பணியை கடந்த நான்கு வருடங்களாக காந்தரூபன் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், தனது சொந்த ஊரில் தோட்டப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் வளர்ச்சிக்காக தன்னால் இயன்ற உதவிகளை செய்ய முன்வந்துள்ள தொழிலாளி கா.காந்தரூபனின் செயலை, ஊர் மக்கள் மற்றும் பாடசாலை நிர்வாகம் பாராட்டியுள்ளது. (ஆ.ரமேஸ்)

ஆலய மஹா கும்பாபிஷேகம்

நுவரெலியா மாவட்டம் கந்தப்பளை தேயிலை மலை தோட்ட அருள் மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய புனராவர்தன அஷ்டபந்தன குண்டபட்ஷ மஹா கும்பாபிஷேக குடமுழுக்கு பெருவிழா எதிர்வரும் (03.02.2023) வெள்ளிக்கிழமை நடைபெற அம்பிகை திருவருள் கைகூடியுள்ளது. இதனையொட்டி எதிர் வரும் (01.02.2023) புதன் கிழமை கிரியாகால நிகழ்வுகள் விநாயகர் வழிபாடுடன் ஆரம்பமாகவுள்ளது. இதை தொடர்ந்து (02.01.2023) வியாழ கிழமை விசேட பூஜைகளுடன் காலை 10 மணிமுதல் மாலை 05 மணிவரை சுவாமிகளுக்கு அடியார்கள் எண்ணை காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

மறுநாள் (03.02.2023) காலை வெள்ளி கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும் விசேட பூஜைகளுடன்,காலை 10.20 மணிக்கு மஹா கும்பாபிஷேகம் வேதாகம வித்தியாபதி ஷாஹித்ய பாஸ்கரன், ஷப்தரிஷி குருபீடாதிபதி தேசமாண்ய சிவஸ்ரீ குமார விக்னேஸ்வர குருக்களின் தலமையில் இடம்பெறவுள்ளது. இதை தொடர்ந்து பகல் 12 மணியலவில் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படவுள்ளதாக ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது.

கட்டணங்களை செலுத்தும் இறுதித் தினம்

கினிகத்தேனை தினகரன் நிருபர்

அம்பகமுவ பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட வட்டவளை பிரதேசத்தில் வசிக்கும் மக்கள், பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களுக்கான நடமாடும் சேவை 31ம் திகதி (இன்று) வரை வட்டவளை பொது நூலகத்தில் இடம்பெறுகின்றது. இதன டிப்படையில் அம்பகமுவ பிரதேச சபைக்கு செலுத்தப்பட வேணடிய வீத வரி, தண்ணீர் கட்டணம்,வியாபார அனுமதிப்பத்திர கட்டணம், வியாபார வரி,கடைக் கூலி, முச்சக்கர வண்டி கட்டணம் ஆகியவற்றை செலுத்த தவறியவர்கள், குறித்த நடமாடும் சேவையில் செலுத்த முடியுமென அம்பகமுவ பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்

வத்துகாமம் நிருபர்

மடவளையைச் சேர்ந்த கே.எம். இஸ்கந்தர் மொகிடீன் அண்மையில் தெல்தெனிய மாவட்ட நீதவான் தேவிகா சீ ஜயவர்தன முன்னிலையில், அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமானம் செய்து கொண்டார்.

ஓய்வு பெற்ற அதிபரான இவர், கண்டி மாவட்டத்தில் பல்வேறு பாடசாலைகளில் அதிபராகக் கடமையாற்றியுள்ளார். இது தவிர சமூக சேவைலயில் கூடுதல் ஈடுபாடுகாட்டும் இவர், பல தனியார் பாடசாலைகள் மற்றும் மத்ரசாக்களிலும் பகுதி நேர ஆசிரியராகவும் பணியாற்றியவராவார். பாத்ததும் பறை பிரதேச மத்தியஸ்த சபையில் 10 வருடங்களுக்கு மேல் மத்தியஸ்தராகக் கடமையாற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

மடவளை ஜாமியுல் கைராத் ஜும்மா பள்ளி பரிபாலன சபையிலும் நீண்டகால உறுப்பினராக இருந்த இவர், மடவளை மதீனா தேசிய பாடசாலை, கண்டி புனித சில்வெஸ்டர்ஸ் கல்லூரி, பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி என்பவற்றின் பழைய மாணவருமாவார்.

அறநெறிக்கல்வியால் அகிலத்தை வெல்வோம் என்ற நோக்கத்தோடு ஆரம்பித்து பதுளை மாவட்டத்தில் இந்து சமய வளர்ச்சிக்கும் இந்து இளம் சிறார்களின் பூரணத்துவமான அறநெறிக்கல்வியின் உயர்விற்கு பல சேவைகளையாற்றி வருகின்ற பதுளை மாவட்ட இந்து சமய அபிவிருத்தி பேரவையின் ஏற்பாட்டின் கீழ் லுணுகலை பிரதேச செயலகத்திற்குட்பட்ட இந்து அறநெறிப்பாடசாலைகளை இணைத்து நடாத்தும் பிரதேச தைப்பொங்கல் விழா 2023 லுணுகலை நகர் ஸ்ரீ பட்டிப்பளை நாட்டுக் கதிரேசன் ஆலய வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. இதன் போது அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கலை, கலாசார போட்டிகளை நடாத்தி வெற்றியீட்டியவர்களுக்கு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு மாணவர்களுக்கான பகலுணவு லுணுகலை நகர் ஸ்ரீ பட்டிப்பளை நாட்டுக்கதிரேசன் ஆலய அறங்காவலர் சபையினரால் வழங்கப்பட்டது.

திருமணம் கடவுளிடமிருந்து கிடைக்கும் பரிசு

திருத்தந்தை பிரான்சிஸ்

நாம் தனித்தனியாக அழைக்கப்பட்டாலும் ஒரு பெரிய குழுவின் அங்கமாகவே இருக்கின்றோம் என திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் ஆரோக்கியமான மற்றும் சுதந்திரமான மனப்பான்மையுடன் வாழ நாம் சேர்ந்து இருக்கும் கிறிஸ்தவ குழுவிலோ அல்லது நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பிலோ அலட்சியத்துடன் இருந்துவிடக் கூடாது என்றும் திருத்தந்தை அறிவுறுத்தியுள்ளார்.

திருத்தூதர்களின் அனுபவம் எப்போதும் தனிப்பட்ட மற்றும் பொதுவான என்ற இரண்டு பகுதிகளை கொண்டுள்ளது என்பதை குறிப்பிட்டுள்ள திருத்தந்தை, அவற்றைப் பிரிக்க முடியாது என்றும் எப்போதும் ஒன்றிணைந்தே செல்ல வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ள அருட்பணியாளர்களை சந்திக்கும் நிகழ்வின் போதே திருத்தந்தை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாம் தனித்தனியாக அழைக்கப்பட்டிருந்தாலும் எப்போதும் ஒரு பெரிய குழுவின் அங்கமாகவே இருக்கின்றோம் என்பதை மனதில் பதித்துக் கொள்ள வேண்டும்.

அந்த வகையில் பேசுவதற்கு முன்பு யோசித்து கவனமுடன் பேசவும் ஒன்றிணைந்து செயல்படவும் குழுவின் முதல் இடத்தில் மட்டுமல்ல நடுவிலும் இறுதியிலும் நம்மை பொருத்தமாக வைத்துக் கொள்வது எப்படி என்பதையும் புரிந்து செயற்பட வேண்டும் எனவும் திருத்தந்தை தெரிவித்துள்ளார்.

எமது வறுமை நிலை மற்றும் பலவீனத்தின் மத்தியிலும் நம்மை அழைத்த இயேசுவின் அழைப்பிற்கு நாம் முழுமையான மனம் மாற்றத்துடன் பதில் அளிக்க வேண்டும் எனவும் அதிகப்படியான வாழ்க்கை முன்னேற்றக் கொள்கைகள், இரட்டைத்தனமான வாழ்க்கை, உலக திருப்திக்கான தேடல் போன்றவற்றை விடுத்து சிலுவையைத் தழுவுதல், ஜெபம் போன்றவற்றில் முக்கியத்துவம் செலுத்த வேண்டும் என்றும் திருத்தந்தை தெரிவித்துள்ளார்.

இறைவனின் கருணையால் தொடப்படும் நாம், அந்த இரக்கத்தின் திறனால் கடவுளுடைய நெருக்கத்தின் அனுபவத்தை காண வேண்டும் எனவும் எல்லா சமூக சூழ்நிலைகளிலும் உடன் பிறந்த உறவைத் தேடவும், அனைவரையும் வரவேற்கவும் இணைந்து பணியாற்றவும் ஒருமித்த தீர்வுகளை தேடவும் கற்றுக் கொள்ள வேண்டும் என்றும் திருத்தந்தை வலியுறுத்தியுள்ளார்.

திருமணம் தொடர்பில் தெரிவித்துள்ள திருத்தந்தை

திருமணம் என்பது எப்போதும் கடவுளிடமிருந்து வரும் பரிசு என்றும் திரு அவையின் மேப்புப் பணியின் பிரதிபலிப்பாகவும் நற்செய்தியை அறிவிப்பதற்கான முக்கிய தளமாகவும் குடும்பம் செயல்படுகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

மெரினா ராஜ்

திருமணம் எப்போதும் ஒரு பரிசு அதன் நம்பகத்தன்மை தெய்வீக நம்பகத்தன்மையின் மீது தங்கியுள்ளது தெய்வீக பலனை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆணும் பெண்ணும் இந்த பரிசை வரவேற்கவும் சுதந்திரமாக ஒருவருக்கொருவர் ஒத்துழைக்கவும் இதன் வழியாக அழைக்கப்படுகிறார்கள் என்றும் திருத்தந்தை தெரிவித்துள்ளார்.

திருத்தந்தையின் 40 ஆவது திருத்தூது பயணம் இன்று இடம் பெறவுள்ளதுடன் அவர் காங்கோ மற்றும் தென் சூடானுக்கும் திருத்தூது பயணம் மேற்கொள்ளவுள்ளார். பெப்ரவரி 5ஆம் திகதி வரை இந்தப் பயணம் இடம் பெறவுள்ளது. இந்தப் பயணம் நல்லிணக்கத்தின் பயணமாக அமையும் என அந்த திருத் தூது பயணத்தின் ஏற்பாட்டாளரான கருதினால் பியத்ரோ பரோலின் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

அதிக மக்கள் தொகையைக் கொண்ட ஆபிரிக்க கண்டத்தில் வாழும் மக்களின் நிலைமையை நேரில் காணச் செல்லும் திருத்தந்தையின் பயணம், உலகத்தின் கவனத்தை ஈர்க்கும் என்றும் அந்த பயணம் அமைதிப்பயணமாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புனித டொன் பொஸ்கோ சிறந்த ஒரு அருட்பணியாளராகவும் சிறுவர்களுக்கான வழிகாட்டியாகவும் காணப்படுகிறார்.

புனித டொன்போஸ்கோ கண்ட கனவு ஒன்று பின்னர் அவரது வாழ்க்கையில் முக்கிய கட்டங்களில் 15 முறை திரும்பத்திரும்ப வந்தது.



இன்றைய புனிதர்

புனித டொன் பொஸ்கோ

இதன் மூலம் தேவ அழைத்தலில் மறைந்துள்ள சில பேருண்மைகளை ஆழமாக அவர் உணர்ந்தார்.

இக்காட்சிகள் அவரது தேவ அழைத்தலின் நாளிலிருந்து இறுதி வரை மரியன்னையின் சிறப்பான சலுகை அவருக்குக் கிடைத்ததையும் வெளிக்கொணருகின்றன.

திருத்தந்தை 9 ஆம் பத்திநாதர் இவரிடம் அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதக் கேட்டுக் கொண்டார்.

அதில் டொன் பொஸ்கோ "ஒருமுறை வீட்டு முற்றத்தில் சிறுவர் பலரின் நடுவில் நான் நிற்பதாகக் காட்சி கண்டேன். சிலர் நன்றாகக் கூடிக்குலாவிக் கும்மாளம் போட்டு விளையாடுகின்றனர். மற்றவர்கள் பழிச்சொற்களை உதிர்க்கின்றனர். நான் அந்த தீயவர்களைக் கடிந்து அடித்துத் தவற்றை நிறுத்தச் சொன்னேன். பின்னர் வெண்ணாடை அணிந்த ஒருவர் "இவர்களைக் கண்காணித்துக் கொள். அடித்துத் துன்புறுத்தி இவர்களை நீ கவர முடியாது. மாறாக, பொறுமை அமைதியான இயல்பு தான் வெல்லும்" என்றார்.

உடனே அழகான ஒரு பெண் தோன்றினார். அப்போது கொடிய விலங்குக் கூட்டம் ஒன்று காணப்பட்டது. "இந்த விலங்குகளுக்கு இப்போது நடக்கப் போதுபோல் இந்தச் சிறுவர்களிடமும் நீ நடந்துகொள்ள வேண்டும் என்றார். இவ்வாறு சொன்னபோது விலங்கினங்கள் சாந்தமுள்ள ஆடுகளாக மாறின. மாறி அன்னை மரியுடனும் இயேசுவுடனும் ஆரவாரத்துடன் விளையாடின." மறுநாள் காலையில் டொன்பொஸ்கோ இந்தக் கனவைத் தன் தாயிடம் கூறினார். "ஜியோவான்னி, ஒருநாள் குருவானவராகப் போகிறார் என்று கூறினர் தாய். அப்போது பினிதருக்கு வயது 9 மட்டுமே.

இவரது குருத்துவப் பணி முதலில் ட்யூரின்நகரில் தொடங்கியது. தனது 60வது வயதில் ஆயிரக்கணக்கான சிறுவர்களுக்கு ஞானப் பயிற்சிகள் அளித்த பிறகு, தமது வாழ்வைத் திரும்பிப் பார்க்கிறார்.

ஒரு முறையாவது யாரையும் தண்டித்ததாக நினைவில்லை என்கிறார். சிறுவர்களுடன் பழகும்போது தோழமை, அன்பு, நட்புறவு அவர்களின் முயற்சிகளைப் பாராட்டுதல், பொறுப்புணர்வு ஆகியவற்றைக் கொண்டு தான் கவர்ந்திழுக்க இயலும் என்பது இவரது அசையாத நம்பிக்கை.

அடிக்கடி ஒப்புரவு அருட்சாதனத்திலும், திவ்விய நற்கருணையிலும் பங்குபெற வைப்பது, ஆழமாக மறைக்கல்வி புகட்டுவது, கலை உணர்வை வளர்ப்பது இவைகளையே சலேசியன் சபையின் அணுகுமுறையாக இவர் வைத்துள்ளார். இன்று இவரது குருத்துவ துறவற சபையில் 20,000 க்கும் மேற்பட்டோர் உள்ளனர். அந்தத் துறவற சபை உலகின் எல்லா நாடுகளிலும் காணப்படுகிறது.

எல்.எஸ்

மொரகொட புனித செபஸ்தியார் ஆலய நூற்றாண்டு திருவிழா

கம்பஹா மாவட்டத்திலுள்ள மொரகொட புனித செபஸ்தியார் ஆலயத்தின் நூறாவது ஆண்டு நிறைவு திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கொழும்பு உயர் மறை மாவட்டத் துணை ஆயர் பேரருட்திரு என்டன் ரஞ்சித் ஆண்டகையினால் திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. கூட்டுத் திருப்பலியை ஆயருடன் அருட்தந்தையர்கள் இணைந்து ஒப்புக் கொடுத்தனர். திருவிழாவின் பின்னர் ஆயரினால் 'நாசரேத்' ஞாயிறு பாடசாலை சம்பிரதாயபூர்வமாக ஆசீர்வதிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. திருவிழா கூட்டுத் திருப்பலியையும் பங்கேற்ற விசுவாசிகளையும் படங்களில் காணலாம்.

பட உதவி: மத்தியூ ஜேசுதாஸன்

"தூய உள்ளத்தோர் பேறு பெற்றோர்; ஏனெனில் விண்ணரசு அவர்களுடையது"

ஆண்டவர் இயேசுவின் மலைப்பொழிவு

"தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர்" என்று நம் ஆண்டவர் இயேசு மலைப் பிரசங்கத்தில் கற்பிக்கின்றார்.

கடந்த ஞாயிறு நற்செய்தி வாசகம் மலைப்பொழிவின் தொடக்கப் பகுதியில் 'பேறு பெற்றவர்கள்' என்னும் எட்டு 'பேறு பெற்ற நிலைகளுடன்' தொடங்குகிறது

மலைப்பொழிவு. மலைப்பொழிவின் இடம் மற்றும் சூழலமைவு சிறப்பாக தரப்பட்டுள்ளது: மலைப்பொழிவு சீடர்களுக்கான போதனையாக உள்ளது. மக்கள் அனைவரும் இயேசுவைச் சுற்றி இருந்தாலும், போதனை என்னவோ இயேசுவின் சீடர்களுக்கானதாகவே அமைகிறது.. அந்த வகையில் மலைப்பொழிவைக் கேட்பவர்கள் சீடத்துவத்துக்கான அழைப்பைப் பெறுகின்றனர்.

சீடத்துவத்தை ஏற்கும் ஒருவரே மலைப்பொழிவுப் போதனையில் முழுமையாகப் பங்கேற்கவும், அப்போதனையை வாழ்ந்து காட்டவும் முடியும்.

'பேறுபெற்ற நிலை' என்பதை மகிழ்ச்சியான நிலை, தெரிவு செய்யப்பட்ட நிலை என்றும் புரிந்து கொள்ளலாம். இப்பகுதியில் எட்டு பேறுபெற்ற நிலைகளை இயேசு முன்மொழிகின்றார். .

லூக்கா நற்செய்தியாளர் 'ஏழையரே நீங்கள் பேறுபெற்றோர்' என்று இயேசு சொல்வதாக எழுதுகின்றார். மத்தேயு நற்செய்தியில் ஏழ்மை என்பது பொருளாதார வறுமை அல்லது பின்தங்கிய நிலையை அல்ல, மாறாக, ஓர் ஆன்மாவின் உள்ளக் கிடக்கையைக் குறிக்கின்றது.

'மற்றவர்களை, குறிப்பாக, கடவுளைச் சார்ந்திருக்கின்ற உள்ளம்' ஏழையரின் உள்ளம் என அழைக்கப்படுகின்றது. இன்றைய உலகில் சார்புநிலை என்பது தவிர்க்கப்பட வேண்டியதொன்றாகக் கற்பிக்கப்படுகிறது. சார்புநிலை தவிர்த்து கட்டின்மை அல்லது தற்சார்பு நிலை முன்மொழியப்படுகிறது. பெற்றோர்களைச் சார்ந்திராத பிள்ளைகள், பிள்ளைகளைச் சார்ந்திராத பெற்றோர்கள், கணவனைச் சார்ந்திராத மனைவி, மனைவியைச் சார்ந்திராத கணவன், கடவுளைச் சார்ந்திராத நாம் என நம் கலாசாரம் மாறிக்கொண்டே வருகின்றது. ஆனால், நாம் ஒருவர் மற்றவரோடு இணைந்துள்ளோம். நம் வாழ்வுக்காக மற்றவர்களைச் சார்ந்துள்ளோம் என்னும் எண்ணம் நம் மகிழ்ச்சிக்கு அடிப்படையாக இருக்கிறது..

'துயருறுதல்'.

துன்பமும் மகிழ்ச்சியும் ஒன்றுக்கொன்று முரணாகத் தெரிகிறது. ஆனால், மகிழ்ச்சியின் பொருள் துன்பத்தில் தெரிகிறது. துன்பம் மகிழ்ச்சிக்கு இட்டுச் செல்கிறது. துன்பம் என்பது நோய், முதமை, இறப்பு, இழப்பு ஆகியவற்றால் வரும் துன்பம் மட்டுமல்ல. மாறாக, சின்னச் சின்ன விடயங்களில் நாம் அடையும் துன்பம், நம் பாதுகாப்பு வளையத்தை விட்டு வெளியே வருகின்ற துன்பம், முடிவெடுக்க வேண்டிய துன்பம், முயற்சி எடுக்க வேண்டிய துன்பம் என அனைத்தும் துன்பங்களே. 'நான் காயம் பட்டாலும் சோர்ந்து போகமாட்டேன்' என்னும் மனப்பாங்கே நமக்கு ஆறுதலைத் தருகின்றது..

'கனிவு கொள்தல்'.

இயேசு தம்மைப் பற்றிச் சொல்லும்போது, தாம் கனிவும் மனத்தாழ்மையும் கொண்டவர் என அறிமுகம் செய்கின்றார். என்ன நடந்தாலும் அமைதியாகவும், பொறுமையாகவும், உடைந்து போகாமலும் இருத்தலே கனிவு. கனிவு கொள்கின்ற ஒருவர் நாட்டை உரிமையாக்கிக் கொள்கின்றார். அதாவது, அவரால் எவரையும் எதையும் சம்பாதித்துக் கொள்ள இயலும்..

'நீதியை நிலைநாட்டும் வேட்கை கொள்தல்'.

அநீதியாக நடப்பவர்கள் நடுவில் நீதியை நிலைநாட்டுதல் என்பது மிகப் பெரிய சவால். நாம் செய்கின்ற செயல்களை சரியானது, எளிதானது என இரு நிலைகளில் வகைப்படுத்தலாம். சரியானது எல்லாம் எளிமையாக இருப்பதில்லை. எளிமையானவை எல்லாம் சரியாக இருப்பதும் இல்லை. சரியானதை மட்டும் எப்போதும் விருப்பம் கொண்டிருப்பவர் நிறைவுகொள்வர்..

'இரக்கம் கொள்தல்'.

மற்றவர்கள் என்னை எப்படி நடத்த வேண்டும் என விரும்புகிறேனோ, அப்படியே நானும் மற்றவர்களை நடத்துவேன். இரக்கம் கொள்தல் என்பது கண்ணாடியில் முகம் பார்ப்பது போல. நாம் செய்வது நமக்கே திரும்பக் கிடைக்கும்..

'தூய்மையான உள்ளம்'.

கடவுள்மேல் நாம் கொண்டுள்ள நம்பிக்கை நம் வாழ்வின் எல்லா இயக்கங்களிலும் மிளிர்ந்து நின்றால் நலம். தூய்மை என்பது கடவுளோடு இணைத்துக் கொண்டாடப்படும் மதிப்பீடு. ஏனெனில், முதல் ஏற்பாட்டில் ஆண்டவரா கிய கடவுள் தம்மைத் தூயவர் என அழைக்கின்றார். இங்கே தூய்மை என்பது வழிபாடு சார்ந்த தூய்மையைக் குறித்தாலும், தூய்மையான உள்ளம் என்பது தயார்நிலையில் இருக்கும் உள்ளம் என்றும் புரிந்து கொள்ளப்படலாம்..

'அமைதி ஏற்படுத்துதல்'.

அமைதியை ஏற்படுத்துதல் என்பது நாம் மேற்கொள்ளும் தெரிவு. முணுமுணுப்புகள், சண்டைகள் எழுந்தாலும் இயல்பாக அவற்றை ஏற்றுச் சரிசெய்யும் தாராள உள்ளம் கொள்பவரே அமைதியை ஏற்படுத்த முடியும். அமைதி ஏற்படுத்துபவர் ஒருவர் மற்றவரை இணைக்கும் பாலமாகச் செயல்படுகிறார். .

'நீதியின் பொருட்டு துன்பம்'.

விருப்பமும் செயலும் இணைந்து செல்ல வேண்டும்..

பேறுபெற்ற நிலைகளை நிறைவு செய்கின்ற இயேசு, 'மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்' என்று தன் சீடர்களுக்கு அறிவுறுத்துகின்றார்..

மகிழ்ச்சிக்கான புதிய படிநிலைகளாக பேறுபெற்ற நிலைகளை அமைக்கின்றார். .

இயேசு முன்மொழிகின்ற நற்செய்தி மகிழ்ச்சியின் நற்செய்தியாக அமைகின்றது..

மகிழ்ச்சிக்கான இப்பண்புகள் நமதானால் நாமும் விண்ணரசின் நற்செய்தியை ஒருவர் மற்றவருக்கு அறிவிக்க முடியும்.

அருட்பணி யேசு கருணாநிதி

தினகரன் வடக்கின் உதயம்

Vadakkin Uthayam

தமிழரசுக் கட்சியின் தனிவழி முடிவால் தமிழ் மக்களுக்கு மேலும் பின்னடைவு

சாவகச்சேரி விசேட நிருபர்

தமிழர்களுடைய ஒற்றுமையை காண்பிக்க வேண்டிய தருணத்தில் தமிழரசுக் கட்சி தன்னிச்சையான சென்றிருப்பது தமிழ் மக்களுக்கான விடுதலைப் பாதையை மேலும் பின் தள்ளியிருக்கின்றது என ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டமைப் பின் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்ற வேட்பாளர் அறிமுக நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்;

தமிழ் மக்களுடைய ஒற்றுமையின் சின்னமாக 'வீடு' திகழ வேண்டும் என்ற நோக்குடன் உருவாக்கப்பட்ட சின்னத்தை உடைத்து தமிழரசுக்கட்சி தனியாக பிரிந்து சென்றுள்ளது. இது தமிழ் மக்களுக்கு செய்யும் துரோகமாகவே பார்க்கப்படுகிறது.

இந்த காலகட்டத்தில் விரும்பியோ, விரும்பாமலோ அரசுடன் பேச்சுவார்த்தை என்ற ஒன்று இடம் பெறுகிறது. சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாக அரசு பேச முன்வருகிறது. அதற்கு நாம் ஒற்றுமையாக முகம் கொடுக்க வேண்டிய நிலைப்பாடு இருந்தது.

ஆனால் இன்று நாம் எமக்குள் உடைந்து பேச்சுவார்த்தைக்கு முகம்கொடுக்க முடியாமல் நிற்கிறோம். இது தமிழ் மக்களுக்கான விடுதலைப் பாதையை மேலும் பின்னுக்கு கொண்டு செல்கிறது.

ஆனால் மீண்டும் நாம் மிகப்பெரிய அளவில் 5 கட்சிகளாக சேர்ந்து நிற்கிறோம். நாம் எல்லோருமே போராளிகள் கட்சி தான். ஆனால் விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த போராளிகள் கட்சியும் எம்மோடு இணைந்திருப்பது எமக்கு கிடைத்துள்ள பலம்.

இந்த கூட்டணிக்கு மக்கள் மிகப்பெரிய ஆதரவை தர வேண்டும். பிரிந்து சென்றவர்களுக்கு மீள வந்து இணைய வேண்டும் என்ற சிந்தனை வரும் அளவிற்கு எமக்கு மக்கள் ஆதரவு இந்த தேர்தலில் கிடைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

சங்கத்தானையில் மோட்டார் சைக்கிள் விபத்து; இளைஞர் பலி

சாவகச்சேரி விசேட நிருபர்

சாவகச்சேரி சங்கத்தானை பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை ஏ9 வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இவ்விபத்தில் மற்றொரு இளைஞன் படுகாயமடைந்துள்ளார்.

சங்கத்தானை புகையிரத நிலையத்தை அண்மித்து குறுக்கு வீதி ஒன்றினூடாக பிரதான வீதிக்கு நுழைய முற்பட்ட மோட்டார் சைக்கிளை பிரதான வீதியில் பயணித்த மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்து வீதியில் கிடந்த இரு இளைஞர்களையும் பொதுமக்கள் மீட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இதில் பொற்கொல்லர் வீதி சங்கத்தானையைச் சேர்ந்த ச.பிரதாப் என்பவரே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்தில் கரவெட்டி பகுதியைச் சேர்ந்த டிலக்சன் என்ற இளைஞன் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை வெற்றி

வரலாற்று சாதனை என பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ். விசேட நிருபர்

யாழ். போதனா வைத்திய சாலையில் மேற்கொள்ளப்பட்ட சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை வெற்றி அளித்துள்ளமையானது ஒரு வரலாற்று சாதனை என வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்திய மூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் நேற்றைய தினம் திங்கட்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வாரம், சிறுநீரகம் பாதிக்கப்பட்ட 17 வயதுடைய பெண் பிள்ளை ஒருவருக்கு, அவருடைய தாயார் தனது சிறுநீரகத்தை தானமாக வழங்குவதற்கு முன் வந்திருந்திருந்தார். அதற்கான சத்திர சிகிச்சை கடந்த 18 ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்திய சத்திர சிகிச்சை கூடத்தில் நான்கு மணித்தியாலமாக இடம்பெற்றது. சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சையின் பின்னர் மிகவும் வெற்றிகரமான முறையில் தாயாரின் சிறுநீரகம் 17 வயதுடைய பெண் பிள்ளைக்கு மாற்றப்பட்டுள்ளது.

வரலாற்றில் முதன் முதலாக இந்த சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை யாழ்ப்பாண வைத்திய சாலையில் மேற்கொள்ளப்பட்டு அது வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளமை ஒரு வரலாற்று சாதனை ஆகும்.

எதிர்காலத்தில் பொதுமக்கள் யாராவது சிறுநீரகம் செயலிழந்த தங்களுடைய உறவினர்கள் யாருக்காவது சிறுநீரகத்தினை தானமாக வழங்க முன் வந்தால் அதற்குரிய உடற் பரிசோதனைகள் மருத்துவ பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சையினை யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் முன்னெடுக்க முடியும் என தெரிவித்தார்.

வாள்களை காட்டி அச்சுறுத்தி நகைகளை கொள்ளையடித்த நால்வர் பொலிஸாரால் கைது

கொள்ளையிட்ட நகைகளில் ஒரு பகுதியும் மீட்பு

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் வீடொன்றுக்குள் வாள்களுடன் புகுந்து வீட்டிலுள்ளவர்களை அச்சுறுத்தி நகைகளைக் கொள்ளையடித்து தப்பித்த கும்பலைச் சேர்ந்த நால்வர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து கொள்ளையிட்ட நகைகள், வாள்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் கோப்பாய், மூன்று கோயிலுக்கு அண்மையாக உள்ள வீடொன்றினுள் கடந்த ஜனவரி 3ஆம் திகதி அதிகாலை 1.30 மணிக்கு இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

5 பேர் கொண்ட கும்பல் வாள்களுடன் வீட்டுக்குள் புகுந்து அங்குள்ளவர்களை வாள் முனையில் இருத்தி வைத்து, மூன்று பெண்களை அடித்துத் துன்புறுத்தியும், வயோதிபர்களை அச்சுறுத்திவிட்டு 12 தங்கப் பவுண் நகைகளை கொள்ளையிட்டுத் தப்பித்தது. சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதனை அடுத்து பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளில் சுன்னாகம், இணுவில் பகுதிகளைச் சேர்ந்த 25, 26 வயதுகளையுடைய நால்வர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடம் கொள்ளையிட்ட நகைகளில் ஒரு பகுதி, அடகு வைக்கப்பட்ட நிலையில் பற்றுச்சீட்டுகள் மற்றும் வாள்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

இதேவேளை, கடந்த ஜனவரி 15ஆம் திகதி தைப்பொங்கல் தினத்தன்று வீதியில் சென்ற ஆசிரியையை தாக்கிவிட்டு நகையை கொள்ளையிட்ட சம்பவத்துடனும் இந்த சந்தேக நபர்களுக்கு தொடர்புள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மருதங்கேணி பகுதியில் கடலில் மூழ்கி சிறுவன் மாயம்

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணம், மருதங்கேணி மாமுனை பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை கடலில் நீராடச் சென்ற மூவரில் 15 வயது சிறுவன் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

காணாமல் போன சிறுவன் நாகர்கோவில் கிழக்கு நாகர்கோவில் பகுதியைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது.

மற்றுமொரு சிறுவன் நீரில் மூழ்கிய நிலையில், மீட்கப்பட்டு, பருத்தித்துறை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காணாமல் போன சிறுவனை பொலிஸார், கடற்படையினர், மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து தேடும் பணியில் ஈடுபட்டனர்.

சாவகச்சேரி மருத்துவமனைக்கு

குழந்தைநல வைத்திய நிபுணர் நியமனம்

கிளிநொச்சி குறூப் நிருபர்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு குழந்தைகள் நல வைத்திய நிபுணராக மருத்துவர் கஸ்தூரி ஜீவகன் நியமிக்கப்பட்டுள்ளார்.

குழந்தைகள் நல வைத்திய நிபுணர் இன்மையால் பிரதேசத்தில் போஷாக்கற்ற குழந்தைகள் அதிகளவில் பதிவாகி வருகின்றனர் என வைத்திய நிர்வாகத்தால் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டப்பட்டது. அத்தோடு பிரதேச பொது மக்கள் குழந்தைகள் விடயத்தில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வந்துள்ளனர்.

இது தொடர்பில் மாகாண மற்றும் மத்திய சுகாதார அமைச்சின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதை தொடர்ந்து சுகாதார அமைச்சினால் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு மருத்துவர் கஸ்தூரி ஜீவகன் நியமிக்கப்பட்டுள்ளார்.

சந்நிதியான் ஆசிரமத்தின் 301வது ஞானச்சுடர் வெளியீடு

கரவெட்டி தினகரன் நிருபர்

தொண்டைமானாறு சந்நிதியான் ஆசிரமம் மற்றும் சைவகலை பண்பாட்டு பேரவையின் 301 ஆவது ஞானச்சுடர் ஆன்மீக சஞ்சிகை வெளியீடும் துவிச்சக்கர வண்டி வழங்கல் நிகழ்வும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சந்நிதி வேற்பெருமானின் அபிஷேக பூசைகளுடன் சந்நிதியான் ஆசிரம மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் முதல் நிகழ்வாக ஞானச்சுடர் 301 வது இதழ் வெளியீட்டில் ஆசியுரைகளை வண.சிவஸ்ரீ. சோ.தண்டபாணிக தேசிகர் , பிரம்மஸ்ரீ ப.மனோகரக் குருக்கள் ஆகியோர் ஆற்றினர். அருளுரையை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகள் (2 ஆவது குருமகாசந்நிதானம்) அவர்கள் ஆற்றினார்.

மதிப்பீட்டுரையினை ஆசிரியரான ஆ.சிவநாதன் நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து சிறப்பு பிரதிகளாக தை மாத ஞானச்சுடர் வெளியீட்டுக்கு காத்திரமான பங்களிப்பு செய்யும் மக்கள் வங்கி சமூகத்தினருக்கு வழங்கப்பட்டதுடன் இதுவரை காலமும் வெளிவந்த ஞானச்சுடர் மாத வெளியீட்டில் வெளியீட்டுரை, மதிப்பீட்டுரை ஆற்றியோரும் கௌரவிக்கப்பட்டனர்.

கல்வி செயற்றிட்ட உதவியாக அல்வாய் கிழக்கு, அத்தாய் பிரதேசத்தை சேர்ந்த தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவனுக்கும், புத்தூர் கிழக்கு, புத்தூரை சேர்ந்த உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவிக்கும், நீர்வேலியை சேர்ந்த தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவனுக்கும் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சாவகச்சேரி தொகுதி வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வு நேற்று திங்கட்கிழமை சாவகச்சேரி டச் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ பழநி மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் ஸ்ரீல.சு.க. பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்துகொண்டதுடன் சாவகச்சேரி நகரசபை மற்றும் பிரதேசசபைக்கு உட்பட்ட வட்டாரங்களில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களும் பங்குபற்றினர். (படம்: சாவகச்சேரி விஷேட நிருபர்)

முல்லைத்தீவில் சிறுமியுடன் குடும்பம் நடத்தியவர் கைது

திருமலையைச் சேர்ந்த 22 வயது இளைஞன் கைது

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முல்லைத்தீவு அளம்பில் பகுதியில் வாடி ஒன்றில் வேலைக்காக வந்திருந்த பதின்ம வயது சிறுமியுடன் தொடர்பினை ஏற்படுத்தி குடும்பமாக வாழ்ந்து வந்த திருகோணமலையை சேர்ந்த 22 வயது இளைஞன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் அயலவர்களின் தகவலுக்கு அமைய முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் 15 வயது சிறுமியுடன் குடும்பம் நடத்திய குற்றச்சாட்டில் நேற்று (30) அவ் இளைஞனை கைதுசெய்தனர். அத்துடன் சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைக்காலமாக சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகி வருகின்றமை அதிகரித்துக் காணப்படுவது சுட்டிக்காட்டத்தக்கது.

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு குளங்களில் மீன் குஞ்சுகள் விடுவிப்பு

(பரந்தன் குறூப் நிருபர்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசத்திற்குட்பட்ட ஒட்டறுத்த குளம் பாலைப்பாணி மற்றும் கிடாப்பிடித்த குளம் ஆகிய பின்தங்கிய கிராமங்களில் வாழும் குழந்தைகளின் போசாக்கினை மேம்படுத்தும் வகையில் நன்னீர் நிலைகளில் மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளன.

குழந்தைகளின் போசாக்கு மற்றும் ஊட்டச்சத்து தரத்தை மேம்படுத்தும் புதிய மீன் வளர்ப்பு திட்டத்தை முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஒட்டறுத்தகுளம், வண்டிக்காட்டுக்குளம், பாலைப்பாணி மற்றும் கிடாப்பிடித்தகுளம் ஆகிய நான்கு குளங்களில் ரஹமா நிறுவனத்தின் செயற்திட்டத்தினூடாக மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் செல்வி என்.ரஞ்சனா ஆரம்பித்து வைத்துள்ளார்.

இத்திட்டத்திற்காக, விவசாய அமைப்புகளில் இருந்து 10,000 மீன் விரலி குஞ்சுகளும், ரஹமாவிலிருந்து 50,000 மீன் குஞ்சுகளும் மேற்படி குளங்களில் விடப்பட்டுள்ளன.

குறித்த நான்கு கிராமங்களிலும் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டு வரும் 120 குடும்பங்களின் உணவு உற்பத்தியை அதிகரிக்கவும் நிலையான வருமானத்தை உருவாக்கவும் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. குழந்தைகள் மற்றும் கிராம மக்களின் சத்தான உணவை உறுதி செய்வதே திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்த ஆரம்ப நிகழ்வில், இத்திட்டத்தின் செயலாளர் நாயகமும், ரஹமா நிறுவனத்தின் பொறியியலாளருமான எம். எப். மரிக்கார் மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நகர்வலம்

எட்டு அடி உயரமுடைய காட்டுயானை உயிரிழப்பு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

கெக்கிராவ மொரகொட வனவிலங்கு வலயத்திற்குட்பட்ட ரிட்டிகல வனப்பகுதிக்கு அருகாமையிலுள்ள கரந்தகவெவ குளத்தின் அடிவாரத்தில் காட்டு யானை ஒன்று உயிரிழந்துள்ளது.

கடந்த காலம் முழுவதும் மொரகொட கரந்தகவெவ பகுதியில் காட்டு யானைகளின் பிரச்சினை காரணமாக அங்கு வசித்து வரும் விவசாயிகளின் தோட்டப் பயிர்ச் செய்கைகள் பெருமளவில் அழிக்கப்பட்டிருந்தன.

கடந்த (26) இரவு கரந்தகவெவ பகுதியில் சோளம் மற்றும் நெல் உள்ளிட்ட பயிர்ளை காட்டு யானைகள் அழித்துள்ள நிலையில் 27ஆம் திகதி காலை கரந்தகவெவ குளத்து அடிவாரத்தில் மரத்தடியில் சாய்ந்த நிலையில் யானை இறந்துள்ளதாக பிரதேச மக்கள் ரிட்டிகல மற்றும் மொரகொட வனவிலங்கு அலுவலகத்திற்கு அறிவித்துள்ளனர். அதன் பின்னர் காட்டு யானையினை கண்டு பிடித்ததாக வனவிலங்கு அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

30 வயது மதிக்கத்தக்க எட்டு அடி உயரமுடைய ஆண் யானை ஒன்றே அவ்வாறு இறந்துள்ளது. காட்டு யானையின் பின்பகுதியில் வெடிக்காயம் ஏற்பட்டுள்ள காரணத்தினால் உடல் உட்பாகங்களில் ஏற்பட்டுள்ள காயம் காரணமாக யானை இறந்திருக்கலாம் என சந்தேகிப்பதாக வலவிலங்கு அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

கொழும்பு தலைநகரின்

நகர அபிவிருத்தித் திட்டத்தின் எஞ்சியுள்ள பணிகளை விரைவுபடுத்த அமைச்சர் பணிப்பு

கொழும்பு தலைநகரின் நகர அபிவிருத்தித் திட்டத்தின் எஞ்சியுள்ள பணிகளை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். இத்திட்டத்தின் எஞ்சிய பணிகளுக்காக இவ்வருடம் ஒதுக்கப்பட்ட தொகை 457 மில்லியன் ரூபாவாகும். இத்திட்டத்தின் 99 வீதமான பணிகள் இதுவரை முடிவடைந்துள்ளன.

கொழும்பு தலைநகரின் நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 55 உப திட்டங்கள் உள்ளன. நகர அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை காணி மீட்புக் கூட்டுத்தாபனம் மற்றும் கொழும்பு மாநகரசபை என்பன இணைந்து இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன. கொழும்பு மாநகர சபை, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகரசபை, தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபை மற்றும் கொலன்னாவ மாநகர சபை ஆகியவை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் 3 நீரேற்று நிலையங்களின் பணிகள் நிறைவடைந்துள்ளன. அம்பத்தலே நீரேற்று நிலையம், புனித செபஸ்டியன் வடக்கு தெரகுலு நீரேற்று நிலையம் மற்றும் புனித செபஸ்டியன் தெற்கு நீரேற்று நிலையம் ஆகிய மூன்று நீரேற்று நிலையங்கள் ஆகும். இத்திட்டத்தின் கீழ் புதிய முத்துவெல்ல சுரங்கப்பாதை மற்றும் டொரிங்டன் சுரங்கப்பாதையும் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கால்வாய்களை மேம்படுத்துதல் மற்றும் கால்வாய் மாற்று திட்டங்கள் மற்றும் ஈரநில பூங்காக்கள் மற்றும் நேரியல் பூங்காக்கள் ஆகியவற்றின் மேம்பாடும் இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர நகர அபிவிருத்தித் திட்டத்தின் பிரதான நோக்கம் கொழும்பு நீர் வடிநிலத்தின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் வெள்ளப் பெருக்கைக் குறைப்பதாகும் என தெரிவித்த அமைச்சர், கொழும்பை உலகத் தரம் வாய்ந்த நகரமாக மாற்றுவது, ஆரோக்கியமான வாழ்க்கை முறையை உருவாக்குவது, சுற்றுலாவை மேம்படுத்துவது மற்றும் உள்கட்டமைப்பை புனரமைப்பது மற்றும் பராமரிப்பது ஆகியவை மற்ற நோக்கங்களாகும் என்றார்.

கொட்டராமுல்ல அல் ஹிராவில் 06 பேர் சித்தி

(நீர்கொழும்பு தினகரன் நிருபர்)

நாத்தாண்டிய கோட்டக் கல்விப் பிரிவிலுள்ள கொட்டராமுல்ல அல் ஹிரா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 6 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக வித்தியாலய அதிபர் எஸ்.ஏ.சீ. எம்.அஹ்சன் தெரிவித்தார். மொஹம்மது மாலிக் மரியம் 155 புள்ளிகள், நவ்ஷாத் பாதிமா நபா 154, மொஹமட் சிராஜ் பாதிமா ஹனா 151, மொஹம்மது அஸ்லம் பாதிமா சீமா 148, மொஹமட் ஹாபிஸ் ஹயாரீன் 147, மற்றும் மொஹமது ஜலீல் பாதிமா அனீஷா 147 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளதாக அதிபர் தெரிவித்தார்.

அல் ஹிரா முஸ்லிம் மகா வித்தியாலயத்திலிருந்து குறித்த பரீட்சைக்கு 76 மாணவர்கள் தோற்றியதில் 33 மாணவர்கள் 100 க்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

திருகோணமலையில் திருவள்ளுவர் சிலை திறப்பு

திருகோணமலையில், உலகத் தமிழ் கலை மற்றும் பண்பாட்டுப் பேரவையில் விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் 145ஆவது திருவள்ளுவர் சிலையை, விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் டாக்டர் வி.ஜி.சந்தோசம் மற்றும் உலகத் தமிழ் கலை மற்றும் பண்பாட்டுப் பேரவையின் நிறுவனர் மகிபாலதேவன் ஆகியோர் திருகோணமலையில் திறந்து வைத்தனர். அருகில் திருகோணமலை மறை மாவட்ட ஆயர் கலாநிதி கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல், தென்கயிலை ஆதீனம் தவத்திரு அகத்தியர் அடிகளார், பேரவையின் இலங்கைக்கான தலைவர் திரு.சுந்தரம் சிவபாலன், முன்னாள் நீதியரசர் டி.என்.வள்ளிநாயகம், பேராசிரியர் உலகநாயகி பழனி ஆகியோர் உடன் உள்ளனர்.

தாறுத்தக்வா மத்ரஸாவில் 5வது பரிசளிப்பும் பட்டமளிப்பும்

ஏ.எஸ்.எம்.ஜாவித்

கொழும்பு, மட்டக்குளி முகத்துவாரம் தாறுத் தக்வா மத்ரஸாவின் 5ஆவது வருடாந்த பரிசளிப்பு விழாவும் பட்டமளிப்பு விழாவும் கடந்த சனிக்கிழமை மத்ரஸாவின் பணிப்பாளர் அல் ஹாபிழ் யுஸ்ரி சுபைர் தலைமையில் கொழும்பு03 இல் உள்ள பிசப்ஸ் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதிகளாக அல்ஹாபிழ் அல் ஆலிம் எம்.ஜே.எம். முஸ்தஜாப் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் திருமதி எம்.ஜே.பாத்திமா ரினூசியாவும் கலந்து கொண்டனர். கௌரவ அதிதிகளாக வைத்தியர் பாத்திமா அப்ராஅத்தீக் அஸ்லம், மற்றும் உலமாக்கள், புத்திஜீவிகள், கல்விமான்கள், நலன் விரும்பிகள் பொதுமக்கள் என பெருமளவானோர் கலந்து சிறப்பித்தனர்.

நாச்சியாதீவு முஸ்லிம் வித்தியாலயத்தில் 06 பேர் சித்தி

திறப்பனை தினகரன் நிருபர்

வெளியான 05 ஆம் தர புலமை பரிசில் பரீட்சை முடிவுகளின் பிரகாரம், அநுராதபுரம் கல்வி வலய பிரிவின் நாச்சியாதீவு மு. ம. வித்தியாலயத்தில் 06 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக அதிபர் ஆர்.எப்.எஸ்.ரசூல் தெரிவித்தார். இதன் பிரகாரம், ஹஸ்மி ஹமாத் 156 (புள்ளி),

முஹம்மது நிஸ்பர் முஹம்மது நிஷாத் 147, முஹம்மது ரிபாஸ் அல் டானா 145, முஹம்மது ரஷ்மி அப்துல் பத்தாஹ் 145, முஹம்மது கலீல் பாத்திமா நிஹ்மா 144, சித்தீக் முஹம்மது ராயிஸ் 144 என பெறுபேறுகள் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

திக்குவல்லை மின்ஹாத் சிறந்த பெறுபேறு

அண்மையில் வெளியாகிய தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் திக்குவல்லை மின்ஹாத் தேசிய பாடசாலை சிறந்த பெறுபேற்றைப் பெற்றுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் 9 பேர் சித்தியடைந்து பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

சித்தியடைந்த மாணவர்கள் ஆகிப் அஹ்மத் (174), ஆயிஷா ஹிக்மா (165), ரும்தா மர்யம் (162), ஸபா ஹிஸான் (158), முஹம்மத் ஷபீக் (153), யூஸுப் ஜாவிட் (146), ஷவ்ரா நஸ்ரி (145), ஷஹ்மா மர்யம் (145), ஹுமைத் ரிஸ்வான் (144) ஆகிய மாணவர்களையும் அதிபர் உட்பட ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

(படம்: வெலிகம தினகரன் நிருபர்)

வடமத்திய மாகாண திணைக்கள ஏற்பாட்டில்

தொழில்முனைவோருக்கான உற்பத்தி, விநியோக கண்காட்சி

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

வடமத்திய மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கிராமிய அபிவிருத்தி தொழில்முனைவோரின் உற்பத்தி மற்றும் விநியோக கண்காட்சி வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் தலைமையில் (25) கிராம அபிவிருத்தி திணைக்கள வளாகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சுயதொழில் மற்றும் ஊக்குவிப்பு மகளிர் அமைப்பின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் நச்சுத்தன்மையற்ற தேசிய உணவு உற்பத்தி தொடர்பில் நான்கு மாத பயிற்சியினை நிறைவு செய்த 20 பேரைக்கொண்ட குழுவினர் மேற்படி உற்பத்திகளை காட்சிப்படுத்தியிருந்தனர்.

வெளிநாட்டு உணவு வகையில் மக்கள் காட்டும் அதிதீவிர விருப்பத்திற்கு பதிலாக தேசிய உற்பத்திகளினால் செய்யப்படும் உணவு உற்பத்திகள் மிகவும் சாதகமானதாகும். இதன் மூலம் வெளிநாடுகளுக்கு செல்லும் நாட்டின் மாற்று வீதத்தை குறைப்பதே இதன் பிரதான நோக்கமாகும்.

இதன் போது மாகாண பிரதான செயலாளர் சந்திரசிறி பண்டார, ஆளுநரின் செயலாளர் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ரஞ்சன் ஜயசிங்க, அமைச்சின் செயலாளர்கள், மாகாண கிராமிய அபிவிருத்தி பணிப்பாளர் கயான் இந்திக வன்னிநாயக்க மற்றும் திணைக்களத்தின் பிரமுகர்கள் சுயதொழில் பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

கொழும்பு டொரிங்டன் வளாகத்தில் நடைபயணம் மேற்கொள்பவர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (29) காலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச்.எம்.பௌசி மற்றும் முஜீபுர் ரகுமான் ஆகியோரும் கலந்து கொண்டனர். (படம்: ருஸைக் பாரூக்)

அளுத்கம வீதிய முஸ்லிம் மகளிர் பாடசாலையில் நஜீப் ஹாஜியார் கலாசார மண்டபம் திறந்து வைப்பு

(பேருவளை விசேட நிருபர்)

தர்கா நகர் அளுத்கம வீதிய முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலையில் சுமார் 50 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட நஜீப் ஹாஜியார் கலாசார மண்டப திறப்பு விழா கல்வி நிலைய ஸ்தாபகர் தேசமான்ய கலாநிதி நஜீப் பின் அமீர் ஆலிமின் (26) தலைமையில் மிக விமர்சையாக நடைபெற்றது.

பாடசாலை அதிபர் பி.எம்.எம்.ஜாபிர் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் கலாநிதி நஜீப் ஹாஜியார் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். பேருவளை கெச்சிமலை அல்அஷ்ரபியா அரபுக் கல்லூரி முதல்வர் மௌலவி எம்.ஆர்.எம்.ஸில்மி (நூரி அல் அஸ்ஹரி) விசேட பேச்சாளராக கலந்து சிறப்பித்தார்.

பாடசாலையின் முன்னாள் அதிபர்களான ஏ.ஏ.எம். பாயிஸ், முஹம்மத் ஹம்ஸா, உட்பட முக்கிய பிரமுகர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோளின் பேரில் அமைக்கப்பட்டுள்ள இக் கட்டிடத்திற்கு "கலாநிதி நஜீப் ஹாஜியார் கலாசார மண்டபம்" என பெயரிடப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவிகள், ஆசிரியர்கள், அதிபர் உட்பட ஊழியர்களுக்கு இக் கலாசார மண்டபத்தின் மூலம் தமது சமய கடமைகளை நிறைவேற்றிக் கொள்ள வாய்ப்பு கிட்டியுள்ளது. இதன் மூலம் பாடசாலையின் முக்கிய தேவையொன்று நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கின் குரல்

சுதந்திரதின விழா ஏற்பாடுகள் மட்டக்களப்பில் சிறப்பாக முன்னெடுப்பு

கல்லடி குறூப் நிருபர்

எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி காலை 9 மணிக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறவுள்ள 75ஆவது தேசிய சுதந்திர தின விழாவுக்கான முன்னேற்பாடுகள் மிகவும் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக, அம்மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா தெரிவித்தார்.

பொதுநிர்வாக அமைச்சின் சுற்றுநிருபத்துக்கமைய அநாவசிய செலவைக் குறைக்கும் வகையில் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இலங்கையின் தேசிய கொடி ஏற்றப்பட்டு தேசியகீதம் இசைக்கப்பட்ட பின்னர், பிரதான நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு 75,000 மரக் கன்றுகளை நாட்டுவதற்குத் திட்டமிட்டுள்ள நிலையில், இதுவரையில் 45,000 மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன. அத்துடன், கோட்டை பூங்கா வளாகத்தில் மரக் கன்றுகள் நடும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

அத்துடன், பெப்ரவரி முதலாம் இரண்டாம் திகதிகளில் கல்லடி கடற்கரை, கோட்டை பூங்கா வீதி, மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தை அண்டிய வாவியோரம் ஆகியவற்றிலுள்ள கழிவுகளை அகற்றுவதற்காக முப்படையினர், மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றம், மட்டக்களப்பு மாநகரசபை, மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் சிரமதானப் பணியை மேற்கொள்ளவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

பொத்துவில் இ.போ.ச. உபசாலையை தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை

ஒலுவில் விசேட நிருபர்

பொத்துவிலுக்கான இ.போ.ச. உப சாலையைப் பிரதான இ.போ.ச. சாலையாகத் தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் தெரிவித்தார்.

இ.போ.ச. தவிசாளர் எஸ்.எம்.டி.எல்.கே.டி.அல்விஸ், பிரதித் தவிசாளர் உள்ளிட்ட அதிகாரிகள் நேற்று முன்தினம் (29) பொத்துவிலுக்கு விஜயம் செய்து தரம் உயர்த்தப்படவுள்ள சாலையைப் பார்வையிட்டுள்ளனர்.

இதன்போது இச்சாலையின் அமைவிடம், அதன் விஸ்தீரணம், ஆளணி வளம், பௌதீகக் கட்டமைப்புத் தொடர்பாக ஆராய்ந்துள்ளனர்.

அறுகம்பையானது சுற்றுலாவுக்குரிய இடமாக இருப்பதினால், இ.போ.சபைக்கு இலாபம் ஈட்டக்கூடிய வழிவகைகள் தொடர்பாகவும் இவ்வதிகாரிகள் கலந்துரையாடியுள்ளனர்.

இந்நிலையில், பொத்துவிலுக்கான இ.போ.சபையின் உப சாலையை பிரதான இ.போ.ச. சாலையாகத் தரம் உயர்த்தித் தருவதாக, இ.போ.ச. தவிசாளர் எஸ்.எம்.டி.எல்.கே.டி.அல்விஸ் உறுதியளித்துள்ளார்.

இச்சாலை தரம் உயர்த்தப்படும் பட்சத்தில் தூர இடங்களுக்கான நவீன பஸ் சேவைகளை ஆரம்பிக்க முடியுமெனவும் இதன் காரணமாக பொத்துவில், பாணாம, லகுகல, கோமாரி ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் பாரிய நன்மை அடைவார்களெனவும், பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் தெரிவித்தார்.

புலமைப்பரிசில் பரீட்சை

அக்கரைப்பற்றில் 279 பேர் சித்தி

அட்டாளைச்சேனை மத்திய நிருபர்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் 279 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக, அக்கல்வி வலயத்தின் ஆரம்பப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.அம்ஜத்கான் தெரிவித்தார்.

இக்கல்வி வலயத்தில் 2,173 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றினர். அக்கரைப்பற்று பிரதேச பாடசாலைகளிலிருந்து 153 பேரும் அட்டாளைச்சேனை பிரதேச பாடசாலைகளிலிருந்து 89 பேரும் பொத்துவில் பிரதேச பாடசாலைகளிலிருந்து 37 பேரும் சித்தியடைந்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

கடந்த 2022ஆம் ஆண்டைச் சேர்ந்த தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை கடந்த டிசெம்பர் 18ஆம் திகதி நடைபெற்றது.

சாய்ந்தமருதில் 75 பேர் சித்தி

மாளிகைக்காடு குறூப் நிருபர்

அண்மையில் வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சாய்ந்தமருது கல்விக் கோட்டத்தில் 75 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக, அக்கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்.எம்.அப்துல் மலீக் தெரிவித்தார்.

சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயத்தில் 44 மாணவர்களும் சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் 19 மாணவர்களும் சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம்.அஸ்றப் வித்தியாலயத்தில் 5 மாணவர்களும் சாய்ந்தமருது அல் கமருன் வித்தியாலயத்தில் 3 மாணவர்களும் சாய்ந்தமருது றியாலுல் ஜன்னா வித்தியாலயத்தில் 2 மாணவர்களும் சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயம் மற்றும் சாய்ந்மருது எம்.எஸ்.காரியப்பர் வித்தியாலயத்தில் தலா ஒரு மாணவரும் சித்தியடைந்துள்ளனர்.

கருமலையூற்று முஸ்லிம் பாடசாலையில் இருவர் சித்தி

கிண்ணியா மத்திய, கந்தளாய் தினகரன் நிருபர்கள்

திருகோணமலை கருமலையூற்று முஸ்லிம் வித்தியாலயத்தில் தரம்5 புலமைப்பரிசில் பரீட்சையில் 2 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக, அப்பாடசாலை அதிபர் கே.எம்.எம். நவாஸ் தெரிவித்தார்.

150 புள்ளிகளை அனஸ் அம்னத் ஹானியாவும் 142 புள்ளிகளை நுஸ்ரத் ஹம்தான் அஹமட்டும் பெற்றுள்ளனர்.

இப்பாடசாலையின் வரலாற்றில் முதல் தடவையாக வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று இவ்விரு மாணவர்களும் பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளதாகவும், அதிபர் தெரிவித்தார்.

வரிப்பத்தான்சேனையில் மூவர் சித்தி

காரைதீவு குறூப் நிருபர்

சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட வரிப்பத்தான்சேனை லீடர் ஜூனியர் பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 3 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக, அப்பாடசாலை அதிபர் யூ.கே.நிஹால் தெரிவித்தார்.

எம்.எஸ்.ஆதிப் அஹமட் 157 புள்ளிகளையும் எம்.எவ்.அஷ்ரிப் அஹமட்148 புள்ளிகளையும் எம்.ஏ.சிபாக்144 புள்ளிகளையும் பெற்றுள்ளனர். இம் மாணவர்களே சித்தி பெற்றவர்களாவர்.

இம்மாணவர்களின் கற்பித்தலுக்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்களுக்கு அதிபர் நன்றி தெரிவித்துள்ளார்.

டெங்கை கட்டுப்படுத்த முன்னேற்பாடுகள்

நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்

கல்முனையில் பெய்த அடை மழையைத் தொடர்ந்து, டெங்கு நோய் பரவக்கூடிய ஆபத்து உள்ளதினால், அதைக் கட்டுப்படுத்துவதற்கு தேவையான முன்னேற்பாடுகளில் ஈடுபடுமாறு, கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி முகம்மட் அஸ்மி கேட்டுக்கொண்டுள்ளார்.

பள்ளிவாசல் ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களிடம் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

வீடுகளில் சேரும் குப்பைகளை, வெற்றுப் பாத்திரங்களை, பிளாஸ்டிக் பொருட்களை, சிரட்டைகளை கிடங்கில் இட்டு அழிக்க முடியும். அல்லாவிடின், அவற்றை திண்மக்கழிவு அகற்றும் மாநகரசபை ஊழியர்களிடம் ஒப்படைக்க முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

இவ்வேண்டுகோளை அலட்சியம் செய்பவர்கள், பொதுச் சுகாதார உத்தியோகத்தரினால் இனங்காணப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்களெனவும், அவர் எச்சரித்தார்.

மட்டக்களப்பில் மகாத்மா காந்தியின் 75ஆவது சிரார்த்ததினம் அனுஷ்டிப்பு

கல்லடி, மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்

மகாத்மா காந்தியின் 75ஆவது சிரார்த்ததினம் மட்டக்களப்பு காந்தி பூங்காவிலுள்ள அவரது நினைவுத் தூபியில் நேற்று (30) காலை அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு காந்தி சேவா சங்கத்தின் தலைவர் கலாநிதி அ.செல்வேந்திரனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், காந்தியடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டது. இதன்போது, 'ரகுபதி ராகவ ராஜாராம்" பாடல் பாடி காந்தியடிகளாருக்கு மரியாதை செலுத்தப்பட்டது. இதில் மட்டக்களப்பு காந்தி சேவா சங்கத்தின் செயலாளர் க.பாரதிதாசன், மட்டக்களப்பு வர்த்தக சங்க செயலாளர் கே.தியாகராஜா உள்ளிட்ட சமூக ஆர்வலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

கல்முனைக்குடியில் சிரமதானப்பணி

கல்முனை மத்திய தினகரன் நிருபர்

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு கல்முனைக்குடி 01 பிரதேசத்தில் சமுர்த்தி உதவி பெறும் பயனாளிகளும் பொதுமக்களும் ஒன்றிணைந்து கல்முனை கடற்கரைப் பள்ளி வளாகத்தில் நேற்று (30) சிரமதானத்தில் ஈடுபட்டனர்.

கல்முனைக்குடி 01 அபிவிருத்தி உத்தியோகத்தர் ரீ.றினோஸா, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.ராசமலர், கிராம அலுவலக உத்தியோகத்தர் எஸ்.எல்.எம். தௌபீக் ஆகியோரின் வழிநடத்தலின் கீழ் இச்சிரமதானப் பணி மிகச் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, கல்முனை கடற்கரைப் பள்ளி வளாகம் துப்புரவாக்கப்பட்டது.

பிரச்சினைகளை எடுத்துக்கூற தேர்தல் சிறந்த சந்தர்ப்பமாக அமைகின்றது

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

"ஜனநாயக ரீதியில் சர்வதேசத்துக்கும் தற்போதைய பெரும்பான்மை அரசாங்கத்துக்கும் எமது பிரச்சினைகளை எடுத்துக்கூறுவதற்கு எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் சிறந்ததொரு சந்தர்ப்பமாக எமக்கு அமைகின்றது" என, இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரியகல்லாறில் நேற்று முன்தினம் (29) நடைபெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் பட்டிருப்புத் தேர்தல் தொகுதியின் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு கூறினார்.

இக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"கடந்த காலத்தில் தவறானவர்களைத் தெரிவுசெய்து, மக்கள் தாம் செய்த தவறை நிவர்த்தி செய்வதற்கான முதலாவது சந்தர்ப்பமாக இத் தேர்தல் அமையவுள்ளது. நாம் இச்சந்தர்ப்பத்தை நல்லதொரு வாய்ப்பாகப் பயன்படுத்த வேண்டும்" என்றார்.

"நாம் எமது தேர்தல் வெற்றிகளை முன்னிறுத்திச் செயற்படுவதற்கு அனைவரும் தமிழரசுக் கட்சியின் தலைமையில் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டுமென்று அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன்.

எமது வேட்பாளர்களை நாம் தேடித்தேடி தெரிவு செய்து வருகின்றோம். அந்த வகையில், எமது வேட்பாளர் பட்டியலில் அதிபர்கள், ஆசிரியர்கள், சமூக அக்கறை கொண்ட கல்விமான்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்" என்றார்.

இளைஞர், யுவதிகளுக்கு தலைமைத்துவ பயிற்சி

தன்னம்பிக்கை கொண்ட எதிர்கால இளைஞர், யுவதிகளை உருவாக்குதல்' எனும் தொனிப்பொருளின் கீழ் இளைஞர், யுவதிகளுக்கான பயிற்சியொன்று நடத்தப்பட்டது.

வாழைச்சேனை தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையத்தில் அண்மையில் நடத்தப்பட்ட இப்பயிற்சியானது இளைஞர், யுவதிகளின் தன்னம்பிக்கையை வலுவூட்டும் வகையில் அமைந்திருந்தது.

மனித மேம்பாட்டு அமைப்பு ஸ்தாபகர் மொஹமட் அஸ்லமின் வழிகாட்டலின் கீழ் தேசிய இளைஞர் படையணியின் வாழைச்சேனை பயிற்சி நிலையப் பொறுப்பதிகாரிகளான, லெப்டினன்ட் கேர்ணல் எம்.எச்.எம்.ரவூப், மேஜர் கே.எம். தமீம் ஆகியோரின் தலைமையில் விரிவுரையாற்றப்பட்டதுடன், பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

இதில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டனர். பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளரான ஐ.எல்.எம்.இர்பான் கலந்துகொண்டு இளைஞர், யுவதிகளுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

அக்கரைப்பற்று வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் அன்பளிப்பு

அட்டாளைச்சேனை குறூப் நிருபர்

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை மற்றும் அட்டாளைச்சேனை மாவட்ட வைத்தியசாலைக்குத் தேவையான ஒருதொகை மருத்துவ உபகரணங்களை, ஆஸ்பத்திரி சேவைகள் சபையின் பணிப்பாளர் வண. ரஜவல்ல சுபுதி தேரோ கையளித்துள்ளார். கனடா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் தொழில் புரியும் இலங்கை தனவந்தர்களின் நன்கொடை அமைப்புகளின் உதவியினால் கொள்வனவு செய்யப்பட்ட பல கோடி ரூபா பெறுமதியான இம்மருத்துவ உபகரணங்களை, அவ்வவ் வைத்தியசாலைகளின் நிர்வாகங்களிடம் கடந்த சனிக்கிழமை (28) வண. ரஜவல்ல சுபுதி தேரோ கையளித்துள்ளார். அத்துடன், அக்கரைப்பற்று வைத்திய அதிகாரி காரியாலயத்துக்குத் தேவையான உபகரணங்களும் கையளிக்கப்பட்டுள்ளன.

தொன்மைமிகு ஆலங்குளம் ஆலயத்தில் பொங்கல் விழா

காரைதீவு குறூப் நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் அமைந்துள்ள மிகவும் பழைமை வாய்ந்த ஆலயமான ஆலங்குளம் சிவாலயத்தில் பொங்கல் விழா கடந்த வெள்ளிக்கிழமை (270) மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் நிறுவனத்தின் ஏற்பாட்டிலும் ஆலங்குளம் ஆலய நிர்வாகிகளின் பங்களிப்பிலும் பொங்கல் விழா நடத்தப்பட்டதுடன், இதில் சமய ஆர்வலர்கள் ஒன்றுகூடி இப்பொங்கலை இனிதே கொண்டாடினர். இதன்போது, வளத்தாப்பிட்டி சத்தியசாயி சேவா நிலையத்தினரின் பஜனையும் நடைபெற்றது. தமிழரின் பாரம்பரியக் கலைகளான சிலம்பம், யோகாசனம் போன்றவை தொடர்பாக வளவாளர் குமாரதாசன் விளக்கமளித்தார்.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜ், அனைத்து ஆலயங்களின் தலைவர் கு.வடிவேல் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

கட்டிடங்கள் திணைக்களம்

2023ஆம் வருடத்திற்கான ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்

01. 2023ஆம் ஆண்டில் நிர்மாண வேலைகள்/விஷேடத்துவமான வேலைகளை கையேற்பதற்காக கட்டிடங்கள் திணைக்களத்துடன் பதிவு செய்ய விரும்பும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. விண்ணப்பங்கள் இரண்டு வகுதிகளின் கீழ் கோரப்படுகின்றன.

வகுதி	விளக்கம்	தெரிவு செய்வதற்கான ஆகக்குறைந்த தகைமை
வகுதி A	10 மில்லியன் ரூபாவுக்கு மேற்படாத மொத்த மதிப்பீட்டுக் கிரயத்தைக் கொண்ட நிர்மாண வேலைகள்	கட்டிட நிர்மாணத் துறைக்கான செல்லுபடியாகும் CIDA பதிவு (C8, C7, C6 அல்லது C5 தரங்கள் மட்டும்)
வகுதி B	10 மில்லியன் ரூபாவுக்கு மேற்படாத மொத்த மதிப்பீட்டுக் கிரயத்தைக் கொண்ட நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு வேலைகள்	நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு துறைக்கான செல்லுபடியாகும் CIDA பதிவு (C8, C7, C6 அல்லது C5 தரங்கள் மட்டும்)
வகுதி C	10 மில்லியன் ரூபாவுக்கு மேற்படாத மொத்த மதிப்பீட்டுக் கிரயத்தைக் கொண்ட விசேடத்துவமான வேலைகள்	விசேடத்துவமான நிர்மாண ஒப்பந்தக்காரர்கள் / மின்னியல் மற்றும் பொறிமுறை சேவைகளுக்கான (EM) செல்லுபடியாகும் CIDA பதிவு (EM5, EM4 மற்றும் EM03 தரங்கள் மட்டும்) / விசேடத்துவ நிர்மாண ஒப்பந்தக்காரர்கள் (SP 05, SP 04 மற்றும் SP 03 தரங்கள் மட்டும்)

03. மேற்படி விடயங்களுக்காக பதிவு செய்து கொள்ள விரும்புபவர்கள் திணைக்களத்தின் இணைய தளத்திலிருந்து (www.buildings.gov.lk) விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. ஒப்பந்தக்காரரொருவர் ஒரு வகுதிக்கு மேலதிகமாக விண்ணப்பிப்பதற்கு விரும்பினால், ஒவ்வொரு வகுதிக்கும் தனித்தனியான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

05. நாடளாவிய ரீதியில் ஒப்பந்தக்காரர் தனித்தனியாக ஒவ்வொரு மாகாணத்திற்கும் வகுதி "A மற்றும் B", மற்றும் வகுதி "C" ஆகியவற்றிற்காக பதிவு செய்யப்படுவார்கள். ["A மற்றும் B"வகுதி விலைமனுக்களுக்கான கோரிக்கையானது 04/2016(ii) மற்றும் 03/2020 எனும் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படும்].

06. திணைக்களத்தினால் கோரப்பட்ட விலைமனுக்களுக்கு இரு தொடர்ச்சியான தடவைகளில் சமர்ப்பிக்கத் தவறிய எந்தவொரு ஒப்பந்தக்காரரும் பதிவேட்டிலிருந்து நீக்கப்படுவர்.

07. விண்ணப்பப் படிவத்தில் கேட்கப்பட்டுள்ள துணை ஆவணங்களை விண்ணப்பப் படிவத்துடன் சமர்பித்தல் வேண்டும். ஏதேனும் ஆவணங்களை சமர்ப்பிக்காத அல்லது பகுதியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கு காரணமாகலாம். காரணம் காட்டாமல் எந்தவொரு விண்ணப்பத்தையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்குமான உரிமையை பணிப்பாளர் நாயகம் தன்னகத்தே கொண்டுள்ளார்.

08. விண்ணப்பங்களை 2023-02-21ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் ''கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம், கட்டிடங்கள் திணைக்களம், 2ஆம் மாடி, ''செத்சிரிபாய", பத்தரமுல்ல' என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''2023ஆம் வருடத்திற்கான ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்'' எனத் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

09. ஒவ்வொரு வகுதிக்குமான மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணமான 1000.00 ரூபாவானது ரொக்கப் பணத்தில் செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன் பற்றுச்சீட்டின் மூலப் பிரதி விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ரொக்கப் பணத்திலான பணக்கொடுப்பனவானது கட்டிட திணைக்கள தலைமையகத்தில் அல்லது கட்டிடங்கள் திணைக்கள எந்தவொரு வலய பிரதான பொறியியலாளரின் அலுவலகத்திலும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் மேற்கொள்ளப்படலாம். மாற்றுவழியாக இலங்கை வங்கியின் (பத்தரமுல்ல கிளை) 7042710 எனும் கணக்கிலக்கத்திற்கு கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் வைப்புச் செய்யலாம்.

10. மேலதிக தகவலுக்கு 011-2864788 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக மற்றும் 011-2868285, என்ற தொலைநகலூடாக (ஒப்பந்தங்கள்) பிரதான பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளலாம்.

பொறி. (திருமதி) K.G.S. குமுதினி,
கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்,
கட்டிடங்கள் திணைக்களம்,
2 ஆம் மாடி, ''செத்சிரிபாய",
பத்தரமுல்ல.
www.buildings.gov.lk

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

கட்டிடங்கள் திணைக்களம்

2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2023ஆம் வருடத்தில் பின்வரும் பொருட்கள் பண்டங்கள் மற்றும்/அல்லது சேவைகளை வழங்குவதற்காக கட்டிடங்கள் திணைக்களத்துடன் தம்மை பதிவு செய்துகொள்ள விரும்பும் வழங்குநர்கள் மற்றும் சேவை வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

உருப்படி இல.	விபரங்கள்	பதிவுக் கட்டணம்
	பொருட்கள்	
G 1	அலுவலக காகிதாதிகள்	1000.00
G 2	அச்சுப்பொறிகள் மற்றும் புகைப்பட பிரதியாக்கல் இயந்திரங்கள் மற்றும் தொலைநகல் இயந்திரங்களுக்கான டோனர்கள் மற்றும் மை காட்ரிஜ்கள்	1000.00
G 3	ட்ரேஸிங் பேப்பர் ரோல்கள் மற்றும் வெள்ளைப் பேப்பர் ரோல்கள்	1000.00
G 4	டயர்கள் மற்றும் கார் பட்டரிகள் வழங்குதல்	1000.00
G 5	கணனி துணைப்பாகங்கள் வழங்குதல்	1000.00
	சேவைகள்	
S 1	புகைப்படபிரதியாக்கல் இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள் மற்றும் அச்சுப் பொறிகளின் திருத்தவேலைகள் மற்றும் சேவைகள்	1000.00
S 2	வளிச்சீராக்கி இயந்திரங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேவைகள்	1000.00
S 3	மோட்டார் வாகனங்களுக்கான திருத்தவேலைகள் மற்றும் சேவைகள் (கார்கள், வான்கள், டபிள் கெப்கள்)	1000.00
S 4	மோட்டார் வாகனங்களுக்கு கம்பளம் (கார்பட்) பதித்தல் மற்றும் குஷன் வேலைகள்	1000.00
S 5	ஓப்செட் அச்சுவேலைகள் மற்றும் புத்தகம் கட்டுதல்	1000.00

1. மேற்படி விடயங்களுக்காக பதிவு செய்து கொள்ள விரும்புபவர்கள் திணைக்களத்தின் இணைய தளத்திலிருந்து (www.buildings.gov.lk) விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
2. ஒப்பந்தக்காரரொருவர் ஒரு வகுதிக்கு மேலதிகமாக விண்ணப்பிப்பதற்கு விரும்பினால், ஒவ்வொரு வகுதிக்கும் தனித்தனியான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3. விண்ணப்பப் படிவத்தில் கேட்கப்பட்டுள்ள துணை ஆவணங்களை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். ஏதேனும் ஆவணங்களை சமர்ப்பிக்காத அல்லது பகுதியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கு காரணமாகலாம். காரணம் காட்டாமல் எந்தவொரு விண்ணப்பத்தையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்குமான உரிமையை பணிப்பாளர் நாயகம் தன்னகத்தே கொண்டுள்ளார்.
4. பொதுவாக வழங்குநர்கள்/ சேவை வழங்குநர்களிடமிருந்தே விலைமனுக்கோரல்கள் அழைக்கப்படும் ஆனால் வேறு மூல வளங்களிலிருந்து விலைமனுக்கோரல்களை அழைத்து தேவைப்பாடுகளைக் கொள்வனவு செய்தலுக்கான உரிமையை திணைக்களம் தன்னகத்தே கொண்டுள்ளது.
5. பொருட்களை வழங்குவதற்கும் அல்லது சேவையை வழங்குவதற்குமாக தெரிவு செய்யப்பட்ட எந்தவொரு வழங்குநர் அல்லது சேவை வழங்குநர் கட்டிடங்கள் திணைக்களத்தினால் கோரப்பட்ட விலைமனுக்கோரல்களுக்கு பதிலளிக்க அடுத்தடுத்து வரும் இரு வேளைகளில் தவறும் சந்தர்ப்பங்களில் அவர்கள் பதிவேட்டிலிருந்து நீக்கப்படுவர்.
6. விண்ணப்பங்களை 2023-02-21ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் ''கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம், கட்டிடங்கள் திணைக்களம், 2ஆம் மாடி, ''செத்சிரிபாய", பத்தரமுல்ல' என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்தல்" எனத் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.
7. இயையுடைய மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணம் ரொக்கப் பணத்தில் செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன் பற்றுச்சீட்டின் மூலப் பிரதி விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ரொக்கப் பணத்திலான பணக்கொடுப்பனவானது கட்டிட திணைக்கள தலைமையகத்தில் அல்லது கட்டிடங்கள் திணைக்கள எந்தவொரு வலய பிரதான பொறியியலாளரின் அலுவலகத்திலும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் மேற்கொள்ளப்படலாம். மாற்றுவழியாக இலங்கை வங்கியின் (பத்தரமுல்ல கிளை) 7042710 எனும் கணக்கிலக்கத்திற்கு கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் வைப்புச் செய்யலாம்.
8. மேலதிக தகவலுக்கு 011-2864788 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக மற்றும் 011-2868285, என்ற தொலைநகலூடாக (ஒப்பந்தங்கள்) பிரதான பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளலாம்.

பொறி. (திருமதி) K.G.S. குமுதினி,
கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்,
கட்டிடங்கள் திணைக்களம், 2 ஆம் மாடி, ''செத்சிரிபாய", பத்தரமுல்ல.
www.buildings.gov.lk

அயர்லாந்தில் கல்வி கற்க இந்திய மாணவர்களுக்கு அழைப்பு

உயர்கல்விக்கு பொருத்தமான இடம் என தூதுவர் தெரிவிப்பு

இந்திய மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் அயர்லாந்துக்கு வர வேண்டும் என்றும் உயர் கல்விக்கான செலவு பிரிட்ஷ், அமெரிக்காவை விட டப்ளினில் குறைவு என்றும் கூறி, இந்தியாவுக்கான அயர்லாந்து தூதுவர் பிரண்டன் வார்ட் 'த பிரிண்ட்' ஊடகத்துக்கு அளித்த பேட்டியில் இந்திய மாணவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த வருடம் அதிக அளவில் இந்திய மாணவர்களுக்கு உயர் கல்விக்காக விசா வழங்கிய நாடாக திகழ்கின்ற போதிலும் வெளிநாடுகளில் கல்வி பெறும் மொத்த மாணவர் தொகையில் அயர்லாந்தில் கல்வி கற்கும் இந்திய மாணவர் தொகை ஒரு சதவீதத்துக்கும் சற்று அதிகம்.

அயர்லாந்தின் தலைநகரான டப்ளினில் இந்திய உயர்கல்வி மாணவர்களின் கற்கைக்கு போதிய வசதிகள் காணப்படுவதாகவும் ட்ரினிடி கல்லூரி மற்றும் யுனிவர்சிட்டி கல்லூரி என்பன பிரசித்தமானவை எனவும் தன் செவ்வியில் குறிப்பிட்டுள்ள தூதுவர் பிரண்டன் வார்ட், 102 நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் டப்ளினில் கல்வி கற்பதாகவும் பெரும்பாலான மாணவர்கள் இந்தியாவையும் சீனாவையும் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்துள்ளார். முதுகலை மற்றும் கலாநிதி கற்கைகளுக்காகவே அதிக அளவில் இந்திய மாணவர்கள் டப்ளின் வருவதாகவும் பட்டப்படிப்பு மாணவர்கள் அதிக அளவில் வரவேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ள அவர், நாட்டின் மொத்த சனத்தொகையில் 50 ஆயிரம் பேர் இந்தியர்கள் என்றும் இந்திய கோவில்கள், உணவகங்கள், பொழுது போக்கு கழகங்கள், பலசரக்குக் கடைகள் என்ற இந்தியச் சூழல் டப்ளினில் காணப்படுவதாகவும் விவரித்துள்ளார்.

இந்திய – சீன எல்லைப் பகுதியில் பாரிய விமான யுத்தப் பயிற்சி

பெப்ரவரியில் நடந்த இந்தியா ஏற்பாடு

கடந்த டிசம்பர் ஒன்பதாம் திகதி அருணாசல பிரதேச தவாங் பகுதியில் இந்திய – சீன எல்லையோரமாக இரு தரப்பு படையினர் மத்தியில் ஏற்பட்ட மோதல்களையடுத்து கடந்த மாதம் வடகிழக்கு பிராந்தியத்தில் இந்திய விமானப்படை யுத்தப் பயிற்சிகளில் ஈடுபட்டது. இதையடுத்து அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் 5ம் திகதி வரை மற்றொரு பாரிய அளவிலான போர் விமான பயிற்சி நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக இந்திய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இப் பயிற்சியில் ஏர்குலஸ் விமானங்கள், சினூக் பளு தூக்கி ஹெலிகள், அப்பாச் தாக்குதல் ஹெலிகள் ஈடுபடுத்தப்படும் என மேலும் விவரங்கள் வெளியாகியுள்ளன. இந்தியாவின் கிழக்கு பிராந்திய எல்லைப் பகுதியில் சீன விமானங்களின் நடமாட்டம் அவதானிக்கப்பட்டதையடுத்து இந்திய விமானப்படை சுக்கோய் ரக ஜெட் யுத்த விமானங்களை எல்லைப் பாதுகாப்புக்காக பயன்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இதே சமயம் கிழக்கு லடாக் எல்லைப்புறமாக 50 ஆயிரத்துக்கும் அதிகமான படையினரையும் கனரக ஆயுதங்களையும் சீனா குவித்து வருகிறது. சிக்கிம் மற்றும் அருணாசல பிரதேச எல்லையோரமாக சீன இராணுவம் படை குவிப்பை நடத்தி வருவதோடு 4500 துருப்பினரைக் கொண்ட இரண்டு மேலதிக படைப்பிரிவுகளை நகர்த்தி இருப்பதாக பாதுகாப்பு அமைச்சு தகவல் தெரிவித்துள்ளது.

இதே சமயம், சிக்கிம், பூட்டான் மற்றும் திபெத் ஆகிய மூன்று நாடுகளின் எல்லைகள் சந்திக்கும் டொக்லாம் பகுதியில் சீன இராணுவம் அடிப்படை கட்டுமானங்களை எல்லையோரமாக அமைத்து வருகிறது. டொக்லானில் சீனா பாதை அமைக்க, முன்னர் முற்பட்டபோது இந்திய இராணுவம் அதைத் தடுத்தது.இப் பின்னணியிலேயே இப் பிராந்தியத்தில் இந்தியா பாரிய விமான பயிற்சியை நடத்தவுள்ளது.

2011 இலக்கம் 40 என்ற சட்டத்தின் திருத்தப்பட்டதும் 2006 இலக்கம் 5 என்ற நிதிமோசடியைத் தடுக்கும் சட்டத்தின் 8(3) பிரிவின் பிரகாரம் விடுக்கப்படும் அறிவித்தல்

2022.10.07ஆம் திகதி எம்பிலிபிட்டிய மேல் நீதிமன்றத்தினால் வழக்கு இலக்கம் SPL/01/2022 இன் கீழ் 2011 இலக்கம் 40 என்ற சட்டத்தின் திருத்தப்பட்ட 2006 இலக்கம் 5 என்ற நிதி மோசடியை தடை செய்யும் சட்டத்தின் 8(2)(ஆ) பிரிவின் பிரகாரம் இலக்கம் CAF 9998 இலக்கம் CBA 4775 மற்றும் இலக்கம் PF4717 என்ற மோட்டார் வாகனத்திற்கு விதிக்கப்பட்ட செல்லுபடியற்றதாக்கும் கட்டளையானது, 2023.01.05 முதல் செல்லுபடியாகும் வண்ணம் நீடிக்கப்பட்டு உள்ளதுடன் மூன்றாம் தரப்பினருக்கு வசதிகளை வழங்குவதற்காக அறிந்து கொள்வதற்காக பிரசுரிக்கப்படுகின்றது.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

பாதுகாப்பு அலுவலர் ஒருவரின் சேவையைப் பெற்றுக் கொள்ளல்

பிரதான அலுவலகம் – கொழும்பு 10

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் இல. 257, சிரிதம்ம மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரியிலமைந்துள்ள பிரதான அலுவலகத்திற்குப் பாதுகாப்பு அலுவலரொருவரின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக அனுபவமுள்ள பாதுகாப்பு அலுவலகர்களை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கனிஷ்ட பாதுகாப்பு அலுவலரொருவருக்காக 2023.02.14 அன்று பி.ப. 2.00 இற்கு அல்லது அத்தினத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் 'பாதுகாப்பு அலுவலரின் சேவை வழங்கலிற்கான விண்ணப்பம்' எனக் குறிப்பிட்டு முத்திரையிடப்பட்ட விண்ணப்பங்கள், 'பொது முகாமையாளர், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், இல. 257, சிரிதம்ம மாவத்தை, கொழும்பு 10' என்ற முகவரிக்கு முன்வைக்குமாறு அறிவிக்கப்படுகின்றது. மேலதிக விபரங்களிற்கு நிருவாகப் பிரிவு இ.அ.பெ.கூ. 011-5875985.

தலைலர் - பெறுகைக்குழு
இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,
இல. 257, சிரிதம்ம மாவத்தை, கொழும்பு -10.

2023.01.31

எல்பிட்டிய மாவட்ட நீதிமன்றத்தில்

சிவில் வழக்கு ஏற்பாடுகள் கோவையின் 16வது விதிகளின் கீழ் அறிவித்தல்

எல்பிட்டிய பிளாண்டேஷன் பிஎல்சி,
இல: 305, வொக்ஷல் வீதி,
கொழும்பு-02

வழக்கு இலக்கம் : 1062/L
வகை : காணி
பெறுமதி : ரூபா. 3,000,000.00

முறைப்பாட்டாளர்

- எதிராக -

01. சம்பத் குமார ரணசிங்க,
தலைவர், ரங்கிரி அபிவிருத்தி மன்றம்
கெடன்தோல, தல்கஸ்பே

02. நிஷாந்த கொடிதுவக்கு,
செயலாளர்,
ரங்கிரி அபிவிருத்தி மன்றம் கெடன்தோல,
தல்கஸ்பே

03. கே.ஜி.சுமித்,
பொருளாளர்,
ரங்கிரி அபிவிருத்தி மன்றம் கெடன்தோல,
தல்கஸ்பே

- எதிராளிகள் -

மேலே குறிப்பிடப்பட்ட முறைப்பாட்டாளரினால், மேலே குறிப்பிடப்பட்ட எதிராளிகளுக்கு எதிராக தங்களது முறைப்பாட்டை இந்த நீதிமன்றத்திற்கு முன்வைத்து முறைப்பாட்டில் கோரியிருப்பது போன்று, எதிராளிக்கு எதிராக கீழே குறிப்பிடப்படும் நிவாரணங்களை பெற்றுத் தரும்படி கோரிக்கை விடுத்திருப்பதாக, மேலே பெயர் குறிப்பிடப்பட்ட 1வது, 2வது மற்றும் 3வது எதிராளிகள், தல்கஸ்பே, கொடன்தோல ரங்கிரி அபிவிருத்தி மன்றம் மற்றும் பொதுவான உறவுகளைக் கொண்டிருக்கும் ரங்கிரி அபிவிருத்தி மன்றத்தின் சகல உறுப்பினர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

முறைப்பாட்டாளரினால் எதிராளிகளுக்கு எதிராக கோரப்படும் நிவாரணங்கள்

i. கீழே குறிப்பிடப்படும் 1வது ஆதன இடாப்பில் விபரிக்கப்பட்டுள்ள காணியில் சட்டரீதியான குத்தகைதாரர் இந்த முறைப்பாட்டாளர் என தீர்வொன்றைப் பெற்றுத் தரும்படியும்,

ii. கீழே குறிப்பிடப்படும் 2வது ஆதன இடாப்பில் விபரமாகக் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் சட்டரீதியான குத்தகைதாரர் இந்த முறைப்பாட்டாளர் என தீர்ப்பொன்றைப் பெற்றுத் தரும்படியும்,

iii. கீழே குறிப்பிடப்பட்டுள்ள 2வது ஆதன இடாப்பில் விபரிக்கப்பட்டுள்ள காணியில் 1,2 மற்றும் 3வது எதிராளிகள் அவர்களது முகவர்கள், ஊழியர்கள் மற்றும் அவர்களுக்குக் கீழ் உரிமை கொண்டாடும் சகலரும், ரங்கிரி அபிவிருத்தி மன்றம் எனப்படும் அமைப்பின் சகல உறுப்பினர்களும் மற்றும் அவர்களின் முகவர்கள், ஊழியர்கள் மற்றும் அவர்களுக்கு கீழ் இருக்கும் சகலரையும் வெளியேற்றி சொத்தை வெறுமையாக்கி மற்றும் பிணக்கு பிசவில்லாத ஆட்சியுரிமையை முறைப்பாட்டாளருக்கு பெற்றுத்தரும்படி உத்தரவிடும்படியும்,

iv. 1, 2 மற்றும் 3வது எதிராளிகள் மற்றும் ரங்கிரி அபிவிருத்தி மன்றம் என்ற பெயருடைய சங்கத்தின் உறுப்பினர்களால் முறைப்பாட்டாளரின் குத்தகை உரிமைகளுக்கு சங்கடங்கள் ஏற்படுத்தும் விதமான மற்றும் கீழே 2வது ஆதன இடாப்பில் விபரிக்கப்பட்டுள்ள காணியினுள் சட்டவிரோதமாக கட்டிடமொன்றை நிர்மாணித்து முறைப்பாட்டு நிறுவனத்திற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள இழப்புகளுக்காக மூன்று மில்லியன் (ரூபா. 3,000,000.00) ரூபாவிற்கான பணத்தொகை மற்றும் 2022.05.29ந் திகதியிலிருந்து கீழே 2வது ஆதன இடாப்பில் விபரிக்கப்பட்டுள்ள சொத்தை வெறுமை மற்றும் பிணக்கு பிசவில்லாத ஆட்சியுரிமையை முறைப்பாட்டாளருக்கு பெற்றுக் கொடுக்கும் வரை தினமொன்றிற்கு ஐந்தாயிரம் ரூபா (ரூபா. 5000.00) வீதம் இழப்பீட்டுத் தொகையை ரங்கிரி அபிவிருத்தி மன்றம் மற்றும் அதன் உறுப்பினர்களின் சார்பில், 1, 2 மற்றும் 3வது எதிராளிகளிடமிருந்து அறவிட்டுத் தரும்படியான உத்தரவையும்,

v. இந்த வழக்கு ரங்கிரி அபிவிருத்தி மன்றத்தின் உறுப்பினர்களுக்காக அதன் தலைவர், செயலாளர், மற்றும் பொருளாளர் முறையே, 1, 2 மற்றும் 3வது எதிராளிகளுக்கு எதிராக இந்த வழக்கைத் தொடுத்து நடாத்திச் செல்வதற்கு சிவில் வழக்கு ஏற்பாடுகள் கோவையின் 16வது நிபந்தனைகளின் கீழ் முறைப்பாட்டாளருக்கு அனுமதியைப் பெற்றுத் தரும்படியான உத்தரவை விடுக்கும்படியும்,

vi. இந்த வழக்கு சம்பந்தமாக ரங்கிரி அபிவிருத்தி மன்றத்தின் சகல உறுப்பினர்களுக்கும் அறிவிப்பதற்காக, சிங்கள-தமிழ் மற்றும் ஆங்கில தேசிய பத்திரிகைகளில் அறிவித்தலொன்றை இந்த நீதிமன்ற பதிவாளர் மூலம் வெளியிடுவதற்குரிய உத்தரவைப் பெற்றுத்தரும்படியும்,

vii. கீழே 2வது ஆதன இடாப்பில் விபரிக்கப்பட்டுள்ள காணி, கீழே 1வது ஆதன இடாப்பில் விபரிக்கப்பட்டுள்ள காணியின் ஒரு பகுதியென அளவையிட்டு காட்டுவதற்காக குழுவொன்றை நியமிக்க உத்தரவிடும்படியும்,

viii. சிவில் வழக்கு ஏற்பாடுகள் 35(1) நிபந்தனைகளின் படி, இந்த வழக்கைத் தொடுத்து நடாத்திச் செல்வதற்கான அனுமதியைப் பெற்றுத் தரும்படியும்,

ix. வழக்குச் செலவு மற்றும் இந்த நீதிமன்றம் சாத்தியமெனக் கருதும் வேறு நிவாரணங்களையும் பெற்றுத் தரும்படியுமாகும்.

மேலும், இந்த வழக்கு 2023ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24ந் திகதி மு.ப 9.30 மணிக்கு இந்த நீதிமன்றத்திற்கு அழைக்கப்படவிருக்கிறது என இத்தால் மேலும் அறிவிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிடப்பட்ட முதலாவது ஆதன இடாப்பு

தென் மாகாணம், காலி மாவட்டம், பெந்தோட்ட வலல்லாவிட்டி கோரளை, தல்கஸ்பே கிராமத்தில் அமைந்துள்ள "கெடன்தோல வத்த" என்ற தோட்டத்திற்கு சேவியர் ஜெனரல் அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 25088060 இல: குறிப்பிடப்பட்டுள்ள கோனபாவுலஹென மற்றும் வெவெல்தெனிய ஹேன என்ற பெயருடைய காணிக்கு எல்லையாக: வடக்கிற்கு, ஆரம்ப வரைபட இல: 8315 என்ற வரைபடத்தில் லொட் 2447 1/2 மற்றும் அரசாங்க காணி, கிழக்கிற்கு: அரசாங்க காணி மற்றும் வெவெல்தெனிய தோல, தெற்கிற்கு: வீதிக்காக ஒதுக்கப்பட்ட காணி மற்றும் ஆரம்ப வரைபட இல: 8315 என்ற வரைபடத்தில் லொட் சு 592, மேற்கிற்கு: ஆரம்ப வரைபட இல: 8315 என்ற வரைபடத்தில் லொட் 24447 1/2 மற்றும் விஸ்தீரணம் கொண்ட (ஏ103-ரூ3) விசாலமுடைய காணி மற்றும் அதனுள் அமைந்துள்ள அனைத்து பயிர்ச்செய்கை மற்றும் அனைத்து சகலதும்.

மேற்குறிப்பிடப்பட்ட இரண்டாவது ஆதன இடாப்பு

தென் மாகாணம், காலி மாவட்டம், பெந்தோட்ட வலல்லாவிட்டி கோரளை, எல்பிட்டிய பிரதேச சபையில் தல்கஸ்பே கிராமத்தில் அமைந்துள்ள "கெடன்தோல எஸ்டேட்" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம்பெற்ற நிளஅளவையாளர் பி.பி.எல்.பத்மசிறி அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இல: 1533/2017 மற்றும் 2017.12.22ந் திகதியுடைய வரைபடத்தில் லொட் A என்ற காணிக்கு எல்லையாக: வடக்கிற்கு: இக்காணி மறுசீரமைக்கப்பட்ட கொமிஷன் சபை மூலம் உரிமை சொல்லும் கெடன்தோல எஸ்டேட் பெயருடைய காணி, கிழக்கிற்கு: இக்காணி மறுசீரமைக்கப்பட்ட கொமிஷன் சபை மூலம் உரிமை சொல்லும் கெடன்தோல எஸ்டேட் பெயருடைய காணி, தெற்கிற்கு: வீதி அபிவிருத்தி சபையின் வீதி, மேற்கிற்கு: வீதி மற்றும் காணி மறுசீரமைப்பு கொமிஷன் சபை அவர்களின் உரிமை சொல்லும் கெடன்தோல எஸ்டேட் பெயருடைய காணியின் விஸ்தீரணம் கொண்ட (ஏ0-ரூ0- பே36) விசாலமுடைய காணி மற்றும் அதனுள் அமைந்துள்ள அனைத்து பயிர்ச்செய்கை மற்றும் அனைத்து சகலதும்.

நீதிமன்ற கட்டளையின் படி பதிவாளர்

2023ம் ஆண்டு ஜனவரி மாதம் 24ந் திகதி

சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி பகிரங்க ஏல விற்பனை

சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி மூலம் பெற்றுக்கொண்ட தங்கக் கடனில் ஈடு வைக்கப்பட்ட கால எல்லைக்குள் பணத்தை செலுத்தத் தவறியதால், அந்தத் தங்கக் கடன் வசதிக்காக பத்திரங்களாக அடமானம் வைக்கப்பட்ட தங்கப் பொருட்கள் கீழ் குறிப்பிடப்பட்ட திகதிகளில் மு.ப. 10.00 க்கு பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

திகதி மற்றும் ஏல விற்பனை இடம்

திகதி : **21/02/2023**
இல.343, மாத்தளை வீதி, தம்புள்ளை.
இல.328, ரஜின சந்தி, தம்புத்தேகம.
இல.05, மைத்திறிபால சேனநாயக்க மாவத்தை, அநுராதபுரம்.
இல.80, யாழ்ப்பாணம் வீதி, மதவாச்சி
இல.28, 30, இரண்டாம் குறுக்குத் தெரு, வவுனியா.
இல.86, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
இல.34, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.
இல.498, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 03.
இல.163C/1/1, கொழும்பு வீதி, நீர்கொழும்பு.
விக்டோரி கட்டிடம், சிலாபம் வீதி, வென்னப்புவ.
இல.179/1/1, ஹெட்டிபொல வீதி, குளியாப்பிட்டி.
இல.65, மாஹவ வீதி, நிக்கவரட்டி
இல.42, மிஹிந்து மாவத்தை, குருணாகல்
இல.140/B, கொழும்பு வீதி, குருணாகல்.
இல.311/J, ரன்வல சந்தி, கேகாலை.
இல.103/C, நீர்கொழும்பு வீதி, கிரியுள்ள.

திகதி : **22/02/2023**
இல.14, மங்கல வீதி, கம்பஹா.
இல.837E, தலங்கம வடக்கு, மாலபே.
இல.579, காலி வீதி, வெள்ளவத்தை.
இல.348, காலி வீதி, பாணந்துறை.
இல.362, கோட்டை வீதி, ராஜகிரிய.
இல.34, ஹொரன வீதி, பிலியந்தல.
இல.188, பிலியந்தல வீதி, மஹரகம.
இல.173, இரத்தினபுரி வீதி, ஹொரன.
இல.546, காலி வீதி, தெற்கு களுத்துறை, களுத்துறை.
இல.29, ஸ்டேசன் வீதி, தெஹிவளை.
இல.30A, நாவல வீதி, நுகேகொட.
இல.106/1, துட்டுகெமுனு வீதி, கொஹுவளை.

திகதி : **23/02/2023**
இல.64, மாகொல வீதி, கிரிபத்கொடை.
இல.493, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
இல.120, நீர்கொழும்பு வீதி, ஜாஎல
இல.143 J, கண்டி வீதி, கடவத

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

THE WORLD BANK

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் - கமத்தொழில் அமைச்சு

IDA Credit No.: 5873 LK

பெறுகை அறிவித்தல்

வவுனியா, அம்பாறை மற்றும் பதுளை மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களில் சோளம் மற்றும் வாழை பயிர்ச்செய்கைத் திட்டங்களுக்கு நீர்ப்பாசன முறைமைகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்

2023 ஜனவரி 11ஆம் திகதிய தினமின மற்றும் டெய்லி நியூஸ் பத்திரிகைகளில் அதிகாரத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட பெறுகை அறிவித்தலைக் குறிக்கின்றது.

தொழில்நுட்ப மாற்றங்களைக் கருத்திற்கொண்டு, பெறுகை அறிவித்தல் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

1. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும் காலம் 2023 பெப்ரவரி 7ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதுடன் கேள்வி கோரல்கள் முடிவுறுத்தப்பட்டதும் உடனடியாக 2023 பெப்ரவரி 7ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு கேள்விப்படிவங்கள் திறக்கப்படும்.
2. கேள்விப்படிவங்களின் செல்லுபடிக் காலம் 2023-03-29ஆம் திகதியாகும் என்பதுடன் கேள்விப் பிணை முறி 2023-04-19ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
3. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை 2023 பெப்ரவரி 7ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையான காலத்தில் 0777419521 எனும் தொலைபேசி இலக்கத்தில் கமத்தொழில் அமைச்சு, விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம், பெறுகை திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
4. மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது,

தலைவர்,
செயற்றிட்ட பெறுகைக் குழு,
விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,
இல. 123/2, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல.
தொலைபேசி: 0112696086 அல்லது 0777419521

திகதி: 2023-01-29.

கேள்விகோரல் அழைப்பு

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு
தென்னைப் பயிர்ச்செய்கை சபை

தென்னங்கன்று போக்குவரத்து செய்வதற்கான விலைமனுக்கோரல் - 2023

பெறுகை இலக்கம் : E/7/G/CP/TRA/2023

01. தென்னை பயிர்ச்செய்கை சபை சார்பாக திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவரால் 2023ஆம் ஆண்டிற்காக உதவுத்தொகை நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஏனைய விசேட நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பையிலிடப்பட்ட தென்னங்கன்றுகள்/ தரைக்கன்றுகளை கீழ்க்காணும் மாவட்டங்களுக்கு மற்றும் வெளியிடங்களுக்குப் போக்குவரத்து செய்வதற்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடம் இருந்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

தொடர் இல	பிரதேச அலுவலகம்	முகவரி	தொலைபேசி இலக்கம்	மாவட்டம்
01	யாழ்ப்பாணம்	9A, வீதி, தர்மகேனர் பளை, கிளிநொச்சி	021-2284501	யாழ்ப்பாணம்/கிளிநொச்சி/முல்லைத்தீவு
02	வவுனியா	இல.25, பத்தினியார், மகிலன்குளம், தாண்டிக்குளம், வவுனியா.	024-2050344	வவுனியா/மன்னார்
03	குருநாகல்	வெஹர, குருநாகல்	037-2222534	குருநாகல்
04	குளியாப்பிட்டிய	இல.20, பன்னலை வீதி, குளியாப்பிட்டிய	037-2281169	குருநாகல்
05	மாரவில	முஹுதுகட்டுவ, மாரவில	032-2254237	புத்தளம்
06	மாத்தளை	கண்டி வீதி, கொஹொம், பிலிவெல, மாத்தளை	066-2222047	கண்டி, மாத்தளை, நுவரெலியா
07	பொலன்னறுவை	பொலன்னறுவை புதிய நகரம்	024-2222377	பொலன்னறுவை
08	அம்பாறை	தர்மபால மாவத்த கச்சேரி முன்னால் அம்பாறை	063-2222477	அம்பாறை
09	மொனராகலை	ஹுலங்காவ தெற்கு, மொனராகலை	055-2276058	மொனராகலை, பதுளை
10	களுத்துறை	நாகொடை, களுத்துறை	034-2222732	களுத்துறை/கொழும்பு
11	இரத்தினபுரி	புதிய நகரம், இரத்தினபுரி	045-2228561	இரத்தினபுரி
12	காலி	லபுதுவ, அக்மீமன, காலி	091-2234501	காலி
13	மாத்தறை	331/9, அநாகரிக தர்மபால மாவத்த, நூபெ, மாத்தறை	041-2222060	மாத்தறை
14	ஹம்பாந்தோட்டை	27, தங்கல்ல வீதி, ஹம்பாந்தோட்டை	047-2220144	ஹம்பாந்தோட்டை
15	அநுராதபுரம்	111ம் கட்டம், தஹய்யா கமசந்தி, அநுராதபுரம்	025-2222543	அநுராதபுரம்
16	மட்டக்களப்பு	மைலம்பாவேலி தாத்தாமுனை, மட்டக்களப்பு	065-2240103	மட்டக்களப்பு
17	கம்பஹா	பிரண்டியமுல்ல, கம்பஹா	033-2222037	கம்பஹா
19	கேகாலை	கண்டி வீதி, கரண்டுப்பன, கேகாலை	035-2222120	கேகாலை
20	திருகோணமலை	கும்புறுப்பிட்டி, திருகோணமலை	026-2054018	திருகோணமலை

02. இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற தகைமையுள்ள கேள்விதாரர்களுக்கு தென்னை பயிர்ச்செய்கை சபையின் மேலே தரப்பட்டுள்ள பிரதேச அலுவலகங்களிலிருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள முடிவதுடன், மேற்படி பிரதேச அலுவலகங்களில் இருந்து மற்றும் தலைமையகத்தில் இருந்து வாரத்தின் அலுவலக நாட்களில் 2023.01.31 முதல் 2023.02.21 மு.ப.10.00 முதல் பி.ப.3.00 வரை கேள்விகோரல் படிவங்கள் உட்பட விபரப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

03. ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களால் எழுத்துமூல வேண்டுதலை சமர்ப்பித்து, மீளளிக்கப்படாத ரூ.1000.00 தொகையொன்றை பயிர்செய்கை சபையின் மேலே தரப்பட்டுள்ள பிரதேச அலுவலகத்தின் காசாளரிடம் அல்லது தலைமையகத்தின் காசாளரிடம் செலுத்திய பின்பு சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள குறித்த கேள்விகோரல் ஆவணத்தொகுதியை 2023.02.21ம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

04. குறித்தவாறு பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள், போக்குவரத்து சேவை வழங்குவதற்கு எதிர்பார்க்கும் மாவட்டத்திற்கு உரித்தான மேலே தரப்பட்டுள்ள தென்னை பயிர்ச்செய்கை சபையின் குறித்த பிரதேச அலுவலகத்திற்கு 2023.02.22 பி.ப.2.00 இற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். 2023.02.22 பி.ப.2.00 இற்கு கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் குறித்த பிரதேச அலுவலகத்தில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படுவதுடன், கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவருக்கு அவ்வேளையில் சமுகமளிக்கலாம்.

05. உங்களது கேள்வி ஆவணங்களை பொறியிடப்பட்ட உறையில் இட்டு, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தென்னங்கன்று போக்குவரத்து செய்வதற்கான விலைமனுக்கோரல் - 2023" என்று குறிப்பிட்டு, போக்குவரத்து சேவையை வழங்குவதற்கு எதிர்பார்க்கும் மாவட்டத்திற்கு சொந்தமான மேலே தரப்பட்டுள்ள தென்னை பயிர்ச்செய்கை பிரதேச அலுவலகத்தின் முகவரிக்கு பதிவுத்தபாலில் 2023.02.22 பி.ப.2.00 இற்கு முன்பு கிடைக்குமாறு அல்லது 2023.02.22 பி.ப.2.00 இற்கு முன்பு குறித்த பிரதேச அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

மேலதிக விபரங்கள்

தென்னை பயிர்ச்செய்கை சபை
9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை
தொ.பே - 011-2861331, பெக்ஸ் : 0112861332

பெயர் மாற்றம்

வரிப்பத்தான் சேனை 01ம் பிரிவு சாலி வீதி இல: 71/D இல் வசிக்கும் **மொஹமது சாலி மொஹமது சலீம்** ஆகிய நான், எனது பெயரை இன்று முதல் **மொஹம்மட் சலீம்** என பெயர் மாற்றிக் கொண்டேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் புதிய பெயரை பயன்படுத்துவேன் எனவும் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

- மொஹம்மட் சலீம் -

பெயர் மாற்றம்

கொழும்பு 06 மயூராபிளேஸ் லக்முத்து செவன 1A/F9/03 **கல்பனா தேவி குமார்** ஆகிய நான் பிறப்புச் சான்றிதழில் உள்ள **கல்பக தேவி** என்ற எனது பெயரை **கல்பனா தேவி குமார்** என மாற்றம் செய்வதாகவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் **கல்பனா தேவி குமார்** என்ற பெயரையே பாவிப்பதாகவும் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் மக்களுக்கும் அறிவித்துக் கொள்கிறேன்.

கல்பனா தேவி குமார்

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

மாகாண கல்வி திணைக்களம்
வடமத்திய மாகாணம்
வேன் வாகனமொன்றை வாடகைக்கு பெற்றுக்கொள்ளல்

வடமத்திய மாகாண கல்வித்திணைக்களத்தின் பாடசாலை புற வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டங்களிற்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக வாடகை அடிப்படையில் டீசல் வேன் வாகனமொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக திணைக்களப் பெறுகைக்குழுவினால் 2023.01.31 முதல் 2023.02.20 வரை முத்திரையிடப்பட்ட கேள்வி விலைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

02. பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளிற்கமைவாக வேன் வாகனமொன்றை வழங்கக்கூடிய வழங்குநர்கள் தம் வாகனத்தின் பதிவுச்சான்றிதழைச் சமர்ப்பித்து, மீளளிக்கப்படாத ரூபா 500 இற்கான தொகையை, மாகாண கல்வித் திணைக்களத்தின் கணக்குப்பிரிவல் செலுத்தி 2023.01.31 முதல் 2023.02.20 அன்று மு.ப.10.00 வரை கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்து அவற்றை கொள்வனவு செய்துகொள்ளலாம்.

i. இருவழி இயக்கமுள்ள வளிச்சீராக்கியைக் கொண்டிருத்தல்
ii. குறைந்தபட்சம் 12 இருக்கைகளைக் கொண்டிருத்தல்
iii. வாகனத்தின் முழுமையான காப்புறுதிக்காப்பீடு மற்றும் பதிவுச்சான்றிதழை கொண்டிருத்தல்
iv. வாகனத்தின் ஆரம்பப் பதிவு ஆண்டு, உயர்ந்தபட்சம் 10 ஆண்டு காலத்திற்கு உட்பட்டதாக இருத்தல்.
v. மாதமொன்றிற்கு குறைந்தபட்சம் கி.மி.2000 கி.மீ இற்காகக் கொடுப்பனவு வழங்கப்படுவதுடன், மேற்படும் ஒவ்வொரு கி.மீற்றருக்கும் மேலதிக கொடுப்பனவு செலுத்தப்படும்.
vi. அனைத்து சேவைகளும் மற்றும் திருத்த வேலைகளும் வாகன உரிமையாளரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
vii. வாகனத்தின் பிழைகள் ஏற்படின், வழங்குநர், அதற்கு ஈடான வசதிகளை கொண்ட மாற்று வாகனமொன்றை வழங்குதல் வேண்டும்.
viii. சமர்ப்பிக்கப்படும், சாரதிகளற்ற கேள்விகளிற்காகவும் கி.மீற்றறொன்றிற்கான கேள்வி விலைகள் முன்வைக்கப்படல் வேண்டும்.
ix. சாரதிக் கொடுப்பனவு அல்லது தங்குமிடவசதிகள் வழங்கப்பட மாட்டாது
x. அவசர வேளையில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படாதிருப்பினும், காரணிகளிற்காக முழு நாட்டிலும் அல்லது வடமத்திய மாகாண அதிகாரப்பிரிவில் அல்லது முழுமையாக மூடப்படும் எவ்வேளையிலும், முன்னறிவித்தல் விடுக்கப்பட்டதன் பின்னர், போக்குவரத்துச் சேவையை பெற்றுக்கொள்ளல் தற்காலிகமாக நிறுத்துவதற்கு மாகாண கல்விப் பணிப்பாளருக்கு அதிகாரம் உண்டு. அவ்வாறான வேளைகளில் 2000 கி.மீ வீதப்படி கணக்கிட்டு ஓடிய நாட்களின் அடிப்படையில் மாத்திரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

03. அனைத்து கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம், உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட கேள்வி ஆவணங்கள், 2023.02.20 அன்று பி.ப.2.00 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, "தலைவர், திணைக்களப் பெறுகைக்குழு, மாகாண கல்வித் திணைக்களம், வடமத்திய மாகாணம், அநுராதபுரம்" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது நேரடியாக கொண்டுவந்து ஒப்படைத்தல் மேற்கொள்ளலாம். நேரடியாக ஒப்படைப்பதானால், மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் (நிதி) அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் வேளை முடிவடைந்ததும் உடனடியாக, கேள்விகள் திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளித்து இருக்கலாம்.

எஸ்.எம்.டப்ளியு.சமரகோன்
தலைவர், திணைக்கள பெறுகைக்குழு
மாகாண கல்வித் திணைக்களம்
வடமத்திய மாகாணம்

மாகாண கல்வித் திணைக்களம்
வட மத்திய மாகாணம்

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகார சபை

விலைமனுக்களுக்கான அழைப்பு

இலங்கையின் அதிவேக நெடுஞ்சாலை வருமானத்தினால் நிதியிடப்பட்டது தெற்கு அதிவேக நெடுஞ்சாலை, கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை மற்றும் வெளிச்சுற்றுவட்ட பெருந்தெருக்களின் அதிவேக நெடுஞ்சாலை இயக்கம், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவிற்கு பயணிகள் வாகனங்களை வாடகை விடுவதற்கான அழைப்பு ஒரு வருட காலத்திற்கு - 2023/2024

தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையூடாக மேற்படி பெறுகைக்காக (கீழே அட்டவணையில் உள்ள வாகனங்கள்) தகைமையும் தகுதியும் உள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை வீதி அபிவிருத்தி அதிகார சபை (RDA) இன் சார்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபை பெறுகைக் குழுவின் தலைவர் பெற்றுக் கொள்வார்.

இல.	ஒப்பந்த இல மற்றும் பெயர்	வாகனம்	எண்ணிக்கை
01	RDA/EOM&M/PRC/2003/MECH/01 12 மாத காலத்திற்கு 2023/2024 தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் EOM&M பிரிவிற்கு பயணிகள் வாகனங்களை வாடகைக்கு விடுதல்	வேன் - 8 ஆவசனங்கள் அல்லது அதற்கு மேல்	21
		வேன் 5 ஆசனங்கள்	02
		குரூ கெப்	14
		பிச்சுப் டபிள் கெப்	03
		கார்	01
